# எனது பூங்கா

*ஆசிரியர்*

## பொ. திருகூடசுந்தரம், *எம். ஏ., பி. எல்.,*

1891-ம் ஆண்டில் பிறந்தவர். 5-வது பாரம் முதலே முதற்பரிசு பெற்ருர். எம். ஏ. இல் பல்கலைக் கழகத் தங்கப் பதக்கம் பெற்ருர். 1921-ல் வக்கீல் வேலையை விட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். திருநெல்வேலி ஜில்லாவிலும் செட்டி நாட்டிலும் காந்தி இயக்கத்தை வேரூன்றச் செய்தார். காந்தியடிகளின் கட்டுரைகளை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர். திருநெல்வேலி நகர சபையில் அங்கத்தினராகவும், தேவகோட்டை நகரசபையில் வைஸ் சேர்மனுகவும் இருந்து சமூக சேவை செய்தார். தீண்டாமை விலக்குக்குத் தீவிரமாக உழைத்தார். அவரும் அவர் மனைவியாரும் நாகர் கோவிலில் தீண்டாமை விலக்குச் சங்கம் நிறுவி ஆலயப் பிரவேசத்துக்கு அடிகோலினர். தமிழ் ஹரிஜன் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் பாண்டித்திய முடையவர். சென்னை செனட் சபையில் அங்கத்தினராக இருந்தார். தமிழில் சொந்தமாக பத்து நூல்களும் மொழி பெயர்ப்பாகப் பத்து நூல்களும் எழுதியுள்ளார். அவை அறிவும் இன்பமும் பெறவிரும்புவோர், படிக்க வேண்டிய நூல்கள். சென்னை சர்க்கார் மூன்று நூல்களுக்குப் பரிசு அளித்துள்ளார். சிறந்த கட்டுரையாளர். விஞ்ஞானம் முதலிய கடினமான பொருள்களை எளிதில் எல்லோருக்கும் விளங்குமாறு எழுதக் கூடியவர். இப்பொழுது கலைக் களஞ்சியக் கூட்டாசிரியர். எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையுமுடையவர்.

# எனது பூங்கா

ஆசிரியர்

**பொ. திருகூடசுந்தரம்,** எம். ஏ., பி. எல்.,

சென்னை பல்கலைக் கழகத் தங்கப் பதக்கம் பெற்றவர்

தமிழ்க் கலைக் களஞ்சியக் கூட்டாசிரியர்

—★—

திருவிதாங்கூர் பல்கலைக் கழகம்

பேராசிரியர்

**எஸ். வையாபுரிப் பிள்ளை,** பி. ஏ., பி. எல்.

முன்னுரை

**காந்தி நிலையம்**

**தியாகராய நகர் :: சென்னை-17.**

**விலை ரூ. 2**

இருந்தன. ஒழுக்கத்தை வற்புறுத்துதலே இவை மேற்கொண்ட நோக்கம். ஜனவிநோதினி முதலிய பழைய பத்திரிகைகளில் இவ்வகைக் கட்டுரைகளை நிரம்பக் காணலாம். காலகதியில், இவைகள் பற்பல துறைகள்பற்றி எழுதப்பட்டன. சில கட்டுரைகள் தினசரிப் பேச்சு வழக்கினின்று மிகவும் விலகி சிறந்த உரைநடையில் அமைந்து, 'பாரா' முதலிய தொடர்நிலை நெறிகளைத் தழுவி இயற்றப்பட்டன; கருதிய பொருளை உபதேசம் போல இவைகள் விதித்துக் கூறும். வேறு சில, சுருக்கமாயமைந்ததுடன், நியதியாதுமின்றி யதேச்சையாய்ச் சென்று முடிந்தன. இவற்றிலே, கருதிய பொருள் உபதேசம் போலன்றி, மக்கட் பண்புக் கேற்றபடியாயும் எளிதில் அறிந்து இன்புறத்தக்கதாயும் அமையும். இந்த இரண்டாவது வகையைச் சார்ந்தனவே இந்நூலிலுள்ள கட்டுரைகள்.

கட்டுரை எழுதுவதென்ருல் 'உயரிய நடை'யில் எழுதவேண்டும் என்று பலரும் நினைக்கிருர்கள். 'உயரிய நடை'யில் சொல் அலங்காரத்தைப் பார்க்கலாம்; அகராதியிலன்றி எளிதிற் பொருள் விளங்காத கடினமான பதங்களைத் தரிசிக்கலாம்; எதுகை மோனைகள் நிரம்பிய சொல்லடுக்குகளை நோக்கி வியக்கலாம் ஆனுல் இந்நடையில் உயிர்த் தத்துவம் மாத்திரம் காணப்படுவதில்லை. உயிர் நீங்கிய பின் பிரேதத்தை அலங்கரித்துப் பார்ப்பதைப் போல்வதுதான் இந்த 'உயரிய நடை'.

இவ்வகை நடையில் எழுதிய கட்டுரைகளுக்கும் இந்நூலிலுள்ள கட்டுரைகளுக்கும் வெகு தூரம். இந்நூலின் கட்டுரைகள் ஒவ்வொன்றிலும் உயிர்த் தத்துவம் தாண்டவமாடுகிறது. 'நடை' யென்று பெயரை வைத்துக்கொண்டு நடவாமல் ஓரிடத்திலேயே நின்று ஆற்றல் முழுவதையும் வீண் விரயம் செய்யும் உரை நடைகளுக்கு மாருக, இக்

கட்டுரைகள் முழுவதிலும் கருத்தும் சொல்லும் உயிருடையன போல நடந்து சென்று தாம் குறித்த முடிவை அடைவதைக் காணலாம். உயிருள்ள பொருள்கள் புறவுறுப்பின் நிகழ்ச்சிகளாலும் மனமாகிய அகவுறுப்பின் நிகழ்ச்சிகளாலும் தம்மையடுத்துவரும் பிற உயிர்களைப் பாதிப்பதுபோல, இவ்வுரை நடையும் வாசகர்களை நேரே பாதிக்கிறது. ஆசிரியர் மனத்துக்கும் வாசகர் மனத்துக்கும் இடையே யாதொரு திரையும் இல்லை. எவ்வித மறைவும் இல்லை. இவ்வாறு மறைவும் திரையும் இன்றி எண்ணிய பொருளை வாசகர் மனத்துள் நேராக, எளிதிற் செல்லச் செய்யும் ஆற்றல் எல்லாருக்கும் வாய்ப்பதன்று. நேர்மையும், எளிமையும் தெளிவும், சிறந்த உரைநடைக்கு இன்றியமையாத குணங்களாகும். இக்குணங்கள் இக்கட்டுரைகளில் சிறந்து விளங்குவது பாராட்டி எடுத்துக் கூறத் தகுவது.

விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் கூறுதல் ஒரு வகை ஆற்றல்; அவற்றை மனதிற் பதியும்படி செய்வது பிறிதொருவகை ஆற்றல். விஷயங்களைப் படம் தீட்டுவது போன்று மனக்கண் முன்னே சித்திரித்துக் காட்டுவதிலே இவ்வகை ஆற்றல் புலனாகிறது. பொருளற்ற, வெறுஞ் சொல்லடுக்குகளாலே சித்திரித்தால், விஷயம் மனத்திற் பதிந்து விடுவதில்லை. விஷய விளக்கத்திற்கு அநுகூலமாகிய உதாரணங்களின் சிறப்பினாலும், உபமானங்களின் அழகினாலும், விஷயத்தை அடுத்தும் அதற்கு முன்பும் பின்புமாயமைந்த பொருள்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றின் வர்ணனைகளாலும், மனம் மெழுகுபோல் இளகித் தன்மீது பொறிக்கப் பெறும் விஷய-முத்திரையை இனிதில் எளிதில் ஏற்றுப் பதித்து வைத்துக்கொள்ளுகிறது. இவ்வாறு அமைந்த சித்திரங்கள் இந்நூலில் உள்ளமை இதன் பெருமையை நன்கு உணர்த்துகிறது.

மேற் குறித்த நலன்களோடு இந்நூலில் அங்கங்கே இலக்கியச் சுவை பரிமளிப்பதையும் வாசகர்கள் நுகர்ந்து இன்புறுவார்கள். குறள் முதலிய பெரு நூல்கள் அவற்றை எடுத்தாளும் நூல்களுக்கு ஒரு தனிச் சுவையையும் பெருமையையும் நல்குகின்றன. இவை வாசகர்களுடைய மனத்தை வசீகரித்து அவர்களது இன்பத்தைப் பெருக்குகின்றன. வசனம் எழுதுவோருள் ஒரு சிலர் தங்கள் நூலில் அடிக்கடி பழஞ் செய்யுட்களை உரைநடையில் அமைத்து, கருத்துக்கள் இடையறவு படும்படி செய்தும், தங்கள் நடைக்கும் பழஞ் செய்யுள் நடைக்குமுள்ள வேறுபாட்டினை நீக்க முடியாது தங்கள் ஏழ்மையைக் காட்டித் துன்புறுத்தியும் வருகின்றனர். இங்ஙனம் செய்தல் தங்கள் நூலுக்கு ஒரு குறை என்பதையும், பண்டைப் புலவர்களுக்கு அபராதம் செய்வதாகுமென்பதையும், அவர்கள் உணர்வதில்லை. இக்குறைகள் யாதுமில்லாதபடி, இல்க்கியச் சுவை கமழும்படி எழுதப்பட்ட இக்கட்டுரைகள் வாசகர்களுக்குப் பெருவிருந்தா யமையும் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டுரைகளுக்குரிய விஷயங்களும் நமது தற்கால வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையனவாயும் பலதிறப் பட்டனவாயும் உள்ளன. இவற்றை விரித்தெழுது முறை ரஸிகர்கள் கொண்டாடத்தக்கதா யுள்ளது.

இக் கட்டுரைகளைக் கற்றுத் தமிழ் மக்கள் பயனடையத் தவறார்களென நம்புகிறேன்.

*திருவிதாங்கூர்*
*ஸர்வகலாசாலை*
20-7-54

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

# எனது பூங்கா

இந்தத் தலைப்பைக்கண்டதும் என்நிலைமையை நன்கு அறியும் நண்பர்கள் "இவரிடம் பூங்காவா? எப்பொழுது பெற்ருர்? ஏதேனும் ஒரு பூச்செடி வளர்க்க ஆரம்பித்திருக்கிருரா? அதைத்தான் இங்கே எனது பூங்கா என்று பீத்திக் கொள்ள எண்ணுகிருரா? அல்லது பொருளுடையோர் வைத்திருக்கும் பூங்காக்களைக் கண்டு உண்டாகும் அழுக்காற்றுக்குப் போக்குக் கொடுப்பதற்காக இப்படி எழுத எண்ணுகிருரோ?" என்று கூறக்கூடும். இதற்கு என்ன பதில் கூறுவது?

"நான் பட்டினியா யிருந்தாலும், என் உணவு வாங்க மட்டுமே காசு இருப்பினும் நான் பூவைக் கண்டால் உணவை வாங்காமல் பூவையே வாங்குவேன்" என்று மகமது நபி கூறினராம்.

இவருக்குப் பூவிலுள்ள இத்தனை ஆசையைக் கண்டதும் நான் இவர் என்ன தமிழர்தானே என்று அடிக்கடி எண்ணுவதுண்டு. தமிழர்களுக்குப் பூவிலுள்ள ஆசை உலகில் வேறு எந்த இனத்தாருக்கும் கிடையாது என்று உறுதியாகக் கூறலாம். தமிழர்கள்தான் கடவுளுக்கு மல

ரிட்டு வழிபடுபவர்கள். பெரியோர்களுக்கு மாலையிட்டு வணங்குவார்கள். கலியாணம் செய்வதை மாலையிடுதல் என்று கூறுவார்கள். பெண்கள் தலையில் பூக்களைச் சூட்டிக்கொள்வார்கள். பெரியோர் பேசுவதைத் திருவாய் மலர்வதாகச் சொல்லுவார்கள். முகம் மலர்வதாகக் கூறுவர். பத்திரிக்கைகளுக்குக்கூட மலர்கள் என்றே நாமமிடுவார்கள்.

உடலுக்குரிய உணவிலும் உள்ளத்துக்குரிய உணவே சிறந்தது என்று மகமது நபி கூறுகிறார். அதில் ஐயத்துக்கு இடம் ஏது? "மனிதன் வயிற்றிலிடும் உணவினால் மட்டும் ஜீவிப்பதில்லை" என்று இயேசு கிறிஸ்துவும் கூறியிருக்கிறார் அல்லவா? மலர்கள் அத்தகைய உணவாகும். அவை அழகும் மணமும் பொருந்தியவை. அவற்றைப்போல் அழகும் மணமும் பொருந்திய வேறு பொருள்கள் கிடையா. "அழகுள்ள பொருள்கள் இடைவிடாமல் இன்பம் அளிக்கும் ஊற்றாகும்" என்று கீட்ஸ் என்னும் ஆங்கில மகாகவி கூறுகிறார். அவரை ஷேக்ஸ்பியருக்கு இணையாகக்கூடக் கூறுவார்கள். அவர் எத்தனையோ பாடல்கள் இயற்றிருப்பினும் இந்தப் பொருளுடைய வரியை அறியாத ஆங்கில மக்களும் ஆங்கிலம் படித்த மக்களும் கிடையார். இந்த உண்மையை அறிந்துதான் தமிழர்கள் மலர்களிடம் தங்கள் உள்ளத்தை அத்துணைக் கொள்ளை கொடுத்துளர். முருகு என்னும் அழகையே தங்கள் ஆதி தெய்வமாகக் கொண்டார்கள் அல்லவா?

மலர்கள் அழகும் மணமும் பொருந்தியவை என்பது மட்டுமன்று. அவ்வதான் உலகத்தை நிலைபெறுத்திக்

கொண்டிருப்பவை. எந்த ஜீவராசியிடம் மலர்ச்சி என்ப தில்லையோ அந்த ஜீவராசி அழிந்தேபோகும். அது ஒரு காரணம் தமிழர்கள் தங்களை அறியாமலே மலர்களைக் கண்டு மயங்கி நிற்பதற்கு.

என்னிடம் ஒரு தொட்டி மட்டுமே இருக்கும் என்று என் நண்பர்கள் கேலிசெய்வார்கள் என்றேன். அப்படிக் கேலிசெய்தாலும் அதனால் பாதகமில்லை. அழகான பூக் களைத்தரக்கூடிய ஒரு செடியேனும் வைத்திருக்கும் நான் அதுகூட இல்லாதவர்களைவிட ஓராயிரம் மடங்கு அதிகப் பேறுடையவனே ஆவேன். மலர்களால் அடையும் இன் பத்தை எழுதிக்காட்ட முடியாது; துய்த்துத்தான் அறிய முடியும். வெளியேபோய் வேலைசெய்துவிட்டுச் சோர்ந்து போய் வீட்டுக்கு வருகிறோம். நம்முடைய குழந்தை சிரித் துக்கொண்டு ஓடிவந்து நம்மைக் கட்டிக்கொள்கிறது. அப் போது நம்முடைய சோர்வு எங்கே? போன இடம் யாருக் கும் தெரியாது. குழந்தையின் மலர்முகம் கண்டதும் சோர்ந்து குவிய ஆரம்பித்துக்கொண்டிருந்த நம்முடைய முகமும் சூரியனைக்கண்ட தாமரை போலவும் சந்திரனைக் கண்ட குமுதம் போலவும் மலர ஆரம்பித்துவிடுகிறது. நரையும் திரையுமுள்ள கிழட்டு முகம்கூட ஒளிபொருந்திய தாக ஆகிவிடுகிறது.

நாம் வீட்டுக்கு வந்ததும் குழந்தை வரவேண்டாம். நம்மை வரவேற்கத் தொட்டியிலுள்ள செடியில் பூத்து நிற்கும் மலர்போதும். அதைக் கண்டதும் குழந்தையைக் கண்ட முகம் மலர்ந்ததுபோலவே மலர்ந்துவிடுகிறது. சோர் வும் மறைந்துவிடுகிறது. இதை அனுபவித்துப் பார்க்கும் படி என் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

# எனது பூங்கா

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ருஷிய நாட்டில் காதைரைன் என்ற சக்ரவர்த்தினி அரசாண்டு கொண்டிருந்தாள். ஒருநாள் அதிகாலையில் எழுந்ததும் சாளரத்தின் வழியே வெளியே பார்த்தாள். அந்த மைதானம் வெட்டவெளியாக இருந்தது. ஆனல், அதன் நடுவில் ஏதோ ஒரு சிறு காட்டுச்செடி பூத்து நின்றுகொண்டிருந்தது. யாரும் தீண்டாத செடி. அற்புதமான மலர். ஆயினும் அந்தப் புல்வெளிக்கு அதுவே ஒளி தந்துகொண்டிருந்தது. அதைக்கண்ட அரசி அந்த அற்புதக் காட்சியில் சொக்கிப் போய்விட்டாள். உடனே அரண்மனை அதிகாரியைக் கூப்பிட்டு யாரும் அந்தச் செடியைப் பிடுங்கவோ அதிலுள்ள மலர்களைப் பறிக்கவோ செய்யாதிருக்குமாறு ஒரு காவற் சேவகனை அதன் அருகே நிறுத்திவைக்குமாறு பணித்தாள். இதையெல்லாம் அனுபவம் மூலம் அறியலாமே யன்றிப் பிறர் சொல்லி அறியமுடியாது.

ஆகையால் என்னிடம் உள்ளது ஒரு சிறு தொட்டியும் அதிலுள்ள ஒரு அற்பச் செடியுமாகவே இருந்தாலும் அது என் பூங்காதான். அந்த அளவுக்கு நான் அதிர்ஷ்டசாலிதான். அதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும் என்னிடம் பூந்தொட்டிப் பூங்காதான் உண்டு என்று எண்ணிவிட வேண்டாம். என்னிடம் ஒரு பூங்காவன்று, அநேக பூங்காக்கள் உள. இந்த ஊரில் மட்டும் அன்று. நான் போகும் ஊர்களில் எல்லாம் உள. இந்த ஊரில் உன்னுடைய பூங்காக்கள் எவை என்று கேட்டீர்களோ? முதலாவதாக நான் வசிக்கும் தியாகராயநகரில் என் வீட்டின் அருகே உள்ள பனகல் பார்க் என்னும் பூங்கா எனக்குச் சொந்தமல்லவோ?

நான் வெளியே போகும் வழியில் எந்த வீடுகளில் மரங்கள் நிற்கின்றனவோ அவை எல்லாம் எனக்குச் சொந்தமல்லவோ? ஜெமினி மூலையில் கிராமபோன் கம்பெனியார் தோட்டத்தில் நிற்கும் பூ மரமும் யாருக்குச் சொந்தம்? நான் அதைப் பார்த்துச் சொக்கி நிற்கும்வரை அது எனக்கேதான் சொந்தம். நான் வேலைபார்க்கும் பல் கலைக் கழகத்தின் தோட்டத்தில் பூ மரம் ஒன்று அனாதையாக நின்றுகொண்டிருந்தது. அதை இன்று நான் என்னுடையதாக ஆக்கிக்கொண்டேன். கடற்கரை வீதியிலுள்ள மராமத்து இலாகாக் காரியாலயத்தின் வாசலில் காணப்பெறும் மலர்ச்செடிகள் காரியாலயத்திற்கு உரியனவா அல்லது எனக்கு உரியனவா?

மலர் மரங்கள் பார்க்குகளில் நிற்கலாம். அப்பொழுது அவை பார்க்குக்கு உரிய நகரசபையார்க்குச் சொந்தம். மலர் மரங்கள் வீட்டுத் தோட்டங்களில் நிற்கலாம், அப்பொழுது அவை அந்த வீட்டார்க்குச் சொந்தம். மரங்கள் தான் அவர்களுக்குச் சொந்தமேயன்றி அவைகளில் இலங்கும் அழகும் அற்புதமும் யார் யார் அவைகளைப் பார்த்து ஆனந்திக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் சொந்தம். மரங்களின் உடல் வீட்டார்க்கு உரியது. ஆனால், மரங்களின் உள்ளமோ அவற்றுடன் பேசுவார்க்கு உரியது. யார் அதைப்பார்த்து நிற்கிறார்களோ அவர்களை நோக்கியே அவை அகமகிழ்ந்து நகைசெய்கின்றன. அவற்றின் உள்ளமும் பார்ப்போர் உள்ளமும் ஒன்றுபடுகின்றன. அந்தக் காரணத்தால் ஆன்மவெள்ளம் பாய்ந்து அழியாத ஆனந்தத்தை அளிக்கின்றது. ஆகவே, என்னுடைய பூங்காக்கள் எனக்குமட்டும் உரியனவல்ல. என்னைப்போல் அவற்றைத் துய்க்க அறிந்தோர் அனைவர்க்கும் உரியவையேயாகும்.

நாம் ஒரு வீட்டிற்குப் போகிறோம். அங்கே மகாத்மா காந்தியின் படத்தைப் பார்க்கிறோம். அது அழகாக இருக்கிறது. உடனே அந்த வீட்டாரிடம் அத்தகைய படம் எங்கே கிடைக்கும் என்று விசாரிக்கிறோம். விசாரித்து அத்தகைய படம் ஒன்றை வாங்கிக்கொண்டுவந்து நம்முடைய வீட்டில் மாட்டுகிறோம். அவ்வளவுதான். அதன் பிறகு அதைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. ஒருவேளை யாரேனும் நம்முடைய வீட்டுக்கு வருபவர் 'இந்தப் படம் அழகாயிருக்கிறதே' என்று கூறினால் 'ஆமாம் இன்ன இடத்தில் இவ்வளவு சிரமப்பட்டு வாங்கி வந்தேன்' என்று கூறி மகிழ்கிறோம். ஆனால், இந்த மகிழ்ச்சி படத்தின் அழகால் ஏற்பட்டதன்று, இத்தகைய படத்துக்குச் சொந்தக்காரன் ஆகிவிட்டோம் என்ற எண்ணத்தால் ஏற்பட்டதேயாகும். இதுபோலத்தான் பூங்காவை உடையவர்களும் நடந்துகொள்வார்கள். வீட்டின் முன்பக்கம் எத்தனையோ அழகான பூச்செடிகளை வைத்து வளர்க்கிறார்கள். ஆனால் அவைகளைப் பார்த்து மகிழ அவர்களுக்கு எண்ணமுண்டோ இல்லையோ, நேரம் கிடையவே கிடையாது. அதைப் பார்த்து மகிழ்பவர்கள் எல்லாம் வீதியில் போகும் நாம்தான். அதனால்தான் செடிகள் அவர்களுடையவை; அவற்றின் அழகு நம்முடையது என்று கூறினேன்.

ஆகவே பூங்காவனங்கள் ஏற்பட்டது உரிமை கொண்டாடுவதற்காகவன்று. அழகு அனுபவத்துக்காகவே யாகும். அழகு என்பது அதை அனுபவிப்பவர்க்கே சொந்தம், அந்த முறையில் நான் எந்தப் பூங்காவனங்களைக் கண்டு என் இதயத்தைப் பறிகொடுக்கிறேனோ அந்தப் பூங்காவனங்கள் எல்லாம் என்னுடையனவே.

— o —

# 2. எனது கார்

நான் சொல்லப்போகும் 'கார்' தமிழ்ச்சொல் அன்று. அதனால் நான் கார் என்றவுடன் மேலே விண்ணில் மேகத்தைப் பார்க்கவேண்டாம். அல்லது கண்களை மூடிக்கொண்டு இருள் என்று எண்ணிவிடவேண்டாம். இக்காலத்தில் சாதாரணமாக மக்கள் கார் என்னும் மொழியை எந்தப் பொருளில் உபயோகிக்கிறார்களோ அதே பொருளில் தான் நானும் உபயோகிக்கிறேன். எனது கார் என்பது எனது மோட்டார்கார்தான்.

என்னிடம் மோட்டார்கார் ஏதும் இருக்குமா என்று திகைக்கவேண்டாம். 'போர்டு', 'ஷெவ்ரோலட்' போன்ற கார் வாங்க என்னிடம் பணம் கிடையாது. ஆனால் என் கார் இவைகளைப் போன்றதன்று. இவைகளைவிட ஏற்றமுடையதாகும். அம்மட்டோ? மோட்டார் கார்களில் தலைசிறந்தது 'ரோல்ஸ்ராய்ஸ்' என்பர். அதைப்பார்க்கிலும் ஆயிரமடங்கு உயர்ந்ததாகும் எனது கார்.

ஆயிரமடங்கு என்று கூறியதுகூடத் தவறுதான். என் காரின் மேன்மையை யாராலும் அளவிட இயலாது. அது வெகு அற்புதமானது—வெகு அழகானது. சாதாரணக்

கார்களைப்போல மனிதனால் உண்டாக்கப்பட்டதன்று. தெய்விக சக்தியால் சிருஷ்டிக்கப்பட்டதாகும். அதைப் பற்றி ஆராய்ந்த அறிஞர் அது நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலை சூரிய மண்டலத்தின் அருகில் இருந்ததாகக் கூறுகின்றனர். இதில் அறிஞர்க்குள் அபிப்பிராயபேதம் இல்லை. ஆனால் அந்தத் தொழிற்சாலையில் அது செய்யப் பட்ட முறையைக் குறித்து ஏகமனதான அபிப்பிராயம் இல்லை.

இந்த அறிஞர் போற்றும் அற்புதக் காரைப்போல் அவனியில் வேறு உண்டா? அகிலலோகங்களிலும் அலைந்து தேடினாலும் இதுபோன்ற வேறு காரைக் காண முடியவே முடியாது. இப்படிப்பட்ட கார் இது ஒன்றுதான் உண் டாக்கப்பட்டது. இதை உண்டாக்கி எத்தனையோ லட்சம் வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் கார்மட்டும் இப் பொழுதும் புத்தம் புதிதாய் இருக்கின்றது. இடையில் அதன் உறுப்புக்களைப் பிரித்துப் பழுதுபார்த்து மீண்டும் ஒன்றுசேர்க்கவில்லை. அதை ஆக்கிய காலத்திலேயே பழுது பார்த்தல் அனாவசியம் என்று நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

பழமையும் புதுமையும் ஆகிய இந்தக் கார் நான் நேற்றோ முன்தினமோ வாங்கியதன்று. நான் பிறந்த அன்றே என்னிடம் இருக்கிறது. பரம்பரையாய் வந்தது என்று என் பெற்றோர் கூறக்கேட்டிருக்கிறேன். அதனால் என் சந்ததியார்களும் இதை அனுபவிப்பர். இதை நான் விற்கமுடியாது. என் கடன்காரர் இதை ஜப்தி செய்ய இயலாது, அரசாங்கத்தாரும் அணுகார்.

எனது காரின் பரப்பு எவ்வளவு தெரியுமா? இங்கி லாந்து முதலான மேனாடுகளில், உட்கார்ந்து பேசிக்கொண்

டிருக்க நாற்காலிகள், சாய்வு நாற்காலிகள் போட்ட ஹால், மேஜை முதலியன உள்ள போஜனசாலை, உறங்குவதற்குக் கட்டில்களிட்ட இடம், சமையல் அறை, ஸ்நான அறை முதலியன எல்லாம் அமைக்கப்பெற்ற பெரிய மோட்டார்கள் தயாரிப்பதாகக் கேள்வி. ஆனால், அதைக்கேட்டு அற்புதம் அற்புதம் என்று ஆச்சரியப்படத் தேவையில்லை. என் காரோடு ஒப்பிட்டால் அவைகள் எல்லாம் காற்றில் மிதக்கும் தூசியினும் சிறியவை.

என் காரின் நீளம் இருபத்தையாயிரம் மைல், அகலமும் அதே அளவுதான். இவ்வளவு பெரிய காரைப்பற்றிக் காணவேண்டாம், கேட்கவேண்டாம், என்றேனும் கனவாவது கண்டிருக்கிறீர்களா? நீளத்தின் அளவே அகலம் என்று கூறியதால் சதுரம் என்று எண்ணிவிடவேண்டாம். என் கார் எல்லா அம்சங்களிலும் அபூர்வமானதாயிருக்க வேண்டாமோ? மனிதர்கள் செய்யும் கார்களில் சில மீன் உருவம், சில படகு உருவம், சில வேறு உருவம் கொண்டிருக்கும். என்னுடைய கார் ஆரஞ்சுப்பழத்தின் உருவம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

சாதாரணமாகக் கார்கள் நாள் செல்லச்செல்ல அழகு குன்றும், தேய்வுறும், கெட்டுவிடும். திரைகள் கிழிந்து போகும், விரிப்புக்கள் நிறம் மங்கும், கண்ணாடிகள் கீறிவிடும், விசை வேலைசெய்யாது, கதவுகள் 'கிரீச்' என்று பாடத்தொடங்கும். ஆனால் எனது கார் விஷயமோ அப்படியன்று. வருஷங்கள் செல்லச்செல்ல வனப்பு மிகுந்து வருகின்றது. கார் செய்யப்பட்ட காலத்தில் காணப்பட்ட அற்புதங்கள் வேறு, இப்பொழுது காணப்படும் அற்புதங்கள் வேறு. எப்பொழுதும் அற்புதம்தான்.

எனது காரில் கண்டுகளிக்க இனிய காட்சிகள், மனத்தை மகிழ்விக்கும் இனிய இசை, ஸ்நானம் செய்யவும் தாகம் தீர்க்கவும் தெளிந்த சுத்தமான நீர் இவையெல்லாம் உண்டு. மேலும் என்னோடு பேசிப் பழகி ஆனந்தமாய்க் காலங்கழிக்க அநேக கோடி நண்பர்களும் உண்டு. அந்த நண்பர்கள் எனக்கு நாள்தோறும் காட்டும் அற்புத விநோதங்கள் பல. உண்ணத் தேவையானவை அனுபவிக்கத் தேவையானவை எல்லாம் அங்கே அளவின்றிக் கிடைக்கும்.

உங்கள் கார்கள் மணிக்கு எத்தனை மைல்கள் ஓடும்? அறுபது, எழுபது மைல் வேகத்தில் ஓட்டினால் உடனே ஆச்சரியம் என்று வியந்துகொள்வீர்கள்! அப்படியானால் என்னுடைய கார் மணிக்கு எழுபது அல்ல - எழுபது ஆயிரம் மைல் ஓடும் என்று கூறினால் எவ்வளவு ஆச்சரியம் அடைவீர்கள்!

சாதாரணமான கார்கள் எப்பொழுதும் ஒரே வேகத்தில் ஓடமாட்டா. தவிர அவைகள் இயங்குவதற்குப் 'பெட்ரோல்' தேவை. அதிவேகமாய் ஓடினால் வேறு கார்களோடு மோதினாலும் மோதும். அப்படி அதிவேகமாய் ஓட்டச் சாமர்த்தியமுள்ள சாரதியும் வேண்டும். ஆனால் என்னுடைய காரோ - எப்பொழுதும் ஒரே வேகமாய், எழுபது ஆயிரம் மைல் வீதம், பெட்ரோல் ஒரு துளிகூடத் தேவையில்லாமல் ஓடும். என் காருக்குச் சாரதி இல்லை; சாரதி இல்லாமல் ஓடக்கூடிய கார் அது. வேறு கார்களோடு மோதாது. அது ஓட ஆரம்பித்து எத்தனையோ லக்ஷ வருஷங்கள் ஆகிவிட்டனவே. ஆயினும் இதுவரை எவ்வித விபத்தும் நிகழவில்லை.

இவ்வளவு விரைவாக ஓடுகிறதே - என்ஜினில் ஏதேனும் சப்தமுண்டா? சிறிதும் இல்லை. இத்தனை வருஷங்களாக ஓடிவருகிறதே — எங்கேனும் 'கிர்ச்' என்ற ஓசையுண்டா? ஒரு சிறிதும் கிடையாது. சப்தம் சிறிதுகூட இல்லாத காரை நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள் — பார்க்கவும் மாட்டீர்கள்.

இப்படி சப்தமில்லாமலும், இவ்வளவு விரைவாகவும் ஓடுவதானால் — அது ஓடுகிற ரஸ்தா எப்படிப்பட்டதோ என்று நினைக்கலாம். ஆகா, இப்பொழுதுதான் அறிந்தேன். எனது வாகனத்தைக் கார் என்று அழைப்பது தவறு. கார் என்றால் அது ஓட ரஸ்தா வேண்டுமே! எனது வாகனம் எந்த ரஸ்தாவிலும் ஓடவில்லை. அந்தரத்தில் அல்லவோ பிரயாணம் செய்கிறது! அதனால் அதைக் கார் என்று அழையாமல் ஆகாயவிமானம் என்று அழைக்கலாம் அல்லவா?

ஆனால் அப்படிச் சொல்வதும் தவறாகமுடியும். ஆகாய விமானம் ஆகாயத்தில் — காற்றில் — அல்லவோ பறக்கும்! என்னுடைய வாகனம் விரைந்து பறக்கும் வழியில் காற்று என்பதே கிடையாது. உலகில் காற்று இல்லாத இடம் உண்டோ? கிடையாது. ஆனால் என் வாகனம் காற்றில்லாத வெட்டவெளியில்தான் செல்கிறது. இது மிக அற்புதமல்லவா?

என் வாகனம் - முன்போல் கார் என்று சொல்வதற்கில்லை - மணிக்கு எழுபதினாயிரம் மைல் வீதம் இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கிறது என்று கூறினேன். அது மட்டுமன்று. அந்தரத்தில் அவ்விதம் போகும்பொழுதே

அது கறங்குபோல் மேலும் கீழுமாய்ச் சுழன்றுகொண்டே செல்லும். அப்படிச் சுழல்வதும் மணிக்கு ஆயிரம் மைல் வீதமாகும். அப்படிச் சுழன்ருலும் அதிலுள்ள மனிதர்களும் சாமான்களும் கீழே விழுந்துவிடுவதில்லை. எதுவாலும் சரி, வாகனத்திலிருந்து தவறிவிட்டால் உடனே வாகனம் அதைத் தன் இடத்தே இழுத்துக்கொள்ளும் சக்தி வாய்ந்தது. வாகனத்தை விட்டு எதுவும் சிதறி மறைந்து விடமுடியாது.

வாகனம் ஆரஞ்சுப்பழம்போல் உருண்டை வடிவாய் இருப்பதால், வாகனத்தைவிட்டு விலகிநின்று கவனித்தால், அதில் உள்ளவர்களில் சிலர் அதில் நிற்பது போலவும், சிலர் அதிலிருந்து தொங்குவது போலவும் காணலாம்; ஆனல் அவர்கள் அனைவரும் நிற்பதாகவே உறுதி கூறுவர். தொங்குவதாக எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்.

இந்த வாகனத்தில் பகலில்தான் வெளிச்சம் உண்டு. இது எல்லாக் கார்களிலும் உள்ளதுதானே என்று கேட்பீர்கள். ஆம், உண்மைதான். ஆனல் மற்றக் கார்களில் பகலில் வெளியில் பார்த்தால் வெளியிலுள்ள பொருள்கள் கண்ணுக்குப் புலனுகுமன்ருே? என் வாகனத்தில் அப்படி இராது. பகலில் வாகனத்தின் உள்ளேயுள்ள பொருள்கள்தான் தெரியும். வெளியே பார்த்தால் ஒன்றும் புலப்படாது. இரவிலோ என்ருல் வெளியில் மிக அற்புதமான காட்சிகள் எல்லாம் விளங்கும். வானவெளியில் சந்திரன் போன்ற மின்மினிகள் சிலவேளைகளில் மட்டும் ஏற்றி வைக்கப்படும்; அப்பொழுதுமட்டும் மங்கலான ஒளி வீசும்.

இதுபோன்ற விமானம் வேறில்லை என்றேன். ஆனல் வேறுவிதயான, ஆயினும் இதுபோல் மிக வேகமாக ஓடக்

கூடிய, விமானங்கள் ஏழெட்டு உள. சில சமீபத்தில் - அதாவது லட்சக்கணக்கான மைல் தூரத்தில் - உள. சில வெகுதொலையில் - அதாவது கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் - உள. இவை ஒன்றோடொன்று ஒரு நாளும் மோதிக்கொள்ளா.

இந்தவிதமாக என் விசேஷ விமானத்தின் மேன்மைகளைப்பற்றி விரிவாக எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் அப்படிச்செய்து வாசகரின் ஆச்சரிய உணர்ச்சியைத் தணித்துவிட விரும்பவில்லை. அதனால், இந்த விமானம் எனக்கும் என் சந்ததியார்க்கும் மட்டும் சொந்தமானதன்று, உங்களுக்கும் உங்கள் சந்ததியார்க்கும் சொந்தமானது என்று கூறினால் போதும்.

— o —

# 3. எனது தோழன்

**நா**ம் ஒவ்வொருவரும் சில அல்லது பல நண்பர்களைப் பெற்றிருக்கிறோம். சாதாரணமாக நண்பர்கள் வேறு, நாம் வேறு அல்லவா? நண்பரும் நாமும் ஒன்றே, எவ்வித வேற்றுமையும் இல்லை என்று கூற முடியுமோ? உயிருக் குயிரான நண்பர் என்று கூறிக்கொள்ளலாம், ஆனால் அங்கும் பேதம் பிறவாமல் இருந்துவிடாது.

காதல் நட்பின் ஒரு வகை; நட்பில் ஒற்றுமை முதிர்ச்சி தோன்றுமிடம் காதல் என்று கூறுவர். காதலர் ஈருடல் ஓருயிர் என்று கூறி மகிழ்வர். சில சமயங்களில் காதலைப்பற்றிக் கற்பனை கூறும் கவிஞர்கள் காதலிடையே காணும் நட்பு 'உடம்போடு உயிரிடை யன்ன' தன்மை யுடையது என்றும் கூறத் துணிந்துவிடுவர். ஆனால் எனக் கும் என் தோழனுக்குமுள்ள நட்பு ஒன்றே உண்மையில் உடம்புக்கும்உயிர்க்கும் உள்ள நட்பை ஒக்கும்என்று தைரிய மாய் கூற இயலும். எனக்கு ஓர் உடல் அவனுக்கு வேறு உடல் என்பதில்லை. அதுபோல் எங்கள் இருவர்க்கும் உயி ரும் ஒன்றே. ஓருடல் ஓருயிர் உடைய நண்பர்கள் நாங்களே!

அது மட்டுமா? சாதாரணமாக நண்பர்கள் வேறு பெயர் உடையவர்கள். காதலரில் கணவனும் மனைவியும் கூட ஒரே பெயர் வகிப்பதில்லை. பெயரைக் கேட்டவுடனேயே, இவர் கணவர், இவர் மனைவி என்று கூறிவிடலாம். ஆனால் எங்கள் விஷயத்தில் ஒரு நாளும் அவ்விதம் சொல்லிவிட முடியாது. எங்கள் இருவர்க்கும் ஒரே ஒரு நாமந்தான். என் தோழன் பெயரே எனக்கும் என்று கூறலாம்.

என் தோழனை விட்டு நான் தனியாகத் தோன்றுவதில்லை. இலைமறை காய் போல் என் தோழனிடம் நான் முழுதும் மறைந்துள்ளேன். பிறர் என் தோழன் இருப்பதைக்கொண்டே நானும் இருப்பதாக உணர்கின்றனர். என் தோழனுள்ள இடத்தில் நானும் இருக்கிறேன். ஆனால், அதுபோல் நானுள்ள இடத்தில் அவன் இருக்கிறான் என்று கூற முடியாது. அது மட்டுமன்று. நானுள்ள இடம் என்றுகூடச் சொல்வதற்கில்லை. நான் ஒரு நாளும் தனித்திருப்பதில்லை. என் தோழனே எனக்கு ஆதாரம்.

நாங்கள் இருவரும் 'இருவர்' அல்லர், 'ஒருவரே' என்று கூறுவது உபசார மொழி அல்ல. முற்றிலும், முக்காலும் உண்மையாகும். சாதாரணமாக நண்பர்களில் ஒருவர் சுக துக்கங்கள் மற்றவர் சுகதுக்கங்கள் என்று சொல்லிக் கொள்வதுண்டு. காற்று வீசுவதைக் காட்டும் கருவி போல், நண்பன் வாடினால் நானும் வாடுவேன்; நண்பன் மலர்ந்தால் நானும் மலர்வேன் என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால், அப்படி ஒத்து வாழும் நண்பர்களைக் கண்டுவிட்டதாக யாரேனும் உரைக்க முடியுமோ?

'உண்மையான காதலர், ஒருவருடைய உரோமம் ஒன்றிற்குத் தீங்கு உண்டானாலும், உடனே தமக்கும் உண்

டாகிவிட்டதாக உணர்ந்து வருந்துவர்; காதலர்க்குள் நீ நான், உனது எனது என்பதே கிடையாது' என்று ஆங்கிலப் பேரறிஞர் எட்வர்ட் கார்ப்பெண்டர் காதலைப் பற்றி வர்ணிக்கிருர். அவர் கூறுவதை மறுக்க நான் விரும்பவில்லை. காதலர் இருவரும் இரு வீணைகள். ஒரு வீணையின் பேரில் மெல்லிய காற்று வீசினாலும், உடனே அந்தச் சமயத்திலேயே மற்ற வீணையின் தந்தியும் அதே நாதத்தை வெளியிடும் என்று நம்பிக்கொள்வோம். ஆனால் இந்த விசேஷ வீணைகள் இவ்வுலகில் அபூர்வ சிருஷ்டிகள் என்பதை யாரும் ஒப்புக்கொள்வர்.

எனது தோழனும் நானும் அவ்வித வீணைகள் என்று சந்தேகமறக் கூறுவேன். விஷயத்தை அறிந்த பின் ஒருவரும் மறுக்கமாட்டார். நாங்கள் அபூர்வ சிருஷ்டிகள் அல்லர். எல்லோர்க்கும் தெரிந்தவர்களே. என்னிடம் முனிவு சிறிதே முளைக்கட்டும். உடனே என் தோழன் முகம் சுருங்கிக் கருகுவதைக் காணலாம். நான் சிறிதே வருந்தட்டும். உடனே என் தோழன் கண்களில் நீர் ததும்பி விடும். நான் அணுவளவு கவலை கொள்ளவேண்டியது தான், அந்த க்ஷணமே என் தோழனின் முகம் ஒளி மங்கி விடும். அவன் வயிறுகூடத் தன் ஜீரண வேலையை நிறுத்தி விடும். நான் அறிவை அபிவிருத்தி செய்தால், அடுத்தது காட்டும் பளிங்குபோல், என் தோழன் முகம் பொலிவு நிறைந்து தோன்றும். ஒருதுளி ஆனந்தம் என் உள்ளத்தில் விழட்டும்! உடனே என் தோழன் துள்ளிக் குதிப்பதை நீங்கள் காணலாம். மிகச் சிறிய என் எண்ணங்களும் இச்சைகளும் என் தோழனிடம் பிரதிபலித்துத் தோன்றுவதால், என் தோழன் சாயல்களைக்கண்டே என்னை என் இதர நண்பர்கள் அறிந்து கொள்கிருர்கள்.

என் காரியங்கள் என் தோழனிடம் காணப்படு கின்றன என்பது மட்டுமன்று. என் தோழன் இல்லாமல் நான் இந்த உலகில் யார்? என் தோழன் மறைந்துவிட்டிடும், அந்த நிமிஷமே நான் அநாதைதான். என்னை என் பெற்றோர், உற்றார், உறவினர்கூட அலட்சியம் செய்து விடுவர். எனக்கு இந்த உலகில் எவ்வித வேலையும் இல்லை.

நான் உலகில் ஏதேனும் செய்ய நினைத்தால் - எனக் கென்று ஏதேனும் ஒரு வேலை நியமிக்கப்பட்டிருக்குமானல் - அதைச் செய்துமுடிக்க என் தோழனே எனக்கு ஆதாரம். நானகத் தனியே ஒன்றும் செய்துவிட இயலாது. என் தோழனை இன்றியமையாத சாதனம் என்று சொல்லலாமா?

பாருங்கள்: நான் படிக்கவேண்டுமா, உலகில் அவ தரித்த பெரியோர் நூல்களை நான் சுவைத்து இன்புற வேண்டுமா, கம்பன் கவிரசம் பருகவேண்டுமா, எனக்கு ஷேக்ஸ்பியருடைய கவிதைத் தேன் தேவையா, ஷில்ல ருடைய நாடகத்தைக் கற்க விருப்பமா, காளிதாசனின் சகுந்தலையைக் காண ஆவலுண்டா, மகாத்மா காந்தியின் மணிமொழிகள் தெரியவேண்டுமா, அப்படியானல் எனக்கு என் தோழனுடைய கண்களும் மூளையும் அத்யாவசியமாகத் தேவை.

என் தோழனின் காதுகளைக் கொண்டுதான் தியாக ராஜ கீர்த்தனைகள், தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி முதலியன கேட்க இயலும். என் தோழன் இல்லா விட்டால், சங்கீத வித்வ சிரோமணிகள் எனக்கு இருந்தும் இல்லாதவர்களே. கிராமபோனும் ரேடியோவும் வெறும் குழாய்களாகவும் பெட்டிகளாகவுமே ஆகிவிடும். குழலி னும் யாழினும் இனிமையான குழந்தைகள் குரலும்

என்றால் அறிந்து அனுபவித்து ஆனந்திக்க முடியாமல் போகுமே!

என் தோழன் இல்லாவிட்டால் - ஏன் என் தோழன் இருந்தும் குருடாய்விட்டால் - நானும் குருடனே. எதைத் தான் காணமுடியும்? குழந்தைகளைக் காண்பேனோ? நண்பர்களைக் கண்டு களிப்பேனோ? மகாத்மாக்களை நேரில் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்குமா? இயற்கை நமக்கு நிமிஷத்திற்கு நிமிஷம் நம் மகிழ்ச்சிக்கென்று விநோதம் விநோதமாய்த் தயாரிக்கும் இன்பக் காட்சிகள் எனக்கு எள்ளளவும் உண்மையாகுமோ?

இங்ஙனம் சகல விஷயங்களிலும் என் தோழன் மூலமாகவே நான் ஸ்தூல சூட்சம உலகங்கள் இரண்டிலும் சஞ்சரிக்கும் சக்தியுடையவனாவேன். என்னையும் இந்த உலகத்தையும் இணைத்து நிற்பவன் என் தோழனே. நான் இதை எழுதுகிறேன். 'நான் எழுதுகிறேன்' என்று சொல்லிக்கொள்ளலாம். நீங்களும் நம்பிக்கொள்ளலாம். ஆனால் உண்மை அதுவாகுமோ? நான் எண்ணங்களை வகுக்கிறேன். அவன் கைகள்தானே அவைகளைப் பிறர் பார்க்கும் வண்ணம் இவ்விதம் எழுதி அமைக்கின்றன?

இந்த உலக இன்பங்களை நான் அனுபவிக்கிறேனா - என் தோழன் அனுபவிக்கிறானா? இது ஒரு பெரிய சிக்கலான கேள்வி. இதை வாசிக்கும் நேயர்கள் ஆராய்ந்து முடிவுசெய்வார்களா? - ஒன்றுமட்டும் நிச்சயம். அவன் இல்லாவிட்டால் எனக்கு அணுவளவு அனுபவமும் இருக்க மாட்டாது. விருந்துக்கு அழைக்கிறார்கள். விதவிதமான உணவுகள், பலகாரங்கள், பானங்கள், நவநவமான உடைகள், அணிகள், புதுப்புதுக் காட்சிகள், விநோதமான

வேடிக்கைகள், விசேஷமான சங்கீதங்கள் எல்லாம் உள. ஆனல் நாம் அனுபவிக்க முடியாவிட்டால்? அந்த நிலைமை தான் எனக்கு என் தோழன் இல்லாவிட்டால் அமையும்.

என் தோழன் எப்படி நடந்துகொள்கிருனே அதைப் பொறுத்தே என் இன்பங்களும் துன்பங்களும் ஏற்படு கின்றன. 'இன்பமும் 'துன்பந்தானும் உள்ளத்தோடு இயைந்ததன்றே' என்று கம்பர் எளிதாகக் கூறிவிட்டார். உள்ளத்தோடு இயைந்ததோ, உடம்போடு இயைந்ததோ அதைப் பெரியார்கள் ஆராயட்டும். என் தோழனேடுதான் என் இன்பதுன்பங்கள் இயைந்துள என்னும் உண்மை யையே நான் இங்கு வற்புறுத்துகிறேன்.

என் தோழன் என்ன உண்கிருனே, என்ன பருகு கிருனே, என்ன பயில்கிருனே, என்ன அணிகிருனே அவை எல்லாம் என்னிடம் நன்மையோ தீமையோ விளைவித்து விடும். என் தோழன் உணவு சாத்வீகமானதாயிருந்தால் என்னையும் சாத்வீகமானவன் என்று யாரும் கூறிவிடுவர். என் தோழன் மாறுபடும் உணவு உண்டுவிட்டால் உடனே நானும் நோயால் வருந்தவேண்டியதே. என் தோழன் கட்குடியனுனல் நானும் வெறியனே. என் தோழன் தேகாப் பியாசம் செய்துவந்தால் என் தேகமும் வைரமாய்விடும், என்னையும் பயில்வான் என்று கூறிவிடலாம். என் தோழ னின் பழக்க வழக்கங்கள் எல்லாம் என்னையும் பாதித்து விடும். என்னை உயர்ந்தவனுக்கவும் தாழ்ந்தவனுக்கவும் என் தோழனுக்குச் சக்தி உண்டு.

என் தோழனுக்கு இந்தச் சக்தியிருந்தால் எனக்கும் அவ்விதச் சக்தி உண்டு. நான் எண்ணங்கள், இச்சைகள், இன்பங்கள், துன்பங்கள், சோர்வுகள், கவலைகள் முதலி

யவை மூலம் என் தோழனுக்கு நன்மையும் தீமையும் தந்து விடுவேன். நாங்கள் இருவரும் அவ்வளவு நெருக்கமான ஐக்கியமுடையவர்கள் அல்லவா? வாலி சீதையை ராம னுடைய ஆவி என்று கூறினன். அதுபோல் சீதை ராம னைத் தன் பிராணனுகச் சொல்வாள். ஆனால் நானும் என் தோழனும் அவ்விதம் சொல்லமுடியுமா? எங்களுக்கு ஓர் உடல்தான். அதுபோல் எங்கள் இருவரில் யார் யாருக்கு உயிர்? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

'தன்னைத்தானே குணப்படுத்திக்கொள்ளுதல்' என்னும் சிகிச்சை முறையைக் கண்டு வெளியிட்ட மான்ஷியர் க்யூ என்னும் பிரெஞ்சுப் பெரியார் எங்கள் இருவர்க்குமுள்ள இணைபிரியா நட்பை நன்கு உணர்ந்திருந்தார் என்று தோன்றுகிறது. அதனால்தான் அவர், 'உன் தோழன் சுகமாயிருந்தால் நீ சந்தோஷமாயிருப்பாய் என்பது மட்டுமன்று; நீ சந்தோஷமாயிருந்தால் உன் தோழனும் சுகமாய் இருப்பான் என்பதும் உண்மையாகும்' என்று கூறுகிறுர்.

என் தோழன் சுகவீனமுற்ருல் நான் அவனைக் குணப் படுத்தச் செய்யவேண்டியது என்ன? அவன் மருந்துண்ண லாம். ஆனால் அது மட்டும் போதாது. நானும் உதவி செய்தல் அவசியம். நான் கவலை விட்டு, சோர்வு நீத்து, பயம் ஒழித்து, சந்தோஷமாய் இருக்கவேண்டும். என் ஆனந்தம் அவன் ஆரோக்கிய சாதனம்.

இப்பொழுது நவீன வைத்திய ஆராய்ச்சியாளரும் எங்கள் ஐக்கியத்தை விளக்க ஆரம்பித்துவிட்டார்கள். என் தோழனிடம் 'கிளான்ட்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப் படும் சில சிறு உறுப்புக்கள் உளவாம். அவைகள் ஆரோக் கியமாயிருந்தால் நான் அறிவுடையவனுய் அறவழியில் நிற்ப

வனுயிருப்பேனும்; அவை கேடுற்றால் என் ஆரோக்கியம், அறிவு, ஆற்றல் அனைத்தும் அழிந்துவிடுமாம். ஆகவே எப்படிப்பார்த்தாலும் நாங்கள் தோழர்களே. மற்றவர்களை நண்பர்கள் என்று உரைத்துக் கொண்டாலும் எங்களைப் போல் தோழர்கள் இருக்க முடியாது.

இம்மட்டோ? நானும் என் மனைவியும் பேசிக்கொள்வது என்றால், நான் என் தோழன் மூலம் பேசுகிறேன். அவள் தன் தோழி மூலம் பேசுகிறாள் என்றுதான் அர்த்தம். அவளைப் பார்க்கிறேன் என்றால், என் தோழன் உதவி கொண்டு அவள் தோழியைக் காண்கின்றேன். அந்தத் தோழியின் தோற்றங்களைக்கொண்டு என் மனைவியின் எண்ணங்கள் முதலியவற்றை நிர்ணயிக்கிறேன். அது போலவே என் மனைவி என் விஷயத்தில் நிர்ணயிக்கிறாள். நாங்கள் இருவரும் தனித்தனியே ஒரு பொழுதும் சந்திப்பதில்லை. உணர்வதுமில்லை. தோழி போய்விட்டால் என் மனைவியையே இழந்துவிட்டதாக வருந்துகின்றேன். தவிர, தோழியை மகிழ்வித்தால் என் மனைவியையும் மகிழ்வித்தவனாகின்றேன். இத்தகைய நட்பைப்பற்றி இதற்குமுன் நீங்கள் கேட்டதுண்டா, கனவிலேனும் கண்டதுண்டா?

எனக்கு உயிர் உண்டு. அப்படித்தான் பிறர்க்குத் தோன்றுகிறேன். ஆனால் உண்மை எப்படியோ? என் தோழனுக்கு உயிர் உள்ளளவும் எனக்கும் உயிர் உண்டு. என் தோழன் இறக்கட்டும், பிறகு இவ்வுலகில் நான் எங்கே? யாரும் என்னை எங்கும் அறியமாட்டார்கள். என் இதர நண்பர்கள், என் பெற்றோர்கள், என் மனைவியுங்கூட என் தோழன் இறந்தவுடன் நானும் போய்விட்டதாகக் கூறிவிடுவர். என்னை இழந்துவிட்டதாக வருந்துவர்.

தத்துவ ஞானிகள் நாம் இருப்பதும், வாழ்வதும், நடப்பதும் கடவுளிடத்திலேயே என்று வேதாந்தங் கூறுவர். ஆனால் நானோ என் தோழனிடத்திலேதான் வாழ்கின்றேன். எனக்கு ஆதாரம் அவனே என்று துணிகரமாய்க் கூறுவேன். தத்துவ ஞானிகள் என் கூற்றை மறுக்கட்டும்! ஆனால் அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த திருமூலரிடம் முதலில் யோசனை கேட்டுக்கொண்டு மறுக்கும் யோசனையில் இறங்கட்டும்.

அவனே-என் தோழனே-எனக்கு உயிர்நிலை என்பதால் நான் அவனை எவ்வளவு கண்ணுங்கருத்துமாக வளர்த்துப் பாதுகாத்து வரவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும் அல்லவா? அஸ்திவாரத்தில் ஒரு சிறு கல்லைப் பிடுங்கினாலும் அரண்மனை உடனே விழுந்துவிடும். அதனால் அவனுடைய நலத்தில் நான் கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். அதனாலேயே ஐரோப்பாவிலுள்ள கிரீஸ் தேசத்தில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே என் தோழனுக்குப் பெரு மதிப்புத் தந்து வந்தனர்.

இவ்வளவு அபூர்வமான, இவ்வளவு அத்யாவசியமான தோழனை நான் எப்பொழுது பெற்றேன்? எப்பொழுது நானும் அவனும் தோழமை கொண்டோம்? உலகில் குழந்தை பிறக்கின்றதே, இதுபோல் நானும் பிறந்ததாகக் கூறியிருப்பார்களே, அப்பொழுதே நாங்கள் இருவரும் இணைபிரியாத தோழர்கள்.

உலகில் நட்பு என்பது என்றும் அழியாதது என்று பெரியோரும் கவிஞரும் சிறப்பித்துக் கூறுகிறார்கள். அதன் உண்மை ஆராயாமலே விளங்கும். ஆனால் உலகில் பிறத்தல், வளர்தல், இறத்தல் மூன்றும் தினந்தோறும் சர்வ

சாதாரணமாய்க் காணும் விஷயங்கள். ஆதலால் எங்கள் நட்பும் ஒரு காலத்தில் அழியவே வேண்டியிருக்கும். இவ்விதநட்பு நான் மட்டுமே அடைந்திருக்கவில்லை. என்னைப் போல் இருநூறு கோடி மக்கள் பெற்றிருப்பதாகவும் கேள்வி. இதற்கு முன்னும் கோடானுகோடிப் பேர் பெற்றிருந்ததாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன. அவர்களுக்கு ஒரு விதி, எனக்கு வேறு ஒரு விதியா ?

ஆனல் மறுபடியும் நான் ஒரு தோழனைப் பெறுவேனே ? இந்த ஆராய்ச்சியில் புகுந்துவிட்டால் இந்த வியாசத்திற்கு முடிவே இருக்கமாட்டாது. ஆகவே இதை இவ்வளவிலேயே முடித்துவிடுவது நல்லது.

—] ★ [—

# 4. எனது நண்பர்கள்

'செயற்கரிய யாவுள நட்பின், அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு'

என்று தமிழர் அறிவின் சிகரமாகிய திருக்குறள் நட்பைச் சிறப்பித்துக் கூறுகின்றது. உலகில் நட்பே தேடற்கரிய செல்வம். அதைப் போன்ற பாதுகாவல் மனிதர்க்கு வேறு கிடையாது. ஆதலால் எனக்கு நண்பர் விஷயத்தில் அக்கரை அதிகம். ஆனால் பிறர் தம் நண்பர்களை வெளியிலே போய்த் தேடவேண்டியதுபோல் நான் தேடவேண்டியது இல்லை. நான் கூறப்போகும் நண்பர்கள் அனைவரும், நான் தேடிப் போகாமலே, என் தயவை நாடி என்னிடம் வந்து என் நட்பை விரும்பிப் பெற்றவர்களே. என்னோடு சம்பாஷிக்க விரும்பி, என் அன்பை எதிர்பார்த்து, என் வாசலில் காத்திருப்போர் எத்தனையோ பேர்!

எனது சிநேகிதர் சாதாரணமானவரல்லர்; எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பெற்ற பெரியோரே யாவர். யாரிடம் கூறினாலும், 'இவர்கள் நட்பு எங்கட்கும் வேண்டுமே!' என்று விரும்பி நிற்பர் என்பதில் சந்தேகமில்லை. எனது நண்பர்களை நான் சிறப்பித்துக் கூறுவது தவறாகுமா? தற்பெருமை தவறு, தன்னை வியவாமையே சிறப்பு

என்பது உண்மையே. ஆயினும் சில சமயங்களில் தற்பெருமை நியாயமானதாகவும் அவசியமானதாகவும் இருக்கும் என்பதை மறுக்கஇயலாது. பிறர் என்னைப் பெருமைப்படுத்தவேண்டும் என்பதற்காக நான் என் நண்பர்களைப் பற்றி எழுதப் புகவில்லை. இவர்களின் நட்பை யாவரும் பெறவேண்டாமா என்று கேட்பதே என் நோக்கமாகும்.

எனது நண்பருள் விசேஷ அந்தஸ்துடையவர்களைப் பற்றியே எழுத விரும்புகிறேன். அவர்களிலும் பல வகுப்பினர் உளர். அவர்களில் பூலோகவாசிகளைப் பற்றியே இங்கு எழுதப்போகின்றேன். ஏனெனில் கந்தர்ப்பர், இயக்கர், சித்தர் முதலியோருள்ளும் எனக்கு நண்பர்கள் உளர்.

இந்தியா, பர்மா, மலேயா, இலங்கை ஆகிய இடங்களில் மட்டுமே எனக்கு நண்பர்கள் இருக்கக்கூடும் என்று எண்ணவேண்டாம். ஐரோப்பாக்கண்டத்தில், இங்கிலாந்து முதல் ருஷியா வரையும், நார்வே முதல் இத்தாலிவரையும் என் நண்பர் உளர். அமெரிக்காவிலும் பலர் உண்டு. ஆசியா கண்டத்தில் அரேபியா, பாலஸ்தீனம், பாரசீகம், சீனம், ஜப்பான் முதலிய தேசங்களில் சிலர் உளர். சுருங்கச் சொன்னால் எனக்கு நண்பர் இல்லாத எந்த நாகரிகத் தேசமும் இல்லை.

இவர்களில் சிலர் அரசர், சிலர் மந்திரிகள்-ஆசிரியர் அறிஞர் குழாங்களிலும் எனக்கு நண்பர் உளர். பிரபுக்களும் என் நட்பை விரும்பவே செய்வர். நானும், 'இவர் சமூக அந்தஸ்தில் தாழ்ந்தவர்' என்று யாரையும் விலக்கி விடுவதில்லை, எனக்கு 'நண்பர்' என்னும் ஒரே குலம்தான் தெரியும்.

இவர்கள் வெகு தூரத்தில் அவரவர் நாட்டில் இருந்தாலும் நான் கூப்பிட்டவுடன் - நான் மனத்தால் நினைத்துவிட்டாலும் போதும் - உடனே ஒரு நிமிஷத்தில் ஓடிவந்து என் பக்கத்தில் என் கிருபாகடாட்சத்திற்குக் காத்திருப்பர். ஆகா, இவர்கள் என்னிடம் காட்டும் அன்பும் மரியாதையும்தான் எவ்வளவு!

இவர்களைப் பகலில் மட்டு மில்லாமல் நடு நிசியிலும் அழைக்கலாம். அப்பொழுதும் இவர்கள் பிறர் போல் கண்ணைக் கசக்கிக்கொண்டே முணுமுணுத்து எழுந்து மெல்ல நகர்ந்து வருவதில்லை. நான் விரும்புகிறேன் என்று தெரியவேண்டியதுதான் தாமதம்; உடனே முகமெல்லாம் நகை பூத்து அவசர அவசரமாக வருவர். வந்தவுடன், 'எம்மை அழைத்த காரணம் என்ன?' என்று இரைய மாட்டார்கள். வந்தபின், என் அருகே நோக்கிக் கைகட்டி வாய் பொத்தி அடக்க ஒடுக்கமாக அயலே ஒதுங்கி நிற்பர். நான் ஏதேனும் கேட்க ஆரம்பித்தால்மட்டுமே பேசுவர். நான் அவர் பக்கம் திரும்பாமலே இருந்துவிட்டாலும் அப்படிச் செய்யலாமோ என்று கேட்கவும் மாட்டார்கள்; கோபித்துக்கொள்ளவும் மாட்டார்கள்.

நான் கேட்க அவர்கள் மறுமொழி தரும்பொழுது நான் கோபித்தால் வருந்தமாட்டார்கள். 'பேசியதுபோதும், நிறுத்தவும்!' என்றால் உடனே நிறுத்திவிடுவர். நான் கூப்பிட்டவுடன் வருவர், வந்தவுடன் அவரைப் போகலாம் என்று கூறினாலோ, உடனே போய்விடுவர். இது நியாயமா என்று கேட்டு நிற்பதில்லை. நான் இட்டதே சட்டம். என் இஷ்டப்படி நடப்பதே அவர்கள் விருப்பமும் கடமையும் ஆகும்.

சில வேளைகளில் நான் அவர்களைக் கீழே தள்ளிவிடுவதும் உத்தரவிடுவதும் உண்டு. அப்பொழுதேனும் அவர்கள் மலர் முகம் வாடுவது உண்டோ? கைகேயி காட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டபொழுது காகுத்தன் முகம் விளங்கியதைப்போலவே சித்திரத்தில் அலர்ந்த தாமரைக்கு நிகராக விளங்கும். அடித்தாலும் வைதாலும் எனக்குச் சேவை செய்வதிலேயே அவர்கள் கண்ணுங் கருத்துமாயிருப்பார்கள்.

அல்லும் பகலும் என் அருகிலேயே இருக்கச் சொன்னாலும் என் உத்தரவை மீறமாட்டார்கள். என் வீட்டில் எந்தத் தாழ்ந்த இடமும் அவர்கள் மனத்தைப் புண்படுத்தாது. அவர்களுக்கு ஆகாரம், ஆடை முதலியன வேண்டாம். நிற்க இடம் கொடுத்தால் போதும். அவர்கள் விரும்புவதெல்லாம் என் அன்பு ஒன்றையே.

வெளியே போகும்பொழுதும் அவர்களை அழைத்துப் போகலாம். பேசிக்கொண்டு வரச்சொன்னால் பேசுவர். பேசாமல் இருக்கச்சொன்னால் உடனே வாய்மூடி மௌனமாய் இருந்துவிடுவர். போகின்ற காரியத்தைப்பற்றி யோசனை கேட்டால் கூறுவர். போகின்ற இடங்களைப் பற்றி விசாரித்தால் விடை தருவர். பொழுதுபோக்கக் கதைகள் கூறச்சொன்னால் சொல்லுவர்.

அவர்கள் அறியாத விஷயம் ஒன்றும் இல்லை. அவர்களில் சிலர் கதை சொல்லுவர்; சிலர் கவி பாடுவர்; சிலர் சரித்திர இதிகாசங்களை விஸ்தாரமாக எனக்கு எடுத்து உரைப்பர்; சிலர் வீரர்களைப்பற்றிச் சொல்லி என் இரத்தத்தை வேகமாக ஓடச்செய்வர். சிலர் என் முன் நாடகங்களை நடத்துவர். சிலர் அழகான ஓவியங்கள் தீட்டுவர்;

சிலர் சங்கீத வெள்ளத்தில் மிதக்க விட்டுவிடுவர். சிலர் தத்துவ ஞானிகள்; சிலர் விஞ்ஞான நிபுணர்.

அவர்களில் சிலர் எனக்கு மதி மந்திரிகளாயிருப்பர். சிலர் இடித்துக்கூறும் துணைவராவர்; அதனால் என்னைக் கெடுக்கும் தகைமையவர் யார்? சாதாரண நண்பர்போல் இல்லாமல், எனக்கு இடுக்கண் ஏற்படும்பொழுது அவர்கள், உடுக்கை இழந்தவன் கைபோல், உடனே வந்து உதவுவர். சிலசமயம் வாழ்க்கையில் வழுக்கும் இடங்களில் ஊன்று கோலாய் நிற்பர்.

அவர்கள் வாயில் அவச்சொற்கள் பிறப்பதில்லை. நல்ல, அழகான, அறிவான, ஆனந்தமான விஷயங்களையே அவர்கள் பேசுவர். அவர்கள் உள்ளத்திலுள்ளதில் ஒன்றையும் ஒளிப்பதில்லை. என் பார்வைக்காகத் தம் மனம் முழுவதையும் திறந்து இருண்ட இடங்களில் விளக்கும் ஏற்றிவிடுவர்,

என் மனம் முழுவதையுமே அவர்கள் தம் வயப்படுத்திக்கொள்வர். அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவர்கள் உள்ளத்திலிருந்து எழும் உண்மையின் நாதமாயிருக்கும். அவர்கள் பேச்சினால் நான் உயர்ந்த இலட்சியங்களை மேற்கொள்ளுவேன். உயர்ந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பேன். நம் மனத்தில் நோயில்லையானால் இத்தகைய நண்பர் வேண்டியதில்லை. நம் மனநோய் தீரவேண்டுமானால் இந்த நண்பர்களைத்தவிர வேறு சிறந்த வைத்தியர் கிடையாது. இத்தகைய நண்பர்கள் கிடைக்கப்பெறாதவர்கள் பெரிய மாளிகைகளில் வசிக்கும் செல்வர்கள் ஆயினும் அவர்களைத் தரித்திரமான தனவந்தர் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுக்காக இரங்கவும் வேண்டும்.

என்ன துன்பங்கள் ஏற்பட்டாலும் - என்ன சஞ்சலங்கள் தோன்றினாலும் - அவர்கள் அருகே இருந்து ஆறுதல் மொழிகள் கூறி, உள்ளத்தில் விசேஷ ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கிவிடுவர். அவர்கள் முன்னிலையில் சோர்வு, பயம் எதுவும் தோன்ரு. அவர்கள் உதவியால் தேவலோகம் கூடப் போய்வரலாம்; சூரிய ஒளியில் குளிக்கலாம்; அண்ட கோடிகளிடையில் திரிந்து வரலாம்.

என் வீட்டில் இந்த உயர்ந்த நண்பர்கள் தங்குவதற்காக ஒரு தனி அறை உண்டு. இந்த அறையை நான் பெரியோரின் ஆன்மாக்கள் வாழும் புண்ணிய ஸ்தலமாகவே எப்பொழுதும் மதிப்பேன். இந்த அறைக்குள் நுழைந்துவிட்டாலே போதும் - சுற்றிலும் அறிவு மணம் கமழும். இந்த அறைதான் என்னுடைய சர்வகலாசாலை. என் நண்பர்கள் இங்கே இருக்கும்வரை எனக்கு எளிமை இல்லை. இத்தகைய நண்பர்களைத்தான் பெரிய இராஜ்யங்களைவிட ஏற்றமுடையவர் என்று ஷேக்ஸ்பியர் போன்ற மேதாவிகள் பாராட்டியிருக்கின்றனர்.

இவ்வளவு அபூர்வமான நண்பர்கள் எனக்கு இருப்பது கேட்டு யாரும் அழுக்காறு அடையவேண்டியதில்லை. இவர்கள் யார் என்று தெரிந்துகொண்டால் போதும்; நீங்களும் அழைக்கலாம். உங்களிடமும் இதுபோலவே நடந்துகொள்வர். அப்படிச்செய்வதில் எனக்கு ஆட்சேபமும் கிடையாது.

அவர்கள் உங்களுக்கு உதவும்பொழுதே எனக்கும் உதவமுடியும். அவர்கள் ஒரேசமயம் பல இடங்களில் இருப்பர். அவர்களுக்கு அழிவும் கிடையாது. அதனால் எனக்கும் உங்களுக்கும் ஊழியம் செய்வதுபோலவே நம் சந்ததியாருக்கும் - சந்ததியார் நம்மைப்போல் விரும்பினால் - ஊழியம் செய்வர்.

—]★[—

# 5. பாப்பர் யார்?

மேனாடுகளிலும் சரி, கீழ்நாடுகளிலும் சரி, ஒவ்வொரு நகரத்திலும் வியாபார நிலையங்களும் உத்யோக மன்றங்களும் நிறைந்துள்ள இடம் ஊருக்கு நடுவே இருக்கும். அந்தப் பகுதிக்கே 'நகரம்' என்று கூறுவது ஆங்கில நாட்டார் வழக்கம். அந்த நகரத்தைச் சூழ்ந்து ஜனங்களின் வீடுகள் பல பகுதிகளாக வெகுதூரம்வரை பரந்திருக்கும். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பெயர் உண்டு. சில பகுதிகளில் தனவந்தர் மிகுந்து காணப்படுவர்; சில பகுதிகளில் தரித்திரரே பெருகியிருப்பர். இந்தப் பகுதிகளுக்கும் வெளியே, நகர்ப் புறங்களிலேயே, குபேர செல்வம் படைத்தோரும், அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகள் வகிப்போரும், ஆடம்பரத்தில் அதிமோகம் கொண்டோரும், ஆசிரியர், மருத்துவர், வக்கீல்கள் முதலியவர்களில் தலையாயவரும் வசிப்பதைக் காணலாம்.

தற்காலத்தில் உலகில் அதிக விசாலமானதும், மிகக் கீர்த்திபெற்றதும், வெகு வன்மை உடையதுமான சாம்ராஜ்யம் ஆங்கிலேயர் ஸ்தாபித்துள்ளதாகும். அதற்கு உயிர்நாடி போன்ற தலைநகர் லண்டன். அதில் சமீப காலத்தில் ஒரு பெரிய கோடீச்வரப் பிரபு வாழ்ந்திருந்தார். உலகம்

எங்கணும் கைவிரலிட்டு எண்ணக்கூடிய ஒரு சில வர்த்தக மன்னர்களில் அவர் ஒருவர். அவருக்கு லண்டனிலும் சாம்ராஜ்யத்திலுள்ள பல நாட்டுத் தலைநகரங்களிலும் வியாபார ஸ்தாபனங்கள் உண்டு. அவர் வேறு பல கூட்டு—நிலையங்களில் முக்கிய நிர்வாகஸ்தராகவும் இருந்தார். உலகப் பொருளாதார நாடியின் பரிசோதனையில் மிகச் சமர்த்தர். வியாழனுக்கு சமானமான அறிவுள்ளவர். ஆனால் அவ்வளவு அறிவும் வியாபார தந்திரங்களைக் கையாளுவதற்கே பயன்பட்டு வந்தது. அர்த்த சாஸ்திர விஷயங்களில் ஐயம் எழுந்தால், அரசாங்கமும் சரி, ஆசிரியர்களும் சரி, அவரையே அணுகுவர். செல்வ அபிவிருத்திச் சங்கங்களில் அவருக்கே உயர்ந்த பதவி உண்டு.

அரசாங்கத்தார் அவருக்குப் பல கௌரவப்பதவிகளும் பட்டங்களும் அளித்திருந்தனர். ஜனங்கள் எல்லோர்க்கும் அவர் பெயர் நன்கு தெரியும். நகரசபைத் தலைவர் கூட்டும் பெரிய சபைகளில் பேசும் பெருமைபெற்ற சிலரில் அவரும் ஒருவர். நன்கொடை ஜாபிதாக்களில் அவர் பெயர் முதற்கண் தோன்றத் தவறாது. உத்தியோகஸ்தரும் உன்னத பதவியிலுள்ளோரும் அளிக்கும் விருந்துகளுக்கெல்லாம் அவருக்கு நிச்சயம் அழைப்பு உண்டு.

இத்தகைய மதிப்புப் பெற்றுள்ள பெருநிதிக் கிழவருக்கு லண்டன் மாநகரின் புறத்தில் பிரமாண்டமான, கண்கவர் வனப்பு வாய்ந்த, யாரும் அரசர் அரண்மனைதானோ என்று பிரமிக்கச் செய்யக்கூடிய, ஒரு மாளிகை இருந்தது. அது பல நூறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமிக்கு நடுவே கட்டப்பட்டிருந்தது. கட்டிடத்தைச் சூழ்ந்து காலையில் சூரிய ஒளி பருகி உலவிவர நறுமணம்

வீசும் பூங்காவனங்கள், மாலையில் சந்திரனைக் கண்டு மகிழ்ந்து கதைகள் பேசி நேரங் கழிக்கப் பசும்புல் தளங்கள், நண் பகலிலும் உட்புறம் வெயில் தோன்ருவண்ணம் பலவிதமான மரங்கள் செறிந்த சோலைகளும் உள. வீட்டுக்கு வெளியே பயிலும் பல விளையாட்டுக்களுக்கு ஏற்ற பந்தடி மேடைகள் முதலியவற்றில் எப்பொழுதும் இளைஞரும் பிறரும் விநோதங்கள் கண்டுகொண்டிருப்பர். மாளிகைக்குள் உலகில் காணப்பெறும் விலையுயர்ந்த அலங்காரமான பொருள்கள் யாவும் வெகு அழகாக வைக்கப்பட்டு நேத்திரானந்தம் அளித்துக்கொண்டிருக்கும். 'பில்லியார்டு' விளையாடும் மன்றங்கள், நடனசாலைகள், விருந்தினரை உபசரிக்கும் விசாலமான ஹால்கள் முதலியவற்றைப் புகழாதார் இல்லை.

ஒரு நாள் ஒரு நண்பர் வியாபார விஷயமாக அந்தப் பிரபுவைப் பார்க்கப் போயிருந்தார். பிரபு நண்பருக்குத் தம் மாளிகையின் விசித்திர வேலைப்பாடுகளையும், வெவ்வேறு இடங்களின் மேன்மைகளையும் காட்டி விளக்கிக் கொண்டே வந்தார். நண்பர் எல்லாவற்றையும் பார்த்து முடித்துவிட்டார். 'காப்பி டீ குடிக்க உட்காருவோம்' என்று தனவந்தர் கூறியபொழுது, நண்பர், 'எல்லாம் பார்த்துவிட்டேன். ஆனால் ஒன்றுமட்டும் பார்க்கவில்லையே; தங்கள் புத்தக நிலையம் எதுவோ?' என்று கேட்டார்.

கோடீச்வரர், 'என் புத்தகங்களையா கேட்கிறீர்கள்? அவைகள் நகரத்திலன்றோ இருக்கின்றன' என்று உடனே மறுமொழி தந்தார்.

நகரம் என்றது வியாபார ஸ்தலத்தை, கணக்குப் புத்தகங்களையும் புத்தகங்கள் என்று சொல்வதுண்டு. இந்தப் பிரபுவைவிட வேறு பாப்பார் உண்டோ?

# 6. மனித தரிசனம்

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டிலே தயோஜெனீஸ் என்னும் பெயருடைய ஒரு பெரிய ஞானி இருந்தார். 'அலெக்ஸாண்டர் சக்கரவர்த்தியா யிருப்பதைவிடத் தயோஜெனீஸ் ஞானியாக இருப்பது ஆயிரம் மடங்கு மேன்மை உடையது' என்று உலகப் புகழ் பெற்ற மகா வீரனை அலெக்ஸாண்டர் மன்னன் ஒரு சமயம் கூறியதாகச் சொல்வதுண்டு. அத்துணைப் புகழ்வாய்ந்த அந்தச் சான்றோர் ஒருநாள்-பங்குனி மாதம் பதினைந்தாம் தேதி-பகல் பன்னிரண்டு மணிக்கு லாந்தர் ஒன்றை ஏற்றிக் கையில் எடுத்துக்கொண்டு, அந்த நாட்டுத் தலைநகரமாகிய ஆதென்ஸ் பட்டணத்தின் வீதிகள் வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அதைக் கண்ட அந்நகரத்து மாந்தர், "இதென்ன, பட்டப் பகலில் இவர் விளக்கேற்றிக் கொண்டு, தெரு வழியே செல்கிறாரே, என்ன காரணமோ தெரியவில்லை. இவரோ மகாஞானி. இவரிடம் எப்படிப் போய்க் கேட்பது" என்று அச்சமும் வியப்பும் அடைந்தவர்களாய் ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுள் சிறிது தைரியமுடைய ஒருவர் மெதுவாக அப்பெரியாரை அணுகி வணங்கி மிகுந்த வினயத்

தோடு "அடிகளே, அடியேனுக்கு ஒரு ஐயப்பாடு" என்று தெரிவித்துக் கொண்டார்.

அதற்குத் தயோஜெனீஸ் "அப்பா, உனக்கு என்ன ஐயப்பாடு? சொல்லு கேட்போம்" என்று தமக்கு வழக்கமான கருணை நிறைந்த முறையில் கூறினார்.

"ஐயனே, வேறொன்றும் இல்லை. வெய்யில் கடுமையாக இருந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தாங்கள் விளக்கை ஏற்றிக்கொண்டு வீதி வழியே செல்வதன் காரணம் எங்களுக்கு விளங்கவில்லை. அதுதான் என் ஐயப்பாடு" என்று அந்த மனிதர் விண்ணப்பித்துக்கொண்டார். அதைக் கேட்டதும் பெரியாருடைய முகத்தில் துயர் சுமந்த புன்னகை ஒன்று அரும்பிற்று.

"அப்பா, நீ இந்தக் கேள்வியைக் கேட்பாய் என்று அறிவேன். நான் வெகு நாட்களாக இந்த நாடு முழுவதும் மனிதனைத் தரிசிக்க வேண்டுமென்று தேடி அலைந்து கொண்டிருக்கிறேன்" என்று பெரியார் சொன்ன அளவில், சந்தேக நிவர்த்திக்காகச் சான்றோரிடம் வந்தவர் "எந்த மனிதனைத் தேடுகிறீர்கள்? பெயரைச் சொல்லுங்கள். நான் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று கூறினார்.

"அப்பா, எந்த மனிதனையும் நான் தேடவில்லை, மனிதனையேதான் தேடுகின்றேன். இதுவரை அவன் என் கண்ணுக்குப் புலனாகவில்லை. அதனால்தான் விளக்கேற்றிக் கொண்டு போனால் ஒருவேளை காணக் கிடைப்பானோ என்று எண்ணி இந்தப் பட்டணத்தின் தெருக்களில் அலைந்து கொண்டிருக்கிறேன்" என்று தயோஜெனீஸ் கூறினார்.

அதைக் கேட்ட ஆதென்ஸ் நகரவாசி 'பெரியாருடைய சொல் பெரும் புதிராக இருக்கின்றது' என்று எண்ணிக் கொண்டு அவ்விடம் விட்டு அகன்று சென்றார்.

சாதாரணமாக எல்லா தேசத்துச் சான்றோர்களும் எந்நேரமும் பரம்பொருளையே தேடிக் கொண்டிருப்பதாகச் சொல்லுவர். பிரம்மாவும் விஷ்ணுவும்கூட முறையே இறைவனுடைய முடியையும் அடியையும் தேடுவதாகப் புராணங்கள் கூறும். அயனும், அரியும் தேடியும் தேடொணாத் தேவனைத் தேடிக் கண்டு கொண்டதாகத் திருநாவுக்கரசர் கூறுவதை எல்லோரும் அறிவர். இவ்விதம் நல்லோர்கள் கடவுளை நாடுவதாகச் சொல்லும்பொழுது தயோஜெனீஸ் என்னும் ஞானிமட்டும் கடவுளைத் தேடுவதை விட்டுவிட்டு, மனிதனைத் தேடியதின் காரணம் யாது? கடவுளைத் தேடுவது எளிது, மனிதனைத் தேடுவதுதான் சிரமம் என்று எண்ணினாரா? அல்லது கடவுளைவிட மனிதனே பெரியவனென்று எண்ணினாரா? அல்லது மனிதனை ஆராய்வதே மனிதன் கடமை என்று ஆங்கிலக் கவிஞர் அலெக்ஸாண்டர் போப் என்பவர் கருதுவது போலவே, இவரும் கருதினாரா? அல்லது—

"நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பரமற்கு அது ஆமே"

அதாவது நடமாடும் கோயிலாகிய மனிதனை வணங்குவதே படமாடும் கோயிலிலுள்ள பரமனை வணங்குவதாகும் என்று—திருமூலர் கூறியபடியே இவரும் எண்ணினாரா?

இவர் மனிதனைத்தேடிப் பட்டப்பகலில் விளக்கேற்றிக் கொண்டு போனதைப் பார்த்தால் மனிதனைக் காண்பது எளிதான காரியமன்று என்றும் அவன் அத்துணை அருமை யான பொருள் என்றும் தோன்றுகிறது. அப்படி மனிதன் எளிதில் தரிசனம் தராத அளவு அவ்வளவு அருமையான பொருளாயிருந்தது அந்தக் காலத்தில் மட்டுந்தானா? அது இந்தக் காலத்துக்கும் பொருந்துமா? உலகத்தில் இரண்டு கோடி மக்கள் இருந்த அக்காலத்தில் அருமையா யிருந்தது, இருநூறுகோடிமக்கள் உள்ள இந்தக்காலத்திலும் அருமை தான் என்று அறிஞர்கள் பலர் கூறுகின்றனர். ஆனால், அறிஞர்கள் மனிதனைக் காண்பது அருமையென்று கூறு கிறார்களேயன்றி முடியாத காரியம் என்று கூறவில்லை. மனிதன் அந்தக் காலத்திலும் இருந்தான், இந்தக் காலத் திலும் இருக்கிறான்.

தயோஜெனீஸ் என்ற ஞானி யவன தேசத்தில் வாழ்ந்த அதே காலத்தில், "இளம் பெருவழுதி" என்ற பெய ருடைய பாண்டிய மன்னர் ஒருவர் தமிழ் நாட்டில் இருந் தார். அவரிடம் அவருடைய நண்பர்கள் "இந்த உலகம்- அதாவது மனித இனம்-அழியாமல் நிலைத்திருப்பதன் கார ணம் என்ன" என்று ஒரு நாள் கேட்டனர். அதற்கு அவ் வரசர் பெருமான்

"உண்டால் அம்ம இவ்வுலகம்: இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே: முனிவிலர்;
துஞ்சலும் இலர்: பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனில்

உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்-தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே "

என்று விடை கூறினர், அதாவது 'உலகம் நிலைத்திருப்ப தற்குக் காரணம் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ் பவர் உலகத்தில் இருந்துகொண்டிருப்பதுதான்' என்று கூறினர்.

இவர் அரசராயிருந்தும் மக்கள் இனத்தைக் காப்பவர் அறிவுடையோர் என்றோ, ஆற்றலுடையோர் என்றோ, செல்வமுடையவரென்றோ கூறினரில்லை.

" அறிவினன் ஆகுவது உண்டோ, பிறிதின் நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை "

அதாவது பிறர் நலம் பேணுபவரே அறிவுடையோர், பிறர் நலம் பேணாதவர் மக்கட் பண்பு இல்லாதவர்.

அரம் போலும் கூர்மையினரேனும், மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்

என்பதை இளம்பெருவழுதி அறிவார். இளமையிலேயே பெருவழுதியாயிருந்த இவருக்கு " வேலன்று வெற்றி தருவது " என்பதும் நன்றாகத் தெரியும், அது போலவே " பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள "

என்பதும் அவர் நன்ருக அறிந்த உண்மையாகும். அதனுல் தான் அறிவையோ ஆற்றலையோ செல்வத்தையோ மனிதனுடைய சிறப்புக்குக் காரணமாகக் கூருமல், மற்றவர்களுக்காக உழைப்பதையே மக்கட் பண்பாகக் கூறினுர்.

மனித இனத்தை மனிதர்கள்தான் மடியாமல் காக்க முடியும். அப்படியிருக்க மற்றவர்கட்காக உழைப்பவரே மனித இனத்தைக் காப்பவர் என்று இம்மன்னர் கூறுவதால் மற்றவர்க்காக உழைப்பவரே மனிதர் என்பது புலனுகின்றது. இதையே உலகத்தில் அவதரித்த உத்தமர்கள் எல்லோரும் உரைக்கின்றனர்.

ஆனுல் அறிஞர்கள் கூறுகிருர்களே என்பதற்காக அதை நம்புவோம் என்று நாம் எண்ண வேண்டியதில்லை. நம்முடைய அனுபவத்தின் மூலமாகவும் அவர்களின் கூற்று உண்மைதான் என்று நாம் அறிந்து கொள்ள முடியும். இரண்டு நாள் பட்டினியாக உள்ள ஒரு தாயையும் அவள் குழந்தையையும் ஒரு பக்கம் நிறுத்துவோம்; இரண்டு நாள் பட்டினியாக உள்ள ஒரு பசுவையும் அதன் கன்றையும் மறுபக்கம் நிறுத்துவோம். ஒரு பிடி அன்னத்தைத் தாயின் முன்பும், ஒரு கற்றைப் புல்லைப் பசுவின் முன்பும் வைப்போம். அப்பொழுது என்ன நடக்கிறது என்று பார்ப்போம். பசுவானது தன் கன்றே ஆனுலும் கன்றை முட்டித் துரத்தி விட்டுப் புல்லைத் தானே தின்றுவிடும். ஆனுல் தாயோ தன் வயிற்றை இறுக்கப் பிடித்துக் கொண்டு அன்னத்தைக் குழந்தைக்கே ஊட்டி மகிழ்வாள். இதிலிருந்து மற்றவர் நலத்தை நாடுவதே மக்கட் பண்பு என்பது தெளிவாகும். புல்லைத்தின்ன வொட்டாமல் கன்றைப் பசு துரத்

...லும், கன்று வேறு இடம் போகவும், புல்லைத் தேடிக் கொள்ளவும் முடியும். ஆனால் தாய் குழந்தைக்கு அன்னத்தை ஊட்டாமல் இருந்து விட்டால், குழந்தை வேறு இடம் போகவும் முடியாது; உணவைத் தேடிக்கொள்ளவும் முடியாது. இந்த உண்மையை மனத்தில் வைத்தேதான் இளம்பெருவழுதி என்ற மன்னர் மற்றவர்க் குழைப்பவர் இருப்பதால்தான் மனித ஜாதி அழியாமல் இருக்கின்றது என்று கூறினார் என்று எண்ண வேண்டி யிருக்கிறது.

இத்தகைய மனிதப் பண்புடைய மக்கள் உலகத்தில் இருப்பதாகவே இளம் பெருவழுதி கூறுகிறார். அப்படி அவர் கூறும்பொழுது, அவருடைய காலத்தில் கிரேக்க நாட்டில் வாழ்ந்திருந்த தயோஜெனிஸ் மனிதனைத் தேடப் புறப்படக் காரணம் என்ன? பிறர் நலம் பேணும் பெரியோராகிய மனிதர்கள் இந்த நாட்டில் ஏராளமாக இருந்தனர், அந்த நாட்டில் அருமையாக இருந்தனர் என்று கூற முடியாது. எந்தநாட்டிலும் எந்தக்காலத்திலும் ஒன்றுபோலவே தான் காணப்படுவார்கள். ஆனால், அவர்கள் தேடுவார்க்கே தரிசனம் கொடுப்பவர்கள். அநேக சமயங்களில் அவர்களாகக் காட்சியளிக்க வந்தாலும் நாம் கண்டுகொள்ளாமல் இருந்துவிடுவோம். அத்தகையோரைக் காண வேண்டுமென்ற அளவு கடந்த ஆவலுடையவர்க்கே அவர்களுடைய மாண்பமைந்த தரிசனம் கிடைக்கும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் திருவாரூரில் மாற நாயனார் என்ற பெயருடைய மறையவர் ஒருவர் இருந்தார். அவர் சோம வேள்வி செய்தார். சிவபெருமானே நேரில் வந்து அவி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்

பினுர். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வேண்டுகோளுக்கிணங்கி நேரில் வந்து அவி ஏற்றுக்கொள்வதாகச் சிவபெருமான் வாக்களித்தார். வேள்வி முடிந்து அவி பகிரும் சமயத்தில் மாறநாயனுர் வேள்விச் சாலையில் சிவபெருமானுக்காகக் காத்துக்கொண்டு நின்ருர். பிராமணர்களும் புரோகிதர்களும் சிவபெருமானைத் தரிசிப்பதற்காக மாற நாயனுரைச் சுற்றிச் சூழ்ந்து நின்றனர். அப்பொழுது திடீரென்று ஒரு வேடனும் வேடுவத்தியும் தங்கள் நாய்களுடனும் பன்றிகளுடனும் யாக சாலைக்குள் நுழைந்தனர். அதைக்கண்டதும் அங்கிருந்த மறையவர்கள் எல்லோரும் அவர்களை அடித்துத்துரத்த முயன்றனர். ஆனல், மாற நாயனுரோ தாம் நின்ற இடத்தைவிட்டு நகராமல் சிவபெருமான் வருவார் என்ற திட சித்தத்துடன் நின்றுகொண்டிருந்தார். வேடுவன் அவர் எதிரே சென்றதும் அவர் வேடுவன் கையில் அவியினைப் பெய்தார். வேடுவனுக வந்தவர் சிவபெருமானே. இதுபோல் உறுதியான ஆசை உடையவர்க்கே மனித தரிசனமும் கிடைப்பதாகும்.

இந்த உண்மையையே ரவீந்திரநாத தாகூரும் கீழ்க் கண்டவாறு பொருள்படும் தமது பாடல் ஒன்றில் கூறுகின்ருர்.

> "இருட்டி விட்டது. ஆனல் இன்னும் விளக்கு ஏற்றவில்லை;
>
> எதையோ எண்ணிக்கொண்டு தலையைப் பின்னிக் கொண்டிருந்தேன்;
>
> அஸ்தமன சூரியன் அழகாக ஒளிவீசிக் கொண்டிருந்தான்:

இளைஞரான பிரயாணி தேரைவிட்டு இறங்கி
வந்தார் ;

அவள் எங்கே என்று கேட்டார்.
ஐயா, களைப்புற்ற பிரயாணியே,
அவள் நான் தான் என்று கூறக்கூடாதா ?
கூருமலிருந்து விட்டேன்.

இப்பொழுதோ சாளரத்தினருகில் உட்கார்ந்து,
ஐயோ ஏக்கத்துடன் திரும்பிய இளம்பிரயாணியே
அவள் நான்தான் அவள் நான்தான் என்று
இரவு முழுவதும் புலம்புகின்றேன் ''

ஆகவே மனிதன் எப்பொழுதும் நமக்குத் தரிசனம் கொடுக்கக் காத்துக்கொண்டுதான் இருக்கிருன் ; ஆனல் நாம்தான் அவனைக் கண்டுகொள்ளாமல் இருந்துவருகிரும். அதனல் தான் தம்மைத் தேடி அலையும் சந்நியாசியைக் குறித்துக் கடவுள் "என்னை விட்டுவிட்டு என்னைத் தேடி அலைகிருனே என்னுடைய அடியான்'' என்று வருந்துவதாகத் தாகூர் கூறுகின்ருர்.

''பெரியோர்களைக்காணவிரும்பினேன். அவர்களை நூல்களிலேயே காண முடியுமென்று எண்ணினேன். அவர்கள் என்னைச் சூழ்ந்து ஏழைகளிடையே நிற்பதை அறியாமல் போனேனே ! பண்பாடு பண்பாடு என்று சொல்லும் நாற்கல்வியே இவ்வாறு என்னைக் காணமுடியாமல் குருடாக்கி விட்டது'' என்று அமெரிக்க உளநூற்புலவர் சிகாமணி வில்லியம் ஜேம்ஸ் என்பவரும் இதையே வற்புறுத்துகின்ருர்.

என்ன புண்ணியம் செய்திருந்தேனோ, இந்த மனித தரிசனம் எனக்கு இந்த மாதத்தில் இரண்டு மூன்று முறை கிடைக்கும் பேறு பெற்றேன். ஒருநாள் நான் என்னுடைய காரியாலயத்திலிருந்து கடற்கரைச் சாலைவழியாக வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். அப்பொழுது மழை பெய்துகொண்டிருந்தது. எனக்கு முன்னால் சற்று தூரத்தில் ஒரு ஏழைக் கிராமவாசி மழையில் நனைந்து போய்க் கொண்டிருந்தார். அவர் திடீரென்று நின்று சாலையில் எதையோ பொறுக்கினார். ஏதேனும் பணம் காசு மடியிலிருந்து கீழே விழுந்து சிதறிவிட்டனவோ, இவ்வளவு சாவதானமாக இந்த மழையில் பொறுக்கிக்கொண்டிருக்கிறாரே என்று எண்ணினேன். ஆனால், அவர் பக்கத்தில் போய்ப் பார்த்தபொழுது அவர் பணங்காசு எதையும் பொறுக்கவில்லை, சாலையில் கிடந்த முள் கொம்புகளைத் தான் பொறுக்கிக்கொண்டிருந்தார் என அறிந்தேன். அவர் அந்தக் கொம்புகளை ஒன்று விடாமல் பொறுக்கி அவைகளைச் சாலைக்கு அப்புறம் யார் காலிலும் படமுடியாத இடத்தில் போட்டுவிட்டுப் போனார். இவ்வளவும் சொட்டச் சொட்ட மழையில் நனைந்துகொண்டே செய்தார். இதைக் கண்டதும் தயோஜெனீஸுக்குக் கிடையாத மனித தரிசனம் எனக்குக் கிடைத்துவிட்டதாக எண்ணினேன். அதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே என் வீடுவந்து சேர்ந்தேன்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன் அரசாங்கக் கல்லூரிக்கு முன்னுள்ள நடைமேடையில் நடந்து வந்து கொண்டிருந்தபொழுது பாதையின் நடுவில் ஒரு பெரிய கல் கிடந்தது. அதனால் நான் சிறிது விலகி நடந்தேன். அதே கல்லைக் கண்டு சாலையின் ஓரத்தில் நடந்துகொண்டிருந்த

முஸ்லீம் கிழவர் ஒருவர் நடைமேடைக்கு வந்து அந்தக் கல்லை எடுத்துத் தூரத்தில் எறிந்துவிட்டுச் சென்றார். அதைக் கண்டு வெட்கம் அடைந்தேன். 'இத்தகைய காட்சிகள் தினந்தோறும் எண்ணிறந்தன ஏற்பட்டும் இன்னும் மனிதனாகாமலிருந்து கொண்டிருக்கிறோமே' என்று வருந்தினேன்.

இதை எண்ணியே ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்னும் விஞ்ஞான சிகாமணி "மனிதனுக்கும் அளவு எது என்றால் தன்னைத் தானறப் பெறும் அளவே" என்று வற்புறுத்தினார்.

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்

என்பது தமிழ் மறை.

—] ★ [—

# 7. பாரத தேவியின் பாத தரிசனம்

ஆண்டவன் அடியார்கள் அல்லும் பகலும் அனவரதமும் ஆவலுடன் தேடி அலைவது பரமாத்மாவின் பாதாரவிந்தங்களைக் கண்டு களிப்பதற்கே. முடியைக் காண ஒரு பொழுதும் முயல்வதில்லை. பக்தகோடிகளுக்குப் பாத தரிசனமே, அந்தமில்லாத, இன்பமான, அழிவில் வீடு அளிக்கும் என்பது பெரியோர் துணிபு. மக்கள் மனக் கவலை மாற்றும் மார்க்கம் தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தல் ஒன்றே என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ தேவர் உறுதி கூறுகிறார்.

அப்படியானால் துன்ப நிவாரணம் அருளும் துணையடிகள் காண்பது எங்கே? இறைவன் இணையடிகள் இருக்கும் இடம் எது? வேத சாஸ்திரங்கள், தர்ம நூல்கள், புராண இதிகாசங்கள் பரமன் பதமலர்களின் மணங் கமழும் இடத்தைப்பற்றிப் பல பல வர்ணனைகள் கூறுகின்றன. 'தேடிக் கண்டுகொண்டேன்' என்று சந்தோஷத்தோடும் தைரியத்தோடும் அப்பர் ஸ்வாமிகள் பாடுகிறார். ஆனால், எங்கே கண்டுகொண்டதாகக் கூறுகிறாரோ அங்கே காண்பது அறிஞர்க்கு மட்டுமே இயலும்.

சாதாரணமான பாமர மக்கள் சர்வேச்வரன் சரண கமலங்களை அடைவது எப்படி? தங்கள் கஷ்டங்களை மாற்றிக்கொள்வது எங்ஙனம்? பாமரர்களும் எளிதாகக் கண்டுகொள்ளுமாறு கவியரசர் ரவீந்திரநாதர் ஓர் அற்புத மான அழகான பாடல் பாடியிருக்கிறார். உலகப் பிரசித்தி பெற்ற 'கீதாஞ்சலி' என்னும் கிரந்தத்தில் அதைக் காண லாம். 'ஆண்டவன் பதமலர் காணும் இடம். தாழ்ந்தவர், வீழ்ந்தவர், தரித்திரர் இவர்களிடையே தான்' என்று தெளி வாக அவர் விளக்கியிருக்கிறார்.

கடவுள் அடியார்க்கு அவனுடைய பாதங்களைக் காண அடங்கா ஆசை எழுவது இயற்கை. அதுபோல் பாரத தேவியின் அடியார்க்கு அவளுடைய பாத தரிசனத்தில் ஆசை எழுமல்லவா? ஆதலால், கவியரசர் கீதத்தைப் படித்தபொழுது - அது பல வருஷங்களுக்கு முன் - அன்னை அடியினை காண ஆவல் உண்டாயிற்று. ஆனால் காண்பது எங்கே? ஆண்டவன் பாதமுள்ள இடத்திலேயே அவனு டைய சக்தியாகிய அன்னையின் பாதமும் இருக்கும் என்று எண்ணினேன்.

ஆதலால் கவியரசர் கூறிய குறிப்பை உள்ளத்திற் கொண்டு, அன்னையின் அடிகளைத் தேட ஆரம்பித்தேன். தாயின் சரணங்கள் தங்குமிடம் தாழ்ந்தோர், தரித்திரர் வாழும் இடம் அல்லவா? உழவர் வீடுகளில் நுழைந்து பார்த்தேன். பள்ளர் பறையர் சேரிகளில் புகுந்து தேடி னேன். தோட்டிகள் குடிசைகளிலும் துருவினேன். அங்கே அன்னையின் அடிகளைக் காண முடியவில்லை. ஏதோ அவற் றின் அம்சத்தில் ஒரு சிறிதே இடையிடையே காண முடிந்தது.

இவர்களிலும் தாழ்ந்தோர், தரித்திரர் யார்? அவர்களிடையேதான் பாத தரிசனம் கிடைக்குமோ? அத்தகையோரைக் காண்பது எங்கே? எப்பொழுது? இவ்வாறு நாள்தோறும் எண்ணிக் கவலையுற்றேன். பலவிதமான இடங்களுக்குப் போக எனக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதுண்டு. ஆனால் எங்கும் தாழ்ந்தோரைக் காண முடியவில்லையே! பாத தரிசன பாக்கியம் எங்கு வாய்க்குமோ?

அன்னை பாரதத்தின் அழகு முடியை எளிதில் கண்டு விட்டேன். அதைக் காண நான் தேடி அலையவில்லை. அதுவாகவே நான் இருக்குமிடம் தேடிவந்து காட்சி அளித்து விட்டது. நாங்கள் யாரும் மகாத்மா காந்தியடிகளுக்கு அழைப்பு அனுப்பவில்லை. பதினைந்து வருடங்களுக்கு முன், அவராகவே எங்கள் ஊருக்கு எழுந்தருளினார்; நாங்கள் கண்குளிரக் கண்டுகொண்டோம்.

எளிதில் காணக் கிடைத்து விட்டது திருமுடி-ஆனால் அடியிணையோ? பத்து வருஷ காலம் தேடி அலைந்தும் பாக்கியம் கைகூடவில்லையே என்று பெரிதும் மனம் வருந்தினேன். ஆனால், என் பேரதிர்ஷ்டம்! நினையாத சமயம் முன்வந்து நின்று விட்டது.

அந்த அற்புதக் காட்சியை என்னென்று சொல்லுவேன்! ஆம், இதோ என் இறைவியின் ஜோதி அடிகள்! தேசபக்தர்க்கும் தேடக் கிடையாத திரவியம்!

இணையடிகண்டதில் எல்லையற்ற இன்பம்தான். ஆனால் அதன் கோலத்தைக் கண்டதில் முடிவிலாத் துன்பம். இன்பமும் துன்பமும் ஒன்றோடு ஒன்று பின்னி நின்ற இந்த அதிசயக் காட்சியை எங்கே கண்டேன், தெரியுமா?

சில வருஷங்களுக்கு முன் மானாமதுரைக்குப் போயிருந்தேன். அப்பொழுது கண்டேன் - எங்கே? தாமரைத் தடாகத்திலா? பூ மலி சோலையிலா? மாட மாளிகையிலா? கூட கோபுரத்திலா? கடை வீதியிலா? நடை பாதையிலா? கல்விச்சாலையிலா? நீதிமன்றத்திலா? இவை போன்ற இடங்களில் அன்று. ஒரு கள்ளுக்கடை அருகிலேயே கண்டேன்.

ஒரு சாக்கடை- ஓடை. அதன் கரையில் சில குடிசைகள். கள்ளுக்கடையில் நின்று இந்தக் குடிசைகளைச் சிறிது தூரத்தில் கண்டதும் அவற்றைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. உடன் வந்த நண்பர்களுடன் அங்குப் போனேன். அங்கு என்ன கண்டேன்?

பத்து அடி நீளம், ஐந்து அடி அகலமுள்ள குடிசை. இடையில் ஒரு சுவர். சுவர் குறுக்கே நின்றதால், குடிசை இரண்டு அறைகளாக விளங்கியது. சுவரின் உயரம் மூன்று அடி இருக்கும். ஓலைக்கூரை. ஓர் அறைக்குப் பனையோலைக் கதவு. மற்றதற்குக் கதவுமில்லை, வாசலுமில்லை. இந்த அரண்மனை யாருடையது?

இந்த இரண்டு அறைகளில் ஒன்று பன்றிக் குறவனுடைய வீடு; மற்றொன்று அவனுடைய அந்தப் பவித்திரமான மிருகத்தின் மாளிகை, ஒன்று குடிசைதான் - மற்றது மாளிகைதான் - சந்தேகமில்லை.

குடிசைக்குள் நுழைந்தேன். ஐந்தரை அடி மனிதன் இரண்டரை அடியாகக் குறுகியே உள்ளே நுழைய இயலும். அந்த ஐந்தடிச் சவுக்கத்தில் ஒரு பக்கம் அடுப்பு.

அதன் அருகில் சட்டி பானைகள். மற்றொரு பக்கம் மற்றத் தட்டுமுட்டு சாமான்கள். இவை எவை என்று வர்ணிக்க வேண்டுமா ?

மாளிகைக்குள் நுழைந்தேன். அங்கே அடுப்பில்லை. பானை பண்டங்கள் இல்லை. தட்டவும் முட்டவும் சாமான் கள் இல்லை. இப்பொழுது யார் உயர்ந்தவர்? குடிலில் வசிப் பவரா அல்லது மாளிகையில் வசிப்பவரா? பன்றி தன் மனைவி மக்களுடன் யாதொரு கஷ்டமும் இல்லாமல் சந் தோஷமாகப் படுக்கலாம், புரளலாம், தூங்கலாம். ஆனால் அந்தப் பன்றியின் தலைவனோ அவன் மனைவி மக்களோ?

இந்தக் காட்சி ஒரு நாளும் என் இதயத்தை விட்டு அகன்றதில்லை. ஆனால் இதைக் காண அடிக்கடி எனக்கு வாய்ப்பதில்லை. ஒருநாள் சமீபத்தில் நானும் என் மனைவி யும் சில நண்பர்களுடன் காரைக்குடி பெண் பாடசாலை அருகிலுள்ள தெருவில் ஒரு காரில் போய்க் கொண்டிருந் தோம். அப்பொழுது மறுபடியும் மானாமதுரையில் அன்று கண்ட சுந்தரக் காட்சி !

அதைக் கண்டதும் என் மனைவி, 'ஐயோ இவர்கள் யார்? இவர்களுக்கு விமோசனம் எப்பொழுது? இதுவும் இறைவன் திருவிளையாடலோ?'' என்று துன்பக் குரலில் கேட்டாள். எங்களுடன் இருந்த ஒரு பெண்மணி, ''இவர்க ளுக்கும் ஆண்டவன் அனுதினமும் படி அளக்கவே செய் வான் !' என்று மனத்தில் எவ்விதச் சஞ்சலமுமின்றிக் கூறி னாள். ஆனால், இதைக் கேட்டு என் மனைவியின் மனம் சமாதானம் அடையவில்லை.

'இங்கே என்ன காண்கிறாய்? அன்னையின் பாதம்! இவர்களுக்கு விமோசனமா? பாரத தேசம் முழுவதற்கும் விமோசனம் வந்தால்தான் இவர்களுக்கும் விமோசனம் இவர்கள் விமோசனம் அடைந்தால்தான் தேசம் முழுதும் விமோசனம் அடைந்ததாகும். அது வரைப் பாதத்தில் இந்த வறுமைத் தளையைப் பூட்டிக் கொண்டிருக்கும் பாரத தேவி விமோசனம் அடைந்ததாகச் சொல்ல முடியாது'' என்று மெதுவாக அவள் காதில் கூறினேன்.

அப்பொழுதும் அவளுக்கு ஆறுதல் இல்லை 'என்றைக்கு அந்த அருணோதயம்? என்றைக்கு அந்த அருணோதயம்'' என்று கூறிக்கொண்டே வந்தாள்.

—]★[—

# 8. மகாத்மா கண்ட வழி

**ந**மது இந்தியா தேசம் இருநூறு வருஷ காலமாக இங்கிலாந்துக்கு அடிமையாக இருந்ததையும் அதன் காரணமாக இந்தியமக்கள் சொல்லொணு இன்னல்கள் அனுபவித்து வந்ததையும் எல்லோரும் அறிவார்கள்.

'முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்

வழங்குதல் தவா'

வளத்ததாயிருந்த நாடு பரம தரித்திரமாய்விட்டதை எண்ணி எண்ணித் தாதாபாய் நௌரோஜி போன்ற பெரியோர்கள் கண்ணீர் வடித்தார்கள்; இந்த நிலைமையை மாற்ற என்ன செய்யலாம் என்று ஆராய்ந்தார்கள்; இறுதியில் 1885-ஆம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபையை நிறுவிஞர்கள்.

ஆயினும் தரித்திரம் அடிமையானதனுல்தானே ஏற்பட்டது, அதனுல் அடிமை நீங்கவேண்டும், சுயராஜ்யம் அமைக்கவேண்டும் என்று காங்கிரஸ் சபையைக்கண்ட பெரியோர்கள் கேட்கவில்லை. ஏதோ சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று மட்டுமே அரசாங்கத்திடம் கேட்டு வந்தார்கள்.

ஏன் இப்படிச் செய்தார்கள்? ஏன் சுயராஜ்யம் வேண்டும் என்று கேட்கவில்லை? அதற்குக் காரணம் ஆங்கில அரசாங்கத்தார் ஆயுதபல முடையவர்களாக யிருந்ததும், நம்முடைய ஆயுதங்களை யெல்லாம் பறித்துவிட்டு நம்மை வெறுங் கோழைகளாகச் செய்திருந்ததும்தான்.

யாரேனும் நம்மிடமிருந்து ஒரு பொருளை அநியாயமாக அபகரித்துக்கொண்டால் அதை அவரிடமிருந்து திரும்பப் பெறுதற்கு உலகத்தில் அறிவாளிகள் இதுவரை கண்ட வழிகள் இரண்டுதான். ஒன்று, உடம்பு சக்தியை உபயோகித்தல். மற்றொன்று, அறிவைப் பயன்படுத்தல்.

நம்முடைய பொருளைப் பறித்துக்கொண்டவரைவிட நம்மிடம் அதிக பலமிருக்குமானால் அதை உபயோகித்து நம்முடைய பொருளை அவரிடமிருந்து பிடுங்கிக்கொள்ளலாம். நம்மைவிட அதிக பலமுடையவராயிருந்தால் அவரை விட அதிக பலமுடையவரை நமக்குத் துணையாக அழைத்துக்கொண்டுபோய் நம்முடைய எதிரியைக் கொன்று நம் பொருளை அடையலாம்; கோர்ட்டில் வழக்குத் தொடுத்து இழந்த பொருளைப் பெறுவதும் இம்முறையைச் சேர்ந்ததே.

இந்த விதமாக நாம் பலத்தை உபயோகித்து இங்கிலாந்திடமிருந்து நாம் இழந்துபோன சுதந்திரத்தைப்பெறுவது சாத்தியமில்லை. நம்மிடம் ஆயுத பலமிருந்தால் அல்லவோ அந்த வழியில் சென்று வெற்றி காண இயலும்? ஆதலால் தாதாபாய் போன்ற பெரியோர்கள் அறிவு வழியை மேற்கொள்வது என்று முடிவு செய்தார்கள்.

அந்த அறிவு வழி யாது? பொருளை அபகரித்தவனிடம் போய் அவன் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக

விழுந்து வணங்கி, அப்பா ! அரசே ! நான் மிகுந்த துன்பப் படுகிறேன், இரக்கங்கொண்டு ஆதரிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொள்வதுதான் அந்த வழி, அப்படி வேண்டிக் கொள்ளும் பொழுதும் அபகரித்தவனிடம் 'அபகரித்து விட்டீர், அது அடாது, அநியாயம்' என்று கூறுதல் ஆகாது. அப்படிக்கூறினால் அவருக்குக் கோபம் உண்டாய் விடும். அவர் மனம் இளகமாட்டார். அதனால், "எப்படியோ என்னுடைய பொருள் தங்களிடம் வந்து சேர்ந்துவிட்டது; அதைத் தாங்கள் தயை கூர்ந்து எனக்குத் தந்தருள வேண்டும்" என்றுதான் வினயமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

அதை எண்ணித்தான் அக்காலத்தில் சுரேந்திரநாத் பானர்ஜி போன்ற காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் 'இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் உள்ள தொடர்பு இறைவனாலேயே ஏற்பட்டது' என்றே கூறிவந்தார்கள். ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ்சமயத்தில் காங்கிரஸ் மகா சபையைக் கூட்டி இராஜவிஸ்வாசத் தீர்மானத்தை முதலில் எழுந்து நின்று நிறைவேற்றிப் பின்னரே தங்கள் விண்ணப்பத் தீர்மானங்களை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துக்கொள்வார்கள்.

ஆயினும் இதனால் அவர்கள் பெற்ற பலன் யாது? அரசாங்கத்தார் "தீர்மானங்கள் வந்து சேர்ந்தன, வேண்டுவன செய்வோம்" என்று பதிலளிப்பார்கள். ஏதோ சில சில்லறை நன்மைகளை மட்டுமே செய்வார்கள். இத்துணையேனும் இரங்கினார்களே என்று நம்முடைய பெரியோர்கள் மகிழ்வார்கள். அவ்வளவுதான்.

ஆனால் 'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த' மாதிரியாக அரசாங்கத்தார் தாங்கள் செய்துவரும் அட்டூழியங்களுக்குச் சிகரமாகப் பஞ்சாபில் கனவிலும் எண்ணமுடியாத பல அக்கிரமங்களைச் செய்தார்கள். செய்ததோடு நிற்காமல் செய்தவர்களுக்கு வீரமானமும் அளித்தார்கள்,

இவையெல்லாம் கண்ணுற்றதும் இந்தியத் தலைவர்களுக்கு ஏற்பட்ட கோபத்துக்கும் வருத்தத்துக்கும் அளவில்லை. ஆயினும் அவர்களால் என்ன செய்ய முடியும்? ஆயுதமோ இல்லை. அறிவுகொண்டு எத்தனை முறை என்ன கூறி வேண்டினும் அரசாங்கத்தார் அசைந்து கொடுப்பதாயில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்கள்.

அந்தச் சமயம் நம்முடைய நாட்டில் நியாய உணர்ச்சியுடைய ஒரு ஆங்கிலப் பாதிரியார் இருந்தார். அவருக்குப் பின்னால் மகாத்மா காந்தியடிகள் "தீனபந்து" என்ற அரிய பெயரைச் சூட்டிப் போற்றினார். அவர்பெயர் சி. எப். ஆண்ட்ரூஸ்.

அவர் இங்கிலாந்து தேசத்திலிருந்த பெரிய சரித்திர ஆசிரியரான ஸர். ஜான் ஸீலி என்பவர் எழுதிய "இங்கிலாந்து விரிந்த முறை" (**Expansion of England**) என்னும் நூலைப் படித்தார். அதில் ஸீலி "இங்கிலாந்தின் இரும்புப் பிடியிலுள்ள வரை இந்தியாவுக்கு விமோசனம் கிடையாது" என்று கூறி அதற்குரிய காரணங்களை விளக்கியிருந்தார். அப்படியானால் இந்திய மக்கள் ஆங்கில ஆட்சி

யில் நாளுக்கு நாள் ஓய்ந்து மாய்ந்து நாசமாகப் போகவேண்டியது தானு ' என்று ஆண்ட்ரூஸ் ஆலோசித்தார். ஆம், அப்படித்தானே தோன்றுகிறது? இந்தியர்களிடம் ஆயுதம் இல்லை ; அதனுல் சேனு பலம்கொண்டு ஜெயிக்க முடியாது. ஆங்கில உத்யோகஸ்தர் மீது வெடி குண்டை எறிந்து கொல்ல நினைக்கிருர்களே பயங்கரவாதிகள், அதுவும் பயன் படப்போவதில்லை. ஓர் ஆங்கில உத்யோகஸ்தன் மடிந்தால் அந்த ஸ்தானத்தில் ஒன்பது ஆங்கிலேயர்கள் வந்து குதித்து விடுகிருர்களே. அப்படியிருக்க வெடிகுண்டால் விளையப் போவது யாது மில்லை. ஆயுதமில்லாததால் அறிவை உபயோகிப்போம் என்று காங்கிரஸ் தலைவர்கள் எண்ணுகிருர் கள். ஆனுல் அவர்கள் நாற்பது வருஷகாலமாக காங்கிரஸ் சபை மூலம் விண்ணப்பங்கள் வண்டி வண்டியாக அனுப்பி யும் என்ன பலனைக் கண்டார்கள் ?

ஆகவே பறிக்கப்பட்ட பொருளைப் பெறுவதற்குச் சாதாரணமாக உபயோகிக்கப்படும் இரண்டு வழிகளும் இந்தியர்களுக்குப் பயன்படுவதாக இல்லையே ; அப்படியானுல் ஸர் ஜான் ஸிலி கூறியவாறு ஆங்கில ஆட்சியால் இந்தியா நாசமடையவேண்டியது தானே ; இதுதானு கடவுள் நியதி என்று ஆண்ட்ரூஸ் எண்ணி வருந்திஞர்.

அந்தச் சமயந்தான் காந்தியடிகள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். சோர்ந்து போயிருந்த இந்தியத் தலைவர்களையும் மக்களையும் தட்டி எழுப்பிஞர்.

''இழந்துபோன பொருளை அடைதற்கு நீங்கள் கூறுவது போல் இதுவரை இரண்டு வழிகளையேதான் மேற்கொண்டு வருகிருர்கள். ஆனுல் மூன்ருவது வழியும் ஒன்று

இருக்கிறது. நீங்கள் கூறும் இரண்டு வழிகள் வெல்லவும் செய்யும். தோற்கவும்செய்யும். ஆனல் நான் கூறும் வழியோ வெல்லுமே யன்றித் தோற்காது. ஆயுத வழியைக் கைக் கொள்ள உடல்பலம் வேண்டும். விண்ணப்பவழியைக் கைக் கொள்ள அறிவுபலம்வேண்டும். ஆனல் நான் கூறும் வழியை ஐந்து வயது சிறுவருங்கூடக் கையாளலாம். அதுதான் ஆன்ம வழி" என்று கூறினர்.

ஆம், நாம் மறந்துதான் போய்விட்டோம். மனிதனிடம் இரண்டு சக்திகள்மட்டுமே உள என்று எண்ணியது தவறுதான். இந்த இரண்டு சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஆன்ம சக்தி என்று ஒன்று இருப்பதை நாம் அறவே அலட்சியம் செய்துவிட்டோம்.

ஆயினும் நாம் ஆன்ம சக்தி நினைவை நீண்ட காலமாக அகற்றியிருந்தபடியால் காந்தியடிகள் கூறியதை நம்மால் உடனே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆன்ம சக்தியாவது ஆங்கிலேய சாம்ராஜ்யத் தளையை அறுப்பதாவது என்றுகூறி நம்முடைய அறிஞர்கள் எல்லோரும் எள்ளி நகையாடினர்கள்.

ஆனல் காந்தியடிகள் அதற்காகச் சோர்வுருமல் நாடெங்கும் அஹிம்சா தர்ம உபதேசத்தை இடைவிடாமல் செய்து வரலானர். அதன் பயனக காங்கிரஸ் மகாசபையானது சத்யாக்கிரக ஆயுதத்தை ஏற்றுக்கொண்டு அதன் துணையால் இப்போது அசாத்தியம் என்று அறிஞர்களால் முடிவு செய்யப்பட்ட காரியத்தைச் சாத்தியமாகச் செய்து விட்டது. இந்தியா தேசம் இங்கிலாந்தின் இரும்புப் பிடியிலிருந்து விடுதலைபெற்று விட்டது.

அது மட்டுமன்று. இப்பொழுது உலகத்திலுள்ள பெரியோர்கள் எல்லோரும் இனிமேல் உலகத்துக்கு உண்டாகும் நோய்களைத் தீர்க்க காந்தியடிகள் கண்ட வழி ஒன்றுதான் கை கண்ட சஞ்சீவி மருந்து என்று எண்ண ஆரம்பித்து விட்டார்கள். அப்படியே அந்த வழியை அனுஷ்டிப்பதானால் பூலோகம் அமரலோகம் ஆய்விடும். அப்படி அமரலோகத்தை பூலோகத்தில் உண்டாக்குவதற்காகக் காந்தியடிகளுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றும் அடியார்கள் அனைவருக்கும் என் தாழ்மையான வணக்கம்.

—] ★ [—

# 9. காந்தி கற்பித்த கலை

நான் சென்னைப் பல்கலைக்கழகத்திடம் எம். ஏ. பட்டம் பெற்றவன். எம். ஏ என்பது மாஸ்டர் ஆப் ஆர்ட்ஸ் என்னும் ஆங்கிலச் சொற்றொடரின் சுருக்கம். அச்சொற்றொடரின் பொருள் கலைகளில் வல்லவன் என்பதாகும். இதை எழுதியதும் எத்தனை கலைகளில் நீர் வல்லவர் என்று கேட்டு விடவேண்டாம். இன்ன கலைகள் என்று கூருததால் எல்லாக் கலைகளிலும் வல்லவன் என்றுதான் அர்த்தமாகும்.

அப்படியானால் எனக்கும் என்னைப்போல் எம். ஏ. பட்டம் பெற்றவர்கட்கும் எல்லாக்கலைகளையும் கற்றுக் கொடுக்கிருர்களா என்ருல் அதுதான் இல்லை. ஒருவருக்குச் சரித்திரம், ஒருவருக்குத் தத்துவம் என்று இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு கலை வீதம் தான் கற்றுக்கொடுக்கிருர்கள். அப்படியிருக்க ஏன் கலைகளில் என்று பன்மைப் பதத்தை உபயோகிக்கிருர்கள் என்று கேட்கலாம். அது எனக்கும் விளங்காத விஷயம்தான்.

சரி அதுதான் போகட்டும், ஒரு கலை கற்றுக்கொடுப்பதாகக் கூறுகிருர்களே. அதையேனும் சரியாகக் கற்றுக் கொடுக்கிருர்களா? அதுவுமில்லை. எந்தக் கலையைக் கற்றுக் கொடுப்பதாகக் கூறுகிருர்களோ அந்தக் "கலை" யைக்

கற்றுக் கொடுப்பதில்லை. அந்தக்கலை சம்பந்தமான விஷயங்களை மட்டுமேதான் கற்றுக்கொடுக்கிறார்கள். அந்தவிஷயங்கள் உண்மையானவைதானு, ஏற்றுக்கொள்ளத் தகுந்தவையா என்று ஆராய்ந்து உண்மை காணக்கூடிய அறிவு தருவதுமில்லை. அந்த அறிவை உண்டாக்கிக்கொள்வதற்கான திறமையைத் தருவதுமில்லை. இது நம் நாட்டுப் பாடசாலைகளில் மட்டுமே என்று எண்ண வேண்டாம். சகல நாடுகளிலும் நடப்பது இதுவேதான். அதனால்தான் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர், "கல்வி அதிகாரிகளுடைய நோக்கமெல்லாம் பல விஷயங்களைக் கற்றுக் கொடுப்பதேயன்றி அறிவை வளர்ப்பதோ, அறிவதறிந்து சுயமாக உண்மை காண்பதற்கான வழிகளைக் காண்பிப்பதோ அன்று" என்று கூறுகிறார். "அரசாங்கத்தின் குறிக்கோள் மக்களிடம் தொழில்திறமை உண்டாக்குவதேயன்றி விரிந்த நோக்கு உண்டாக்குவதன்று" என்றும் அவர் கூறுகிறார்

அதனால்தான் இலக்கியம் கற்பவரிடம் இலக்கியம் என்பது யாது, அதை எதற்காகக் கற்கவேண்டும், அது வாழ்வில் எந்த விதத்தில் பயன்படும் என்று கேட்டால் சரியான விடை கூறமாட்டார். அவர் இலக்கியம் கற்பதெல்லாம் பரீட்சையில் தேறுவதற்காக மட்டுமே. அதனாலேயே கல்வி கற்பவரில் பெரும்பாலோர் பட்டம் பெற்றபின் தாங்கள் கற்ற இலக்கியங்களைக் கண்ணெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை. கண்ணெடுத்துப் பார்ப்பவரும் இலக்கியம் என்பது எதற்காக ஏற்பட்டதோ அதற்காகப் பயன்படுத்தாமல் வேறு காரியங்களுக்கே பயன்படுத்துவர். திருக்குறள், கம்பராமாயணம் போன்ற தலை சிறந்த இலக்

யங்களைக் கற்றாலும் அவற்றைப் பிரசங்கம் புரியவும் கட்டுரை எழுதவும் தர்க்கம் செய்யவுமே பயன்படுத்துகின்றோம். ஆனால் இலக்கியங்களை இவ்விதமாக மட்டுமே உபயோகிப்பவர்கள் இலக்கியத்தால் அடையவேண்டிய பயனை அடைந்தவராகார் என்று ஆர்னல்ட் பென்னட் என்னும் பெருநாவலாசிரியர் தமது "இலக்கியச் சுவை" என்னும் எழில் மிகுந்த சிறு நூலில் கூறுகின்றார்.

இலக்கியத்தைப் பயனுறப் படித்தவன் என்பதற்கு இரண்டு அடையாளங்கள் கூறுகின்றார். ஒன்று அழுக்காறு கோபம் முதலியன எழாவண்ணம் மனத்தை அடக்குவது. ஆம், அதை எண்ணியேதான் நம்முடைய தாயுமானவரும், "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றுமறிவில்லாத என் கர்மத்தை என் சொல்கேன், மதியை என் சொல்லுகேன், வெல்லாமல் எவரையும் மருட்டிவிடவகை வந்தவித்தை என்முத்தி தருமோ," என்று வருந்துகிறார்.

ஆர்னல்ட் பென்னட் கூறும் இரண்டாவது அடையாளம் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்தக்கூடிய இலக்கியப் பகுதிகள் நினைவுக்கு வருவதாகும். ஏதேனும் சொத்து சம்பந்தமாக என் தம்பி என்னுடன் சண்டையிடுவானானால் அப்பொழுது, ராமனைக் காட்டுக்குப் போகும்படி தசரதர் சொன்னதாகக் கைகேயி ராமனிடம் சொன்னபொழுது அவன், "மன்னவன் பணியன்றாகில், நும்பணி மறுப்பனோ, என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ," என்று அவளிடம் சொன்ன

மொழிகள் என் நினைவுக்கு வந்து எனக்கு அறிவு புகட்டா திருப்பின் நான் கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்த வன் என்று புகழ் பெற்றிருப்பினும் யாது பயன் ?

அதுபோல என்னைவிடச் சகல அம்சங்களிலும் தாழ்ந் தவர் யாரேனும் என்னை இகழ்ந்தால் அப்பொழுது நான் உள்ளங்கவர்ந்தெழுந் தோங்கும் சினத்துக்கு ஆளாகாமல், "சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்" என்னும் அருமைத் திருக்குறள் என் நினைவிற்கு வந்து எனக்கு அமைதி தராதிருப்பின் என் குறள் ஞானம் எதற்கு ஆகும்?

விஞ்ஞானம் கற்ற எம். ஏ. யின் விஷயமும் இது போன்றதே. விஞ்ஞான விஷயங்கள் 'வேணத்தனை' கற்றிருப்பார். அவற்றைப் பயன்படுத்தி விதவிதமான சௌகரியங்கள் உண்டாக்குவதற்கான அறிவையும் படைத்திருப்பார். ஆயினும் அவரிடம் விஞ்ஞான உணர்ச்சி உண்டாயிருக்குமோ என்றால் அதுதான் சூன்யம். விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியரிடம் விஞ்ஞான உணர்ச்சி உண்டாயிருப்பின், சூரிய கிரகணத்தன்று தர்ப்பைப் புல்லை எடுத்துக்கொண்டு கடற்கரைக்குப் புறப்படுவாரா ?

தத்துவ நூல் கற்கும் கலாவல்லவரும் இதுபோலவே நடந்துகொள்கிறார். "அவர் கற்றதெல்லாம் தத்துவ சாத்திரப் பிரச்னைகளைப்பற்றிச் சர்ச்சை செய்வதொன்றே" என்றும் "ஆனால் உள்ளத்தை அடக்கியவரே உண்மையான தத்துவ சாஸ்திர வல்லவர்" என்றும், ஆல்டூஸ்

ஹக்ஸ்லி என்னும் உலகப் பிரசித்தி பெற்ற ஆங்கில அறிஞர் தமது "குறிக்கோளும் வழியும்" என்னும் நூலில் கூறுகின்றார்.

காண்ட், நீட்சே, ஹெகல் என்ற ஜெர்மன் தத்துவ அறிஞர்கள் அதிகமான கீர்த்தி பெற்றவர்கள்தான்; அற்புதமான அறிவு படைத்தவர்கள்தான்; ஆனால் அவர்கள் தத்துவ உணர்ச்சி உடையவர்களாயிருந்தார்களா? இல்லை. நீட்சே உணவை அளவுக்கு மிஞ்சி உண்டுவிட்டு நோயால் வருந்துவார். காண்ட் நண்பர்கள் இறக்கும் தறுவாயிலுங்கூட அவர்களைப்போய்ப் பார்க்க மாட்டார், ஹெகல் தம்முடைய தத்துவ நூலே தலை சிறந்தது என்று சாதிப்பார்.

ஆகவே, பல்கலைக் கழகங்கள் பகட்டான பட்டங்கள் பலபலவாக வழங்கினும், கற்பதெல்லாம் நிற்பதற்கே என்னும் தனிப் பெரும் விஷயத்தைமட்டும் கற்றுக்கொடுக்கிறார்களில்லை. இக் காலத்தில் அதிகமான கலை வல்லார் காணப்படும் நாடு அமெரிக்காதான். அந்த நாட்டில் பிரின்ஸ்டன் என்னும் மிகச் சிறந்த பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக இருக்கிறார் விஞ்ஞான சிரோமணியான ஐன்ஸ்டீன் என்பவர். அவர் தமது நண்பர் ஒருவர்க்கு எழுதிய கடிதமொன்றில், "ஆம் கல்வியா? கல்வியை அளவுக்கு அதிகமாகத்தான் கற்றுக்கொடுக்கிறார்கள், அமெரிக்கப் பாடசாலைகளில். ஆனால் கல்வி கற்பிப்பதற்குரிய ஒரே அறிவான முறை, தம்மைப் பார்த்து மாணவர்கள் நடந்து கொள்ளுமாறு ஆசிரியர் தமது வாழ்க்கையை நடத்துவதே" என்று கூறுகிறார்.

எங்கும் நூற்கல்வி அதிகம்தான்; எங்கும் கலை என்பதே பேச்சு. ஆனால் எல்லாக் கலைகளுக்கும் அடிநிலையான கலையைத்தான் காணோம். 'எந்தக் கலை மனிதனை மனிதன் ஆக்குமோ அந்தக் கலையைக் கற்பிக்கும் பல்கலைக் கழகத்தைக் காணோம்' என்று மகாத்மா காந்தி அடிக்கடி கூறி வந்தார்.

ஒரு சமயம் காந்தியடிகள் திரு. ஜி. ராமச்சந்திரனுடன் கலைகள் சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தபோது, "அப்பா, எனக்கு வயதாயிற்று. நான் கூறுவது இதுதான்: தூய வாழ்வே உண்மையானதும் உன்னதமானதுமான கலையாகும்" என்று கூறியிருக்கிறார். இந்தக் கலையைத்தான் அவர் இரவு பகலாக இந்திய மக்களுக்குக் கற்பித்து வந்தார்.

காந்தியடிகள் என்னைப்போல் எம். ஏ. பட்டம் பெற்ற கலை வல்லுநர் அல்லர். சாதாரண மெட்ரிகுலேஷன் பரீட்சை மட்டுமே தேறியவர். ஆயினும் அவரே உண்மையான கலாவல்லவர்.

அவரே கூறுகிறார், "நான் சாத்திரங்களைப் படியாதவன், ஆயினும் சாத்திரங்களின் உட்கருத்தை அறிந்தவன் என்று தைரியமாகக் கூறுவேன். நான் கலைகளைக் கற்காதவன். ஆயினும் என் வாழ்வு உண்மையிலேயே போதுமான கலை நிரம்பியது என்று தைரியமாகக் கூறுவேன்" என்று.

மனிதன் மனிதனாக வாழ வேண்டிய முறையில் வாழ்வதே கலைகளின் உயிர் நாடி. அதுவே அறிவின் சிகரம்

அது யாதெனில் தன்னைத் தான் அறப்பெறுவதே யாகும். அது எளிதான காரியமன்று. ஆனால் அதைக் கொண்டு அது சாத்தியமானதன்று என்று எண்ணவேண்டியதில்லை. மக்களில் ஒருவர்க்குச் சாத்தியமானது எல்லோருக்கும் சாத்தியமானதே.

சுயநலம் விட்டுப் பொது நலம் கருதும் மனிதன் ஆவதற்கு காந்தியடிகள் கூறும் முறை எளியவாழ்க்கையை மேற்கொள்ளுவதாகும். எளிய வாழ்க்கை என்பது பிறர் உழைப்பை உபயோகியாமல் வாழ்வதே யாகும். தாம் முதன் முதலில் எழுதிய தமது "இந்திய சுயராஜ்யம்" என்னும் நூலில் எளிய வாழ்க்கையை வாழ்ந்து அதை விளக்கும் "எளிய வாழ்க்கை" என்னும் நூலை எழுதியுள்ள எட்வர்ட் கார்ப்பெண்டரைக் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உண்மையை எண்ணியேதான் காந்தியடிகள் பிறந்த சகாப்தத்தில் நானும் பிறக்கக் கொடுத்து வைத்தேன் என்று மகிழும் ஐன்ஸ்டீன், "நான் தினந்தோறும் நூறு முறை மறவாமல் நினைவு கூர்ந்து கொள்வது யாதெனில் பிறர் உழைப்பே என் உயிர்நிலை என்பதும், பிறர்க்கு உழைப்பதே என் கடன் என்பதுயாகும்" என்று கூறுகிறார்.

அவரைப்போல அநுதினமும் ஞாபகமாக வாழ்ந்து வந்தால் காந்தியடிகள் கூறும் அடிநிலைக் கலை வாழ்வு கைகூடுவதாகும். அங்ஙனம் எளிய வாழ்க்கை வாழ்பவரே உண்மையில் வாழ்பவர் ஆவர். அவர்கள் மக்கள் மட்டுமல்லர். தேவர்களுமே யாவர்.

"வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்". இவ்வாறு வாழ்வது சிரமமே யாயினும் இவ்வாறு வாழ வேண்டுமென்ற எண்ணம் இடைவிடாமல் நம் மனத்தில் இருந்து கொண்டிருந்தால் போதும். அந்த எண்ணம் உடையவரே பண்பாடு உடையவர் என்று பவிஸ் என்னும் சிறந்த ஆசிரியர் தமது 'பண்பாடு' என்னும் நூலில் கூறுகிறார்.

இந்த எண்ணம் -- எளிய வாழ்க்கை வாழ வேண்டும், பிறர் உழைப்பை உபயோகிப்பதை குறைக்கவேண்டும், பிறரிடம் அனுதாபம் உடையவராக நடந்து கொள்ள வேண்டும், சுய நலத்தைச் சுருக்க வேண்டும் என்ற இந்த எண்ணம் உடையவர் சில சமயங்களில் தவறினாலும் பாதகமில்லை. "வீழாமையன்று பெருமை, விழுந்தொறும் தாழா தெழுதலே" என்று ஆங்கிலக் கவிஞர் கோல்ட்ஸ்மித் கூறுவது அவர்க்கு ஊக்கமளிக்கும்.

அந்த எண்ணம் சிறிதுமில்லாதவர் எந்தப் பட்டங்கள் பெற்றிருப்பினும் அவர்கள் "அணிகள் வேய் பிணத்தோடொப்பார், அன்னவர் வாழ்க்கை பாழாம்" என்று பாரதியார் கூறுகின்றார்.

ஆதலால் இந்திய மக்களாகிய நாம் அனைவரும் காந்தியடிகள் கற்பித்த இந்தக் கலையைக் கைக்கொள்வோமாக.

— o —

# 10. மகாத்மாவின் மாண்பு

மகாத்மா காந்தியடிகள் மறைந்து விட்டார். அவர் பிரிந்த செய்தி கேட்டு உலக மக்கள் அனைவரும் துயரக் கடலில் ஆழ்ந்து போனார்கள். மக்கள் அனைவரும் ஒருமுக மாக காந்தியடிகளைப் போற்றுவதற்குக் காரணம் யாது?

" உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன் "

என்று நமது தமிழ்மறை கூறுகின்றது. வாயாற் பொய் கூருமலும் மெய்யாற் பொய்யான காரியங்களைச் செய்யா மலும் கவனமாக நடந்து கொள்ளலாம். அப்படி நடந்து கொண்டால் மக்கள் நம்மை உண்மையானவர் என்றே எண்ணுவார்கள். இப்படி மொழியாலும், செயலாலும் பொய்யாது ஒழுகினும் உளளத்தில் பொய்யனுக இருக்கலா மல்லவா? ஆகவே புறத்தே பொய்யாமை நிகழ்ந்தால் மட்டும் போதாது. அகத்திலும் பொய்யாமை நிகழவேண்டு மென்று வற்புறுத்துகிறுர் வள்ளுவர்.

ஆனல் புறத்து நிகழ்வதைத்தானே நாம் அறியமுடியும்? அகத்தே நிகழ்வது யாருக்குத் தெரியும்? காந்தியடிகள் பொய் கூறவில்லை; பொய்யாக நடக்கவில்லையென்று தைரி

யமாகக் கூறலாம். ஆனல் அதுபோலவே அவர் உள்ளத்தி லும் பொய்யில்லாதவர் என்று தைரியமாகக் கூறமுடியுமா? உள்ளத்து நிகழ்வது அனைத்தையும் அணுவளவும் ஒளியா மல் உரைத்தால் தானே உள்ளத்தால் பொய்யாதவர் என்று உரைக்க இயலும்?

காந்தியடிகள் அவ்வாறு உள்ளத்து நிகழ்வதையெல் லாம் அணுவளவும் ஒளியாமல் உரைத்திருப்பதையும் காண் கிரேம். அவர் தமது வாழ்க்கையில் நாணக்கூடியதாக வுள்ள நிகழ்ச்சிகளை யெல்லாம் வெளிப்படையாகப் பச்சை பச்சையாகத் தமது " ஆத்மசோதனை " என்னும் நூலில் கூறியிருக்கின்ருர்.

சென்னையில் பாதிரியாராக இருந்த டாக்டர் ஒயிட்ஹெட் என்பவர் அந்த நூலைப்படித்துவிட்டு, " ஆமா! இப்படி உள்ளத்தி லுள்ள கறைகளை யெல்லாம் ஒளியாமற் கூறக் கூடியவர் வேறு யாருளர்? இவரை மகாத்மா என்று கூறு வதற்கு இந்தப் பண்பு ஒன்றே போதும் " என்று 'இந்து'ப் பத்திரிகையில் எழுதினர்.

ஆம்; அதனல்தான் காந்தியடிகளை மகாத்மா என்று கூறுகின்ரேம். அதனல்தான் அவர் உலகமக்கள் அனைவ ருடைய உள்ளத்திலும் அரியாசனம் பெற்றுவிட்டார்.

'சத்தியம்' என்பது தமிழில் மூன்று சொற்களால் உணர்த்தப்பெறும். உள்ளத்தில் நிகழ்வதை உண்மை என்றும், வாயில் நிகழ்வதை வாய்மை என்றும், மெய்யில் நிகழ்வதை மெய்ம்மை என்றும் நம் ஆன்ரேர் வகுத்துள்ள

ளர். இந்தச் சிறப்பு வேறு எந்த மொழியிலும் கிடையாது என்றே நம்புகிறேன்.

சத்தியத்தின் இந்த மூன்று பண்பிலும் இணையற்றவராக இருந்தார் மகாத்மா காந்தியடிகள். இந்தச் சிறந்த பண்பினையே நாம் அனைவரும் கடைப்பிடிக்கவேண்டும். அதுதான் மறைந்த அப்பெரியார்க்கு நாம் செய்யக்கூடிய நன்றி யாகும். அதற்குரிய ஆற்றலையும் அறிவையும் ஆண்டவன் அருள்வானாக.

— o —

# 11. சுதந்திரத்திற்குச் சுருக்க வழி

சுமார் இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னர் இங்கிலாந்து தேசத்தில் இரண்டாவது சார்லஸ் என்பவர் அரசாண்டுகொண்டிருந்தார். அவர் ஜனங்களுக்கு நன்மை செய்யும் செங்கோல் மன்னராய் இருக்கவில்லை. குடிகளின் பணத்தை வீணான விஷயங்களில் ஏராளமாக விரயம் செய்வதையே வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார். அதனால் தேச மக்களுக்கு அவரிடத்தில் வெறுப்பு அதிகம். ஆயினும் அவருடைய தவறான நடைமுறைகளைப் பகிரங்கமாகக் கண்டிக்க யாரும் துணியவில்லை.

ஆனால் அந்தச் சமயத்தில் ஆன்ட்ரூ மார்வெல் என்னும் ஒரு கவிஞர் பெருமான் இருந்தார், அவர் பாடுவதில் சமர்த்தர். பார்லிமெண்டு அங்கத்தினராகவும் இருந்தார். ஆனால் அவர் அதிகமாகப் பேசுவதில்லை. அவருக்குப் பேசுவது தான் சிரமம்; எழுதுவது சிரமமே இல்லை. அவர் யாரைக் குறித்தானாலும்சரி, எந்த விஷயத்தைப்பற்றி யானாலும் சரி, உள்ளத்தில் தைக்கும்படியான விதத்தில் கேலிசெய்து எழுதுவதில் வல்லவர். அவர் ஒருவர்தான் அரசரின் அநீதச் செயல்களைக் கண்டித்து எழுத ஆரம்பித்தார்.

சார்லஸ் அரசருக்கு மார்வெலை நன்ருய்த் தெரியும். அவருடைய வல்லமையை நன்கு உணர்ந்திருந்தார். அதனல் அவருடைய மொழிகளுக்கு அதிகமாக அஞ்சினர். அவரை வாய்திறவொட்டாமல் அடக்குவது எப்படி என்று பல நாட்களாக யோசித்து வந்தார். ஒன்றும் புலப்படவில்லை. மார்வெலின் கட்டுரைகளுக்கு எதிராகக் கட்டுரைகள் எழுதச் சொல்ல விரும்பினர். அதற்குத் தக்க ஆற்றல் வாய்ந்த அறிஞர் வேறு யாரும் இல்லை. ஒருவர் இருவர் இருந்தாலும் மார்வெலோடு போருக்கு நின்று தோல்வியுற விரும்ப மாட்டார். மார்வெல் எழுதுவதும் உண்மை நிறைந்ததாக இருக்கும் பொழுது அதை மறுத்துரைப்பது எப்படி?

சிறையிலிட்டு வாயை மூடிவிடலாம் என்ருல், அதுவும் இயலாத காரியம். மார்வெல் சட்டசபை அங்கத்தினர். சபையில் கௌரவ ஸ்தானம் பெற்றவர். ஜனங்களின் பிரதிநிதி. தேச மக்களால் பெரிதும் போற்றப்படுபவர். அவர் மீது கை வைத்தால் உடனே பல அனர்த்தங்கள் விளைந்துவிடும். ஜனங்களைப் பகைத்து முதலாவது சார்லஸ் பட்ட பாட்டை அதற்குள் மறந்துவிடப்போமோ?

ஆனல், இப்படியே மார்வெலை எழுதிக்கொண்டிருக்க விட்டுவிடலாமா? மார்வெல் எழுத எழுத மக்கள் மனத்தில் ராஜத்துவேஷம் தோன்றிவிடுமல்லவா? மக்கள் கிளம்பிவிட்டால் அரசருக்குப் புகலிடம் ஏது? பழைய மன்னரைத் தலையிழக்கச் செய்த ஆலிவர் கிராம்வெல் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களில் ஒருவரல்லரோ ஆண்ட்ரூ மார்வெலும்?

இங்ஙனம் யோசித்து ஒரு நாள் சார்லஸ் அரசர் தம் பிரதான மந்திரி டான்பி பிரபுவை அழைத்து, 'மார்வெல் எழுதுவதைப் பொறுக்க முடியவில்லை. அவரை அடக்கிவிட வேண்டுமே, அதற்கு வழி என்ன? நீர் என்ன செய்வீரோ, அறியேன். எப்படியாவது அவரை நம் வசப்படுத்திவிட வேண்டும்' என்று முறையிட்டுக்கொண்டார். மார்வெலை ஊமையாக்கி விடுவதில் அரசருக்குள்ள அக்கறை அமைச்சருக்கும் உண்டு.

அரசன் அனுமதி அளித்துவிட்டதால் டான்பி பிரபு ஆனந்தமாய் மார்வெல் வீட்டைத் தேடிப் புறப்பட்டார். ஆனால் அவருக்குக் கவிஞர் வசித்துவந்த வீடு இருக்குமிடம் தெரியாது. மார்வெல் என்ன மாளிகையில் வாழ முடியுமோ? அவர் பரம தரித்திரர். பாடகர் நிலைமை எந்தக் காலத்திலும் அப்படித்தானே. அதோடு அவர் மக்கள் சார்பாய் நின்றவர். சர்க்கார் தயவு பெறாதவர். அதனால் அவர் ஹல் நகரத்திற்குப் பிரதிநிதியாயிருந்த முறையில், அந்நகரார் கொடுத்த ஒரு சிறு தொகைகொண்டே அரிதில் காலங் கழித்துவந்தார். ஆதலால் அவருடைய சின்னஞ் சிறு குடிசை ஏதோ ஓர் ஒதுக்கமான மூலை முடுக்கில்தானே இருக்க முடியும். டான்பி பெரிய பிரபு, பிரதம மந்திரி. அவருக்கு ஊரிலுள்ள மூலை முடுக்குகள் தெரியுமோ? அதனால் மார்வெல் இருந்த வீட்டைக் கண்டுகொள்ள மிகவும் சிரமப்பட்டார்.

இறுதியில் வீட்டைக் கண்டுபிடித்துத் திடீரென்று உள்ளே நுழைந்தார். இக்காலத்தில் பல பிரமுகர்கள் தங்கள் அழகான மாளிகைகளை—'காட்டேஜ்' 'வில்லா'—

[illegible]கள் என்றே அழைக்கும் வழக்கத்தை அறிவோம். ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்க்காகத் துரியோதனனிடம் தூது சென்றபொழுது முதலில் விதுரன் அரண்மனையிலேயே போய் இருந்தார். அப்பொழுது விதுரன், 'தாங்கள் வந்து தங்க இந்தக் குடில் என்ன மாதவம் செய்ததோ!' என்று கூறி, கண்ணனை வணங்கினன் என்று படித்திருக் கிறோம். ஆனால், மார்வெல் அவ்விதம் கூற முடியுமோ? அவர் வாழ்ந்த இடம் உண்மையிலேயே சிறு குடில். சிறு குகை என்று கூடச் சொல்லலாம்.

டான்பி பிரபு குடிசைக்குள் கால் வைத்ததும், மார்வெல் எதிர்பாராத ஒருவர் வரவே அதிக ஆச்சரியமடைந்தார். வந்தவரை வரவேற்று, 'இந்த விஜயம் பெற எனக்குள்ள பாக்கியத்திற்கு எது காரணமோ?' என்று மிக வினயமாய்க் கூறினர்.

'அரசரிடமிருந்து வருகின்றேன்' என்று பிரபு மறு மொழி தரவே, மார்வெல், 'அப்படியா, அரசர் பெருமான் திருவுளம் யாதோ?' என்று கேட்டார். 'சமஸ்தானத்தில் தாங்கள் ஒரு கௌரவ ஸ்தானம் வகிக்குமாறு விரும்பு கின்றார்' என்று மந்திரி மொழிந்தார். அதைக் கேட்டதும் மார்வெல், 'அரசர் ஆணையை அறிய ஆனந்தம். ஆனால் அந்த ஸ்தானத்தைக் கௌரவத்தோடு வகிக்க முடியுமோ? அரசருக்கு விரோதமாக வாக்களித்தால் ராஜத் துரோகம். அரசர் ஆணைப்படியே நடந்துவிட்டால் மக்கள் பாதிக்கப் படலாம். ஆதலால், அரசர் என்னை ராஜ விசுவாசமுள்ள வர்களில் ஒருவன் என்று கருதுவாரானல் அதுவே எனக் குப் போதும். அவர் அருளும் பதவியை மறுப்பது அவ

ருடைய நலத்திற்கே என்பதையும் கூறுங்கள்' என்று கூறினர்.

உத்தியோகம் வேண்டாம் என்று மார்வெல் மறுத்து விடுவார் என்று ஒருநாளும் எதிர்பாராத பிரபுவுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் விளங்கவில்லை. ஆயினும் மந்திரி அல்லவா? திடீரென்று ஆயிரம் பவுன்கள்கொண்ட ஒரு பணப்பையை எடுத்து மேஜை மேல் வைத்து, 'அரசர் இதைத் தங்கட்கு அனுப்புகிறார்; வேறு ஏதேனும் தேவையானல் வேண்டும்பொழுது தகவல் கொடுக்கவும் வேண்டுகிறார்' என்றார்.

மார்வெல் குலுங்கக் குலுங்க நகைத்தார். இதென்ன இப்படி என்னைக் கேலி செய்ய எண்ணுகிறீர்களா? எனக்கு என்ன தேவை? இருக்க இந்தக் குடில் உளது, உணவிற்கோ இதோ நிற்கும் இந்த வீட்டுக்காரியைக் கேளுங்கள்' என்று சொல்லிக் கொண்டே அந்த அம்மானை நோக்கி, 'அம்மா எனக்கு உணவாக நேற்று என்ன தந்தீர்கள்?' என்று வினவினர்.

'நேற்று ஒரு துண்டு இறைச்சி—'

'இன்று என்ன?'

'இன்று அதில் மீதியுள்ளது.'

'சரி, நாளைக்கு அதிலுள்ள எலும்பை ஸூப் செய்து குடிப்பேன், போதாதா?' என்று மந்திரியிடம் கேட்டார். மந்திரி என்ன கூறுவார்! ஒன்றும் சொல்ல நாவெழவில்லை. சுதந்திர ஜோதியைக் கண்டு திகைத்துப் பிரமித்து நின்று விட்டார். பின்னர் சிறிது நேரம் சென்றதும், ஒன்றும் மொழியாது வெளியே போய்விட்டார்.

—oOo—

# 12. தங்குவது எங்கே?

மக்கள் வேண்டுவது இன்பம். ஆனால் உலகமோ துன்பத்தையே தந்து நிற்பதாய்த் தோன்றுகிறது. ஆழ்ந்து மூழ்கித் தவிக்கும் துன்ப சாகரத்தினின்று மக்களைக் கரையேற்றி ஆனந்த வாழ்வு அளிப்பதற்காக அவதரித்துள்ள பெரியோர் பலர். அல் வழி நீங்கி அற நெறி நின்று அன்பு செய்வதே அவர்கள் கூறும் ஆனந்த மார்க்கம். அவர்களில் ஒவ்வொருவரும் இந்தத் தனிப் பெரும் உண்மையை அறிவதற்கு நியாயங்களையும், அதை நம்புவதற்கு நிரூபணங்கள் அதை அனுஷ்டிப்பதற்கு விதிகள் முதலியன குறித்து வேறு வேறு விதமாக வியாக்யானங்களையும் கூறியுள்ளார். அந்த வியாக்யானங்களே சமயங்கள் என்று கூறப் பெறும். உலக நன்மைக்காக இவ்வுண்மைகளை எடுத்துக் காட்டி இதோபதேசம் செய்து மக்களை ஈடேற்ற வந்த உலக ரட்சகர்களில் இயேசு கிறிஸ்து ஒருவர்.

அவர் சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருஷங்கட்கு முன் அரேபியாவிலுள்ள பாலஸ்தீனத்தில் வாழ்ந்திருந்தார். அவர் ஸ்தாபித்த மதத்தைப் பின் பற்றும் அடியார்கள் கோடானு கோடிப் பேர் உலக முழுவதிலும் உளர். உலகில் தற்சமயம் காணப்பெறும் ஐம்பெரும் சம

யங்களில் கிறிஸ்துவ மதமும் ஒன்று. கிறிஸ்து, 'மனந் திரும்புங்கள் பாவத்தை விட்டொழியுங்கள், பாவ மன்னிப்புப் பெற்றால் மட்டுமே பரலோக ராஜ்ய வாழ்வு கிடைக்கும். என்னை நம்புங்கள்' — என்று உலக முழுவதும் பறை சாற்றினர். ஆண்டவன் விரும்பவது ஆசார அனுஷ்டானங்கள் அல்ல, மனத்துக்கண் மாசிலராய் மனிதர்க்கு அன்பு செய்தலேயே என்று அவர் உபதேசஞ் செய்தார். ஆசார அனுஷ்டானங்களில் மூழ்கியிருந்த புரோகிதர்கள் இதைப் பொறுக்காமல் இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்று தீர்த்தனர்.

ஆனால், உண்மை என்றும் வன்மையுடையது அன்றோ? அதனால் அவர் இறந்த சில வருஷங்களுக்குள்ளாகவே அவருடைய சமயம் வளர்ந்தோங்க ஆரம்பித்தது. நாளடைவில் ஐரோப்பாக் கண்ட முழுவதும் பரவி விட்டது. அப்பொழுது கிறிஸ்துவ மத பீடம் இத்தாலி நாட்டிலுள்ள ரோமாபுரியில் நிறுவப் பெற்றது. மத குருவுக்குப் பெயர் போப். இயேசு இறுதி நேரத்தில் தம் சிஷ்யர்களில் ஒருவராகிய பீட்டரிடம், 'தெய்வலோகத்தின் திறவுகோலைத் தந்து போனதாகவும், அந்தத் திறவுகோல் போப்பிடம் இருப்பதாகவும் ஐதீகம். ஆதலால், போப்பின் அருளைப் போற்றினால், ஆண்டவன் அருளைப் பெற இயலும் என்பது மக்களின் நம்பிக்கை. உலகத்தில் அவரே கடவுளின் பிரதிநிதி. அதனால் மக்களைப் போலவே அரசர்களும் அவர் ஆணைக்கு அடங்கியே நடந்து வந்தனர். எவ்வளவு பெரிய வீர சூரர்களாயிருந்தாலும், எந்தச் சக்கரவர்த்தியுங்கூட அவர் ஆணையிலிருந்து அணுவளவும் பிறழச் சற்றும் துணிவதில்லை. கிறிஸ்தவ உலகம் முழுவதற்கும் அவரே தலைமை அதிபதி.

இங்ஙனம் நடைபெற்றுவரும் நாளில் ஜெர்மனி தேசத்தில் மார்ட்டின் லூதர் என்னும் பெயருடைய ஓர் அறிஞர் இருந்தார். அவர் சிறு வயதிலேயே சகலகலாநிதி என்னும் பட்டம் பெற்றவர். எனினும் அதன் மூலம் கிடைக்கக் கூடிய புகழ், செல்வம், பதவி முதலிய அனைத்தையும் வெறுத்தார். பாவத்தில் ஈடுபட்டு வருந்தும் மக்களைப் பரமேச்வரன் பாதாரவிந்தங்களில் கொண்டு சேர்க்க விரும்பிப் பாதிரியார் வேலையை மேற்கொண்டு துறவியானார். அவர் தினந்தோறும் பிரசங்க மாரி பொழிந்து, மக்களின் மனத்தில் பாபங்களைப் பற்றிக் கசப்பு உண்டாக்கி, அவர்களை நல்வழியில் உய்த்து வந்தார்.

அப்பொழுது போப்பாயிருந்தவரும் அவருடைய சீடர்களும் அறநெறி வழுவி, உலக இன்ப அனுபவங்களில் ஆழ்ந்து, களியாட்டயர்ந்து, வீண் காலட்சேபம் செய்து வந்தனர். அதனால் அவர்களுக்குப் பெரும் பொருள் தேவையாயிருந்தது. அதற்கு ஒரு யுக்தி செய்தனர். 'பாப மன்னிப்புச் சீட்டுக்கள்' என்ற சீட்டுக்கள் எழுதப்பட்டன. அவற்றில் போப் கையொப்பமிட்டு, அவற்றைப் பாதிரியார்கள் வசம் கொடுத்து, ஊர் ஊராய்ப் போய் விற்றுவர அனுப்பினர். பணம் கொடுத்து அவற்றை வாங்கி வைத்துக் கொண்டால் பாவங்கள் மன்னிக்கப்பெற்றுப் பரம ராஜ்யத்திற்குள் யாதொரு தடையுமின்றிப் போகலாம் என்று மக்கள் எண்ணினார்கள். இது ஒரு சுருக்க வழி அல்லவா? ஜனங்கள் இந்தச் சீட்டுக்களை ஏராளமாக வாங்க ஆரம்பித்தனர். 'பாவங்களை விட்டு விலகுங்கள்' என்று லூதர் கூறினார் 'பாவ மன்னிப்புச் சீட்டு வாங்கி விட்டோம்' என்று மறுமொழி தந்தனர் ஜனங்கள்.

'இனிப் பாவங்களைச் செய்யலாம். எவ்வித யோசனையும் வேண்டியதில்லை. பணம் மட்டும் உண்டானால் போதும், எல்லாப் பாவங்களும் எளிதில் மன்னிக்கப் பெற்றுப் போகும்' என்ற எண்ணம் மக்கள் மனத்தில் எழுந்து வருவதை லூதர் கண்டார். கலக்க மடைந்தார். சத்தியம் மங்கி விடும். தர்மம் குன்றி விடும், தவறு பெருகி விடும் என்று அஞ்சினர். பாவ மன்னிப்புச் சீட்டு பாவ அனுமதிச் சீட்டாக அல்லவோ அமைந்துளது என்று ஆலோசிக்கலானர். 'இது இயேசு கிறிஸ்துவின் இதோபதேசத்திற்கு முற்றிலும் விரோதமானதல்லவா? இது கடவுள் பெயரால், இயேசுவின் நாமத்தால், எள்ளளவும் நாணமின்றி இயற்றப்படும் வஞ்சகச் செயல் அல்லவா?' என்று வருந்தினர்.

இதை எதிர்ப்பதே இறைவன் அடியார்களுடைய கடன் என்று தெரிந்து கொண்டார். ஆனல், சக்ரவர்த்திகளுக்கும் சக்ரவர்த்தியாய், சர்வவல்லமையும் பொருந்தியவராயுள்ள போப்பை எதிர்க்கச் சாத்தியப்படுமா? எவ்விதமான தண்டனையும் விதிக்கப் போப்பிற்கு அதிகாரமுண்டு. அதைத் தடுக்க வல்லார் யார்? வேறு தண்டனைகள் தரா விடினும் கிறிஸ்துவ சங்கத்தினின்று விலக்கி விடுவாரே! அப்பொழுது மக்களிடை வசிக்கவும் இடம் கிடையாதே! பிறர் உதவி சிறிதும் இல்லாமற் போகும் தம்மைக் கொன்றாலும் கேள்வி கேட்பவர் இருக்க மாட்டாரே! இவை யனைத்தையும் லூதர் நன்கு அறிவார். ஆயினும் அவர் எதிர்க்கவே தீர்மானித்தார்.

ஆயிரத்து முந்நூற்றுப் பதினேழாம் ஆண்டு, அக்டோபர் மாதம் 31 - ஆம் தேதி காலை, வித்தன்பர்க் என்னும்

பெரிய நகரத்திலுள்ள கீர்த்தி பெற்ற கிறிஸ்தவ ஆலயத்திற்குச் சென்றார். போப்பின் அக்கிரமமான பாவ மன்னிப்புச் சீட்டுக்கு விரோதமாய்த் தொண்ணூற்றைந்து வாதங்கள் எழுதப் பட்டிருந்த கடிதத்தை அந்த ஆலயத்தின் வாயிலில் ஒட்டி வைத்தார். கோயிலுக்கு வரும் ஜனங்கள் எல்லோரும் அதை வாசித்தனர், உடனே இச்செய்தி நாடெங்கும் பரவியது.

இதுவரை செய்த பாவங்கட்கு மன்னிப்புப் பெறுவதற்கு; அவைகளின் பொருட்டுப் பச்சாத்தாபப்பட்டு இனிமேல் அவைகளைச் செய்யாதிருக்க முயல்வது ஒன்றே வழி. வேறு மார்க்கம் கிடையாது. பாவங்களை மன்னிக்கப் போப்புக்கு அதிகாரம் கிடையாது. பாவ மன்னிப்பைப் பணத்தால் பெற முடியாது. பச்சாத்தாபச் செயலால் மட்டுமே பெற இயலும். இதுதான் லூதருடைய வாதங்களின் சாரம்.

இவ்விஷயம் போப்புக்கு எட்டியவுடன் அவர் தமது மந்திரிசளில் ஒருவரை லூதரிடம் அனுப்பி அவரைத் தம் வசப்படுத்த விரும்பினர். மந்திரி வந்தார், எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் லூதர் மயங்கவில்லை. அதன்மேல் மந்திரி, 'உனக்கு அரசர் உதவி செய்வர் என்று எண்ணுகிருயோ? போப்பினுடைய சிறு விரலின் ஆற்றலுக்கும் ஆற்றமாட்டார்களே! நீ யாரைத் தஞ்சமடைவாய்? நீ எங்கே தங்குவாய்?' என்று சினந்து கேட்டார்.

'எப்பொழுதும் போல் இறைவன் திருவடி நிழலிலே' என்று லூதர் மறுமொழி கூறினர்.

—oOo—

# 13. அன்று வந்த உருவம்

நேற்று என்னுடைய குழந்தை தங்கத்தின் முதலாவது ஆண்டுதினம். எனக்குக் கல்யாணமாகிப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. இப்பொழுதுதான் நானும் என்னுடைய மனைவியும் குழந்தை முகம் பார்க்கும் பாக்கியம் அடைந்தோம். அதனால் அந்த ஆண்டு தினத்தைச் சந்தோஷமாகக் கொண்டாட எண்ணி, ஆப்த நண்பர்கள் சிலரை எங்களோடு விருந்துண்ண வருமாறு அழைத்திருந்தேன்.

அவர்கள் வந்து எங்கள் தங்கத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு அவளோடு விளையாடினார்கள். அவள் அழகையும் மேனியையும் கண்டு மகிழ்ந்தார்கள். அவளை நன்றாக வளர்த்திருப்பதாக எங்களைப் பாராட்டினார்கள். அவற்றை எல்லாம் கண்டும் கேட்டும் நானும் என்னுடைய மனைவியும் அளவிலா ஆனந்தம் அடைந்தோம். எங்கள் தங்கம் 'அம்மா' என்றும் 'அப்பா' என்றும் கூறும்போது, எங்கள் காதினிலே இன்பத் தேன் வந்து பாய்ந்த வண்ணமாயிருந்தது.

அவளை என்னுடைய மடியில் வைத்துக்கொண்டு அவளுக்குப் பாலன்னம் ஊட்டினேன். அவள் தன்னுடைய

சிறிய கைகளை நீட்டி அன்னத்தைத் தொடுவதும், அதை எடுத்து வாயில் வைக்க முயல்வதும் எங்களுக்கு அற்புதக் காட்சியாக இருந்தன. அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே நானும் என்னுடைய நண்பர்களும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் விருந்து உண்டு கொண்டிருந்தோம்.

அப்பொழுது வாசலில் யாரோ வருவது போல ஒரு சத்தம் கேட்டது. அன்று நான் அழைத்திருந்த நண்பர்களில் ஒருவர் அதுவரை வரவில்லை; ஆஹா! அவரும் வந்து விட்டார் அல்லவா என்று சந்தோஷத்தோடு வாசற் பக்கம் திரும்பிப் பார்த்தேன். ஆனால் அது யார்? அவளை யார் இங்கே அழைத்தவர்? அவளுக்கு இங்கு என்ன வேலை? அவளுடைய இடுப்பிலுள்ள குழந்தைக்கா இன்று ஆண்டு விழா?

நான் ஆவலோடு எதிர்பார்த்த என்னுடைய ஆப்த நண்பர் வரவில்லை. யாரோ ஒரு பிச்சைக்காரி தன்னுடைய குழந்தையைஇடுப்பில் வைத்துக்கொண்டு, வாசலைக்கடந்து உள்ளே வந்துவிட்டாள். அவள் அலங்கோலமாயிருந்தாள், அவளுடைய குழந்தை வாடி வதங்கிப் போயிருந்தது, அவள் "ஐயா! இரண்டு நாளாகப் பட்டினி, ஏதேனும் தர மாட்டீர்களா? இந்தப் பசலைக்கு என்னிடம் பாலில்லை, எஜமான்களே! கொஞ்சம் இரங்கமாட்டீர்களா?" என்று கண்ணீர் வடித்துக் கொண்டு பிச்சை கேட்டாள்.

ஆனால்; பிச்சை கொடுக்க இதுவா சமயம்? ஐயோ! சிவபூசை வேளையில் கரடி புகுந்ததுபோல் இருக்கிறதே! அவளை யார் இங்கே அனுமதித்தவர்? "அப்புறம் போ

வெளியே நில்" என்று நான் கோபித்தேன். என்னுடைய நண்பர்களும் "ஆமாம், தங்கத்தைப் பார்த்துச் சந்தோஷித்துக் கொண்டிருக்கும்போது இந்தச் சனியன்கள் எங்கிருந்து வந்து விட்டன?" என்று கூறினார்கள். அவ்வளவுதான், அந்தப் பிச்சைக்காரி பயந்து வெளியே போய் விட்டாள்.

ஆனால் அவள் அந்த இடத்தை விட்டு அகன்று போனாலும், அவளுடைய பரிதாபகரமான காட்சி என்னுடைய மனக்கண் முன்னால் நின்று கொண்டே இருந்தது. அவள் வெளியேதான் நின்று கொண்டிருந்தாலும் அருகிலே உட்கார்ந்திருப்பது போலவே தோன்றிற்று. ஆமாம், அவள் நாங்கள் பருப்பும் பாயஸமும் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள். ஆமாம், அவள் எங்கள் குழந்தை அன்னத்தில் கையிட்டு அளேவதைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள். அவளுடைய வயிறு ஒட்டித்தான் கிடக்கிறது. அவளுடைய குழந்தை வாடித்தான் உறங்குகிறது. அவளை அருகில் வைத்துக்கொண்டு விருந்துண்பது எப்படி? எனக்குச் சாப்பிட முடியவில்லை. என்னுடைய சந்தோஷம் எல்லாம் மறைந்து போய் விட்டது. ஏதோ குற்றம் செய்தவன் போல எண்ணினேன்.

அந்தஎண்ணம் என்னுடைய இதயத்தில் குடிகொண்டு விட்டது. அதை வெளியாக்க முயன்றேன். அவள் வருமுன் இருந்த ஆனந்தத்தை மறுபடியும் அனுபவிக்கப் பிரயத்தனப்பட்டேன். அவள் வெளியில் நின்றால் என்ன, அருகிலேயே உட்கார்ந்து கொண்டால்தான் என்ன? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நான் என்ன குற்றம் செய்து விட்டேன்? நான் என்னுடைய அருமந்த

செல்விக்கு ஆண்டுவிழா நடத்துவதில் எந்தச்சட்டத்தையும் மீறவில்லையே? நான் என்னுடைய நண்பர்களுக்கு விருந்து வைத்ததில் யாருக்கும் எந்த அநியாயமும் செய்துவிட வில்லையே? நான் வேலைசெய்து தேடிய பணந்தானே; நாங்கள் யாரிடமிருந்தும் திருடிக் கொள்ளவில்லையே!

அவள் யாரோ, எப்படிப்பட்டவளோ, அவளுக்கு பன் உதவி செய்யவேண்டும்? அவளும் என்னைப் போல வேலை செய்தால் என்ன? அவளுடைய கணவன் அல்லனோ அவளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன்? அந்தக் கடமையை நாம் ஏற்றுக் கொள்ளலாமோ? அவளுக்கு நாம் உதவி செய்தால் அவள் இதுபோல் தானே வாழ்வாள்? அது சமூகத்துக்குத் தீங்கு செய்தது ஆகுமல்லவா? அவளுக்கு இன்னும் எத்தனை குழந்தைகள் பிறக்குமோ, அவற்றையும் நாம் பாதுகாக்க வேண்டுமோ? அவற்றால் மனித ஜாதிக்கு நன்மை உண்டாகுமோ? இந்த விதமாக எண்ணிப் பார்த்தேன். இந்த எண்ணங்கள் நிகழும்போது, என்னிடம் யாதொரு குற்றமுமில்லை, இவளுடைய நிலைமைக்கு நான் ஜவாப்தாரியல்ல, இவளுக்கு உணவு கொடாவிட்டாலும் நான் நியாயம் தவறியவன் ஆகேன் என்று தோன்றும். அதனால் என்னுடைய மனத்தில் உண்டான குழப்பம் நீங்கிவிட்டது போலக் காணப்படும். ஆமாம், அவளைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய அவசியம் என்ன என்று முடிவு செய்வேன். அவளுடைய உருவத்தை மறந்து விட்டதாக எண்ணுவேன். அதற்கு முன் வாழ்ந்த இன்ப வாழ்வே மறுபடியும் வந்து விட்டதாக நினைப்பேன்.

ஆனால் இதென்ன? அவ்விதம் எண்ணி அரைநிமிஷம் ஆகவில்லையே; அதற்குள் அவளுடைய உருவமும் எண்ண

வெளியே நில்" என்று நான் கோபித்தேன். என்னுடைய நண்பர்களும் "ஆமாம், தங்கத்தைப் பார்த்துச் சந்தோஷித்துக் கொண்டிருக்கும்போது இந்தச் சனியன்கள் எங்கிருந்து வந்து விட்டன?" என்று கூறினார்கள். அவ்வளவுதான், அந்தப் பிச்சைக்காரி பயந்து வெளியே போய் விட்டாள்.

ஆனால் அவள் அந்த இடத்தை விட்டு அகன்று போனாலும், அவளுடைய பரிதாபகரமான காட்சி என்னுடைய மனக்கண் முன்னால் நின்று கொண்டே இருந்தது. அவள் வெளியேதான் நின்று கொண்டிருந்தாலும் அருகிலே உட்கார்ந்திருப்பது போலவே தோன்றிற்று. ஆமாம், அவள் நாங்கள் பருப்பும் பாயஸமும் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள். ஆமாம், அவள் எங்கள் குழந்தை அன்னத்தில் கையிட்டு அளைவதைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள். அவளுடைய வயிறு ஒட்டித் தான் கிடக்கிறது. அவளுடைய குழந்தை வாடித்தான் உறங்குகிறது. அவளை அருகில் வைத்துக்கொண்டு விருந்துண்பது எப்படி? எனக்குச் சாப்பிட முடியவில்லை. என்னுடைய சந்தோஷம் எல்லாம் மறைந்து போய் விட்டது. ஏதோ குற்றம் செய்தவன் போல எண்ணினேன்.

அந்த எண்ணம் என்னுடைய இதயத்தில் குடிகொண்டு விட்டது. அதை வெளியாக்க முயன்றேன். அவள் வருமுன் இருந்த ஆனந்தத்தை மறுபடியும் அனுபவிக்கப் பிரயத்தனப்பட்டேன். அவள் வெளியில் நின்றால் என்ன, அருகிலேயே உட்கார்ந்து கொண்டால்தான் என்ன? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நான் என்ன குற்றம் செய்து விட்டேன்? நான் என்னுடைய அருமந்த

செல்விக்கு ஆண்டுவிழா நடத்துவதில் எந்தச்சட்டத்தையும் மீறவில்லையே? நான் என்னுடைய நண்பர்களுக்கு விருந்து வைத்ததில் யாருக்கும் எந்த அநியாயமும் செய்துவிட வில்லையே? நான் வேலைசெய்து தேடிய பணந்தானே; நாங்கள் யாரிடமிருந்தும் திருடிக் கொள்ளவில்லையே!

அவள் யாரோ, எப்படிப்பட்டவளோ, அவளுக்கு ஏன் உதவி செய்யவேண்டும்? அவளும் என்னைப் போல வேலை செய்தால் என்ன? அவளுடைய கணவன் அல்லனோ அவளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன்? அந்தக் கடமையை நாம் ஏற்றுக் கொள்ளலாமோ? அவளுக்கு நாம் உதவி செய்தால் அவள் இதுபோல் தானே வாழ்வாள்? அது சமூகத்துக்குத் தீங்கு செய்தது ஆகுமல்லவா? அவளுக்கு இன்னும் எத்தனை குழந்தைகள் பிறக்குமோ, அவற்றையும் நாம் பாதுகாக்க வேண்டுமோ? அவற்றால் மனித ஜாதிக்கு நன்மை உண்டாகுமோ? இந்த விதமாக எண்ணிப் பார்த்தேன். இந்த எண்ணங்கள் நிகழும்போது, என்னிடம் யாதொரு குற்றமுமில்லை, இவளுடைய நிலைக்கு நான் ஜவாப்தாரியல்ல, இவளுக்கு உணவு கொடா விட்டாலும் நான் நியாயம் தவறியவன் ஆகேன் என்று தோன்றும். அதனால் என்னுடைய மனத்தில் உண்டான குழப்பம் நீங்கிவிட்டது போலக் காணப்படும். ஆமாம், அவளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் என்ன என்று முடிவு செய்வேன். அவளுடைய உருவத்தை மறந்து விட்டதாக எண்ணுவேன். அதற்கு முன் வாழ்ந்த இன்ப வாழ்வே மறுபடியும் வந்து விட்டதாக நினைப்பேன்.

ஆனால் இதென்ன? அவ்விதம் எண்ணி அரைநிமிஷம் ஆகவில்லையே; அதற்குள் அவளுடைய உருவமும் எண்ண

மும் வந்து விட்டனவே. ஆமாம், அவள் விஷயத்திலே நான் தவறு எதுவும் செய்யவில்லை என்று என்னுடைய அறிவு எத்தனையோ வாதங்களும் காரணங்களும் எடுத்துரைக்கின்றது. அதனால் என்னுடைய மனம் சாந்தியடைவது போலத் தோன்றினும், அடுத்த நிமிஷம் என்னுடைய மனத்தில் முன்போலவே புயலும் காற்றும் புகுந்தடிக்க ஆரம்பித்து விடுகின்றன. அறிவு என்னதான் கூறினாலும், என்னுடையமனச்சான்று அதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. அந்தப் பிச்சைக்காரி கூட இது என்ன நியாயம் என்று கூறக் காணோம். ஆனால் இந்த மனச்சான்றோ 'இது என்ன நியாயம்? இது என்ன நியாயம்?' என்று இடைவிடாமல் கேட்டுக் கொண்டே இருக்கின்றது. இந்தக் கேள்வியைத் தடுக்க ஏதேனும் வழி உண்டோ?

# 14. எவன் அமரன் ?

இங்கிலாந்து தேசத்தில் நானூறு வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம். அங்கே வார்விக்ஷயர் என்னும் ஜில்லாவில் ஆவான் என்னும் அழகான நதி ஓடுகிறது. அதன் கரையில் ஸ்ட்ராட்போர்டு என்னும் ஒரு சிறு ஊர் இருக்கிறது. அதன் அருகில்தான் அக்காலத்தில் ஸர். தாமஸ் லூசி என்னும் பெயருடைய ஜமீந்தார் வசித்து வந்தார். அவருடைய மாளிகையைச் சுற்றி அகன்ற பூங்காவனம் ஒன்று அமைத்திருந்தார். அதில் புஷ்பங்கள் பொலியும் செடிகளும் மரங்களும் நிறைந்திருந்தன; அழகான கலை மான்கள் ஏராளமாகத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன

இப்பொழுது சில நாட்களாக மான்கள் களவு போய்க் கொண்டு வந்தன. அது ஸர். தாமஸ் லூஸிக்கு அதிக வருத்தத்தைத் தந்தது. அதனால் ஒருநாள் அதி காலையிலேயே எழுந்து, தம்முடைய ஜமீன் மானேஜரை அழைத்து, "என்ன, நேற்று இரவும் ஏதேனும் மான் களவு போயிற்

ளே ? இவ்விதம் கிழமைக்கு ஒன்ருகக் களவுபோகப் பார்த்துக் கொண்டிருக்கலாமோ ? இந்தத் திருட்டைக் கண்டு பிடிக்க, யாரேனும் காவல் வைத்தால் என்ன ?" என்று கேட்டார்.

அதற்கு மானேஜர் "ஆமாம் ; அதிலும் சிறந்த மான்களே களவு போகின்றன. ஆதலால் திருட்டுப் பயல்களைப் பிடிக்கக் காவற்காரர்களை நியமித்திருக்கிறேன். அவர்கள், நேற்று இரவுதான் ஐந்தாறு போக்கிரிகள் ஒரு மானைக் கொண்டு போவதைக் கண்டார்களாம். அவர்களைப் பிடிப்பதற்காக ஓடினார்களாம். ஆனால் இருட்டா யிருந்தபடியால் அந்தப் பயல்கள் எங்கேயோ மறைந்து விட்டார்களாம்" என்று சொன்னார்.

அதைக் கேட்டதும் ஜமீந்தார் "அப்படியா ? ஆனால் அவர்கள் யாராயிருக்கும் ?" என்று கேட்டார்.

அதற்கு மானேஜர் "அதைப்பற்றிப் பக்கத்துக் கிராமத்தில் விசாரித்தேன். அங்கே இளைஞர்கள் அநேகர் தங்களைப் பற்றியும், மான்கள் திருட்டுப் போவதைப் பற்றியும் அதிகக் கேலியாகப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் தான் திருடியவர்கள் என்று அவர்கள்மீது குற்றம் சாட்டுவது எப்படி ?" என்று சொன்னார்.

"அது போகட்டும், காவற்காரர்கள் வந்து என்ன சொன்னார்கள் ?"

"அந்தப் பயல்கள் தப்பி ஓடி விட்டதாகச் சொன்னார்கள். ஆனால் காவற்காரர்களில் இருவர் இன்னும்வரவில்லை. அவர்கள் வேறுபக்கத்தில் நின்று கொண்டிருந்ததால் அவர்களுக்குத் திருடர்கள் வந்த விஷயம் தெரியாதோ, என்னவோ ?"

அதன் பேரில் ஜமீந்தார், "ஆனால் ஜான் ! இந்த மாதிரியே விட்டுக் கொண்டிருந்தால் என்னவெல்லாம் செய்யமாட்டார்கள் ? இவர்களைப் பிடித்துத்தான் ஆக வேண்டும். ஆகட்டும், அவர்களுக்குத் தக்க புத்தி தருவிக்கிறேன்" என்று கூறினார்.

அந்தச் சமயம் வெளியே முற்றத்தில் யாரோ ஜனங்கள் இரைந்து பேசுவது போலக் கேட்டது. அடுத்த நிமிஷத்தில் தோட்டக்காரர்களில் ஒருவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஓடிவந்தான். அவன் ஓடோடி வந்திருந்தபடியால் அவனுக்குப் பேச முடியவில்லை. ஆயினும் மூச்சுத் திணறிக் கொண்டே, "ஐயனே ! ஒருத்தன் அகப்பட்டுக் கொண்டான். அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டார்கள். அவன் திமிறிக்கொண்டு ஓடிவிடப் பார்த்தானும் ; ஆனால் காவற்காரர்கள் விட்டார்களில்லை" என்று சொன்னான்.

"ஆகா ! அப்படியா ! அந்தப் பயல் எவன் ?"

"ஐயனே ! அவன் எவனோ அறியேன், அவனுக்கு ஸ்ராட்போர்ட் ஊராம், அடிக்கடி இந்த மாதிரிக் காரியங்களில் அகப்பட்டுக் கொண்டவனும்."

"அவனை எங்கே பிடித்தார்கள் ?"

" அவனை ஸ்ராட்போர்ட் சாலையோரமுள்ள வேலி யருகில். அவன் மானையும் கொண்டுபோக எண்ணி விட் டால், அவனைப் பிடித்திருக்க முடியாதாம். அவன் வேலி யைத் தாண்டிக் குதித்து ஓடிப்போயிருப்பானும் "

" அப்படியா? அந்தப் பயல் எங்கே? அவனைக் கொண்டுவா. ஹூஹூம்; அந்தப் பயலுக்கு அவ்வளவு துணிச்சலா? ஆகட்டும்; அவனைக் கொண்டுவா, சொல்லு கிறேன் " என்று ஸர். தாமஸ் லூஸி தோட்டக்காரனிடம் கூறினர்.

அதன்பின் தம்முடைய உடைவாளை அவர் இடை யில் தரித்துக் கொண்டு, தம்முடைய நீதி மண்டபத்துக்குச் சென்றார். அப்பொழுது அவருடைய மனைவியும் மக்களும் வேடிக்கை பார்க்க அங்கே வந்து உட்கார்ந்து கொண் டார்கள். மாளிகைக்கு வெளியே இரைச்சல் அதிகமா யிருந்தது. மானைத் திருடிய கள்ளனை இரண்டு காவற்காரர் கள் இறுகப் பிடித்திருந்தார்கள். இறந்து போன மானை ஒரு வேலைக்காரன் தூக்கி வந்தான். இன்னொரு வேலைக் காரன் திருடனுடைய வில்லை வைத்திருந்தான். இவர்களைச் சூழ்ந்து பலர் ' இறைவன் திருவுள்ளம் என்னவோ' என்று பேசிக் கொண்டு வந்தார்கள்.

ஸர். தாமஸ் லூஸி அந்தத் திருடனைப் பார்த்தார் அவனுக்கு அப்பொழுது சுமார் இருபது வயதிருக்கும். அழகான உருவம், ஆற்றல் அமைந்த மேனி, அவனுடைய கேசம் அதிக நீளமாக வளர்ந்திருந்தது. அவனுடைய முகத்தில் அப்பொழுதுதான் மீசையும் தாடியும் அரும்பிக் கொண்டிருந்தன. அவனைக் கண்டார் யாரும் அவனைத்

திருடன் என்று கூறயாட்டார்கள். அவ்வளவு கம்பீர மான தோற்றம் உடையவனு யிருந்தான்.

ஸர். தாமஸ் ஓரஸி அவனிடம் "யாரடா நீ? உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

அவன் தன்னுடைய பெயரைச் சொன்னுன்.

அதன் மேல், ஜமீந்தார் "அடா! நீ மானைத் திருடிய தாகக் கூறுகிருர்கள். அதற்கு என்ன சொல்லுகிருய்? அடா! யார் யார் உன்னுடன் சேர்ந்தவர்கள்? அனைவர்க் கும் சரியான தண்டனை தருகிறேன், அடா! என்ன சும்மா நிற்கிருய்? ஆகட்டும், இந்தப் பயலுக்கு முப்பது அடி கொடுங்கள்" என்று கூறினர்.

அப்பொழுது அந்தக் கைதி இந்த விதமான தண்ட னையை எதிர் பார்க்கவில்லை. அவன் அப்படியே ஸ்தம்பித் துப் போனுன். ஆயினும் அடுத்த நிமிஷத்தில் "ஆகா! இந்தத் தண்டனையா? இது வேண்டாம், என்னைச் சிறை யில் போடுங்கள், அல்லது எனக்கு அபராதம் விதியுங்கள் எதை வேண்டுமானுலும் ஏற்றுக் கொள்கிறேன், இந்த அடித் தண்டனை மட்டும் வேண்டாம்" என்று கூறினுன்.

ஆனல் ஓரஸியின் மனம் இளகவில்லை. அவனை முக்காலியில் கட்டி அடிக்கவே செய்தார்கள். அதன்பின் அவன் தன்னுடைய வீட்டுக்குப் போனதும், அந்த அவமா னத்தைக் குறித்து வெகு நேரமாகச் சிந்தித்தான். அவருக்கு என்ன அவமானம் ஏற்படுத்தலாம் என்று யோசித்தான். அவரோ ஜமீந்தார், அவருக்கு என்ன செய்ய முடியும்?

ஆமாம்; அவருடைய தோட்டத்தில் போய் அன்று செய்தது போல் மறுபடியும் மான் ஒன்றைக் கவர்ந்து விட்டால் போதும்! அதைவிட அவருக்குப் பெரிய அவமானம் வேறொன்றும் கிடையாது ஆனால் அப்படிக் கவர இயலுமோ? அங்கே காவற்காரர்கள் அயராது நிற்கிறார்களே. அதோடு பிடிபட்டாலோ, அதே கதிதானே ?

" ஆமாம், அதற்காகச் சும்மா இருந்து விடுவதா ? அது முடியவே முடியாது. அவருக்கு ஏதேனும் அவமானம் உண்டாக்கியே தீரவேண்டும்" என்று அந்த இளைஞன் எண்ணினான்.

அவன் சிறுவனாய்ப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது, ஆசிரியரைப் பற்றிக் கேலியாகச் சிலர் பாடக் கேட்டிருந்தான். அந்த விஷயம் இப்பொழுது அவனுடைய ஞாபகத்துக்கு வந்தது, அவ்வளவு தான்; அவனுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை, ஆகா! அதுதான் யோசனை ! —என்று ஆனந்தம் கொண்டான்.

"ஆமாம்; அவரைக் குறித்து ஒரு பாட்டுச் செய்தால், அதைக் கேட்டதும் ஜனங்கள் எல்லோரும் அவரைக் குறித்துச் சிரித்துக் கேலியாகப் பேசுவார்கள். அவருக்கு மானைத் திருடினால் கூட அவ்வளவு கோபம் வராது" என்று எண்ணினான்.

ஆனால் அவனுக்குப் பாட்டுச செய்யத தெரியுமோ? தெரியாது. அவன் இது வரை அந்தக் காரியத்தில் ஈடுபட்டதே யில்லை. ஆயினும் என்ன? அவர்மீது பாடித்தான் ஆகவேண்டும். அப்படியே அவர்மீது சில பாடல்களைச்

செய்து முடிக்தான். அவைகளைத் தன்னுடைய தோழர் களிடம் காட்டினான். அவர்கள் எல்லோரும் அவற்றைக் கேட்டுச் சிரித்தார்கள். அவ்வளவு தான்; அதன்பின் எங்கே பார்த்தாலும் அந்தப் பாடல்கள் பரவி விட்டன.

ஆனாலும் அந்த இளைஞன் அத்தோடு விடவில்லை, அவரைப் பற்றி ஊரார் சிரிப்பது அவருக்குத் தெரியுமோ, என்னவோ? அந்தப் பாடல்கள் அவரிடம் போய்ச் சேர்ந்த னவோ, என்னவோ ஆதலால் இரவில் வெகு ஜாக்கிரதை யாகப் போய் அவருடைய மாளிகையின் வெளிக் கதவில் அந்தப் பாடல்களின் நகல் ஒன்றை ஓட்டிவைத்தான்.

மறுநாட் காலையில் அந்த ஜமீந்தார் தம்முடைய மனைவியுடனும் மக்களுடனும் சந்தோஷமாகப் பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது வேலைக்காரன் ஒருவன் அந்தக் கடுதாசியைக் கொண்டுவந்து கொடுத்தான்.

"ஐயனே! இந்தக் கடுதாசி வெளிக்கதவில் ஓட்டி யிருந்தது. எங்களுக்குப் படிக்கத் தெரியாததாகையால், ஏதேனும் முக்கியமான விஷயமாய் இருக்குமோ? எஜமான் பார்வைக்குக்கொண்டு போவோம் என்று எண்ணி எடுத்து வந்தேன்" என்று கூறி வணங்கினான்.

அவர் அந்தக் கடுதாசியைக் கையில் வாங்கி, அதி லுள்ள பாடல்களைப் படிக்க ஆரம்பித்தார். அவை அவருக்கு அதிகச் சுவையுடையனவாகத் தோன்றின. அவர் தம்மை அறியாமலே சிரித்துக்கொண்டார். அதைக் கண்ட அவருடைய மனைவி, "அப்படி என்ன வேடிக்கை அந்தக்கடுதாசியில்? அவ்வளவு அதிகமாகச் சிரிக்கிறீர்களே" என்று கேட்டாள்.

ஆனால் இதென்ன? அவர் பதில் கூறாமல் இருக்கிறார்; அவருடைய கண்கள் சிவக்கின்றன; அவருடைய புருவங்கள் நெரிகின்றன. அதற்குக் காரணமா? அவர் தம்முடைய பெயரைப் பார்த்துவிட்டார்; அந்தப் பாடல்கள் தம்மைப் பற்றினவையே என்று கண்டு விட்டார். அதுதான்.

அதனால் கடுதாசி கொண்டு வந்த வேலைக்காரனைப் பார்த்து, "அடா போக்கிரிப்பயலே! ஆகட்டும்; உன்னைத் தூணில் கட்டி வைத்து உரிக்கச் சொல்லுகிறேன். அந்தக் கடுதாசியில் எழுதி யிருப்பதை வாசிக்கவில்லையோ? அப்படியா சொல்லுகிறாய்? ஆகட்டும்" என்று கூப்பாடு போட்டார்.

அந்த வேலைக்காரன்-பாவம்,-அவனுக்கு ஒன்றுமே தெரியாது. சுத்த நிரட்சரகுட்சி. அவன் என்ன செய்வான்? அங்கு நில்லாமல் "பிழைத்தேன், பிழைத்தேன்" என்று ஓடிப்போனான்.

அதன்பின் ஜமீந்தார் அந்தக் கடுதாசியிலுள்ள விஷயத்தை மனைவியிடம் கூறினார். அந்தப் பாடல்களைப் பாடியவன் எவனா யிருக்கும் என்று யோசித்தார்கள்.

"ஆமாம், அன்று அடித் தண்டனைபட்ட அந்தப் போக்கிரிப் பயல்தான்; அதில் சந்தேகமில்லை. அவன்தான் ஏதோ சில பாடல்கள் எழுதியிருப்பதாக அன்று மானேஜர் ஜான் கூறினார் அல்லவா? ஆகட்டும்; அந்தப் பயலுடைய காதுகளை அறுத்தெறிந்து விடுகிறேன், பார்." என்று ஜமீந்தார் கூறினார். அப்போது அவருடைய மனைவி

"அப்படி அறுத்தெறிவதற்கு அவன்மீது ஏதேனும் குற்றம் சாட்டவேண்டுமே, அதற்கு என்ன செய்வீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்கு ஸர். தாமஸ் ஓரஸி "ஆகா, அதுவா பிரமாதமான காரியம்? அந்தப் பயலை ஊரைவிட்டே ஓடிப்போய் விடும்படி செய்கிறேன், பார்" என்று உறுமினர்.

ஆமாம்; அவர் அதுபோலவே செய்து விட்டார். அந்த இளைஞன் பரம தரித்திரனாய் இருந்தான். அவன் சிறு வயதிலேயே கல்யாணம் செய்து கொண்டதற்காகக் கோபித்து அவனுடைய தந்தை அவனுக்கு உதவி எதுவும் செய்ய மறுத்து விட்டார். அதனால் அவன் தனியே ஒரு சிறு கசாப்புக் கடை வைத்து உபாயமாகக் காலங் கழித்து வந்தான். அந்தக் கஷ்ட ஜீவனமும் நடக்காதபடி அவனுக்கு ஜமீந்தார் அநேக விதமாக இடைஞ்சல்களும் இடையூறுகளும் செய்ய ஆரம்பித்தார். அவன் அவைகளைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான்.

ஆனால் அதிகாரி செய்யும் அக்கிரமங்களை யாரால் பொறுக்க முடியும்? அதனால் அந்த ஊரை விட்டு லண்டன் மாநகருக்குப் போய்விடத் தீர்மானித்தான்.

கையில் காசு ஒன்றும் இல்லாததால், கால் நடையாகவே புறப்பட்டுப் போனான். ஆனால் லண்டன் நகரத்து வீதிகளில் கற்கள் பரப்பாமல் தங்கக் கட்டிகள் பரப்பியிருப்பதாகக் கேள்விப் பட்டிருந்தான். அதனால் அங்கே போய்ச் சேர்ந்து விட்டால், அப்புறம் தனக்கு அதிர்ஷ்டம் தான் என்று எண்ணினான். ஆனால் அங்கே போய்ச்

சேர்ந்ததும் அதிர்ஷ்டத்தைக் காணவில்லை; அதற்குப் பதிலாக மகா கஷ்டத்தையே கண்டான்.

அங்கு மிங்குமாகப் பல நாட்கள் வேலை தேடி அலைந்தான். அக்காலத்தில் இளைஞர்கள நாடகக் கொட்டகைக்குக் குதிரை மீது சவாரி செய்து போவது வழக்கம். அவர்கள் கொட்டகைக்குள் போய்விட்டால், அவர்களுடைய குதிரைகளைப் பார்த்துக் கொள்வதற்கு வேலையாட்கள் தேவை. அந்தப் பதவி கிடைத்தது ஸ்ட்ராட் போர்ட்டிலிருந்து வந்த இளைஞனுக்கு. அவன் தன்னுடைய வேலையில் அதிக கவனமாகவும் வினயமாகவும் நடந்து கொண்டதைக்கண்டு எல்லோரும் அவனையே விரும்பினார்கள். அதனால் அவன் பல சிறுவர்களைத் தன்கீழ் வேலை பார்க்குமாறு நியமித்துக் கொண்டு, குதிரை பிடித்து நிற்கும் தொழிலைப் பிரமாதமாகச் செய்து வந்தான்.

அந்தத் தொழிலைச் செய்யும் பொழுதே அடிக்கடி கொட்டகைக்குள் போய் நாடகங்களைப் பார்த்து வந்தான். அதனால் தானும் நடிக்க வேண்டும் என்றஆசை உண்டாக ஆரம்பித்தது. ஆதலால் ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்து கொண்டான். அதன்பின் தன்னுடன் நடிக்கும் நண்பர்களுக்காக அவனே சில நாடகங்களை எழுதவும் ஆரம்பித்தான். அந்த நாடகங்கள் ஜனங்களின் மனத்தை எளிதில் கவர்ந்துவிடவே அவனுக்குப் பேரும் பொருளும் அதிகரிக்கலாயின. ஆதலால் அவன் பத்து வருஷங்கள் கழித்துத் தன்னுடைய சொந்த ஊருக்குப் போன பொழுது அவனை எல்லோரும் சந்தோஷமாகவும் சம்பிரமமாகவும் வரவேற்றார்கள். "ஆகா, இந்தக் கவிஞன்தானே ஜமீன்தார் மீது

பாடல்கள் பாடியவன்'' என்று நினைத்துப் புன்சிரிப்புக் கொண்டார்கள்.

இப்பொழுது நானூறு வருஷங்கள் கழிந்து விட்டன. இந்த நானூறு வருஷ காலத்தில் அவனுடைய கீர்த்தி உலக மெங்கும் பரவிவிட்டது. இப்பொழுது அவனுடைய பெயர் தெரியாத நாடு கிடையாது. ஆமாம், அவனைத் தண்டித்த அந்த ஜமீன்தார் அழிந்து போனார்: ஆனால் அவர் தண்டித்த அந்த இளைஞன் அழியாவரம்பெற்று விட்டான். அவன்தான் வில்லியம் ஷேக்ஸ்பியர்.

—[ ★ ]—

# 15. பெண் கல்வி

எனக்கு ஒரு பெண் இருக்கிறாள். பாடசாலைக்குப் போய் வருகிறாள். அவளைப்பற்றியும் அவளுடைய கல்வியைப் பற்றியும்அடிக்கடி சிந்திப்பேன். அப்பொழுதெல்லாம் சில சந்தேகங்கள் தோன்றும் அவற்றை வாசகர்களிடம் கூறினால் என் ஐயப்பாடுகள் நீங்கலாம் என்று எண்ணி எழுதுகிறேன்.

நமமுடைய பெண்களுக்குப் பாடசாலைகளில் தமிழ்ச் செய்யுட்கள் கற்றுக் கொடுக்கிறார்கள். அத்தகைய செய்யுட்பாடங்களுள் குமரகுருபரர் அருளிய நீதிநெறிவிளக்கம் ஒன்று. அதை வித்வான் பரீட்சையில் தேறிய ஆசிரியை அம்மையார் கற்றுக் கொடுக்கும் போது,

> கற்றோர்க்குக் கல்விநலனே கலனல்லால்
> மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
> முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டா. யாரே
> அழகுக்கு அழகு செய்வார்.

என்னும் செய்யுள் வந்தவுடன் அதை அவர் எவ்வாறு கற்பிப்பார் என்று எனக்கு விளங்குவதாயில்லை.

ஆசிரியை அம்மையார் காதில் கம்மலும் தொங்கட்டானும், கழுத்தில் சங்கிலிகளும், கையில் வளையல்களும் அணிந்திருக்கிறார். மூக்கில் மூக்குத்தி—சில சமயங்களில் நாலைந்து வைரக் கற்கள் பதித்த பேஸரி என்னும் விசிரி மூக்குத்தியை அணிந்து கொண்டு அந்தச் செய்யுளை எப்படிக் குழந்தைகளுக்குக் கற்பிக்க முடியும்.

அல்லது அவருக்குக் குருமதுருபரர் கூறுவதில் நம்பிக்கையில்லையா? நகைதான் அழகு செய்யும், கல்வி அழகு செய்யாது என்று எண்ணுகிறாரா?

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற குறளை அவர் மறந்து விட்டாரோ? அன்றி அதுவும் வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்று எண்ணி விட்டாரோ? கல்வியில்லாத பெண்கள் முகத்தில் காணப்படாமல் கல்வி கற்றவர் முகத்தில் மட்டும் காணப்படும் தேஜஸை விசேஷ தேஜஸை - ஒளியை அவர் காணவில்லையோ? அந்த ஒளியே அவருக்கு அழகு தரும் என்பதை அறியாரோ?

இவர் அந்தச் செய்யுளைக் கற்றுக் கொடுத்தால் நம்முடைய பெண்கள் நகைகளை விரும்புவதில் ஆச்சரியம் யாது? அம்மா அந்தச் செய்யுளைப் பார்த்தாயா என்று கேட்டால் ஆமாம் பார்த்தேன், படித்தேன், ஆனால் அதைக் கற்றுக் கொடுத்த எங்கள் ஆசிரியை நகைகளை அணியவில்லையோ என்று கேட்டு நம்மை மடக்கி விடுகிறார்கள்? ஆசிரியை கூறுவதுதான் நம் பெண்களுக்கு வேதமாகுமேயன்றி நாம் கூறுவது வேதமாகுமா?

இது மட்டுமா, அப்பா நீங்கள் நகைகள் வேண்டாம் என்று கூறுகிறீர்களே, நம்முடைய பக்கத்து வீட்டுப் பெண்களைப் பாருங்கள். அவர்கள் நகைகளை அணிய வில்லையா? அவர்களுடைய தந்தைமார் எம். ஏ. முதலிய பெரிய படிப்புப் படித்தவர்கள் அல்லவா? அவர்கட்கு இந்த விஷயம் தெரியாதா? நீங்கள் மட்டும் இப்படிக் கூறுகிறீர்களே என்றும் நம்முடைய பெண்கள் கேட்கிறார்கள். இவர்களுக்கு நாம் என்ன விடை கூறமுடியும். ஆமாம் உலக முழுவதிலும் இவ்விதமே சூழ்வதால் நமக்குத்தான் பைத்தியம் பிடித்து விட்டதோ என்னவோ என்று எண்ணத் தோன்றுகிறது. அன்பர்கள் தான் பைத்தியம் யாருக்கு என்று முடிவு செய்ய வேண்டும்.

நம்முடைய பெண்களுக்குப் பாடசாலைகளில் வீட்டு விஞ்ஞானம் என்னும் பாடம் ஒன்றும் கற்றுத்தருகிறார்கள். அது வெகு முக்கியமான விஷயம் என்பதில் சந்தேகமில்லை. அதைக்கற்றுக்கொடுக்க எண்ணிய ஆசிரியர்களுக்கு வந்தனம் அளிக்கிறேன். வீடுகளை எப்படிச் சுத்தயாக வைத்துக்கொள்வதுபோன்ற விஷயங்கள் வாழ்க்கையின் அஸ்திவாரமாக உள்ளவை. அவற்றோடு சேர்த்து அஸ்திவாரத்திற்கு அஸ்திவாரமாகவுள்ள சமையல் கலையையும் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தக் கலையை பெண்களுக்கு மட்டும் கற்றுக் கொடுத்தால் போதுமா, ஆண்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டாமா? சரி அது போகட்டும் பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்களே, அந்தக் கலையில் எதைக் கற்றுக்கொடுக்கிறார்கள்? சோறு ஆக்கக் கற்றுக்கொடுக்கிறார்களா? நோயாளிகளுக்குக் கஞ்சி காய்ச்சக் கற்றுக்கொடுக்கிறார்களா? காய்கறியி

லுள்ள ஜீவசத்துக்கள் வீணுகப்போகாதபடி வேகவைப்ப தற்குக் கற்றுக்கொடுக்கிருர்களா? பாலேயும் நீரையும் விஞ்ஞான முறையில் காய்ச்சுவதற்குக் கற்றுக்கொடுக்கிருர்களா? இத்தகைய விஷயங்களே அவர்கள் கனவிலும் சிந்திப்பதாகத் தெரியவில்லே. நமக்குச் சோறும் குழம்பும் எதற்கு? பட்சணங்களும் பலகாரங்களும் சாப்பிட்டால் போதாதா? அவற்றைச் செய்யவே கற்றுக்கொடுக்கிருர்கள். சரி, அதுதான் போகட்டும், அப்படியானுல் சோற்றுக்கு அடுத்தபடியாக நாம் உபயோகிக்கும் தோசையும் இட்லியும் வார்க்கக் கற்றுக்கொடுக்கலாமே. அதுவுமில்லே. அவர்கள் கற்றுக்கொடுப்ப தெல்லாம் மைசூர்பாகு, சேமியாபோன்ற ஆடம்பரமான அனுவசியமான ஐஸ்வர்ய வான்களே செய்யக்கூடிய பலகாரங்களேயே செய்வதற்குக் கற்றுக்கொடுக்கிருர்கள். இத்தகைய வீட்டு விஞ்ஞானம் ஏழைகளாகிய நம்முடைய பெண்களுக்கு அவசியமா என்பது என்னுடைய இரண்டாவது சந்தேகம்.

நான் நாள்தோறும் என்னுடையக் காரியாலயத்திற்கு பஸ்ஸில் போகிறேன். அப்பொழுது பல கல்லூரி மாணவிகள் பிரயாணம் செய்வதைப் பார்க்கிறேன், நம்முடைய பெண்ணும் இன்னும் சில வருஷங்களில் இவர்களேப் போல் கல்லூரியில் சேர்ந்து படிப்பாள் அல்லவா என்று எண்ணுவேன். அதனுல் அவர்களுடைய நடை உடைபாவனேகளேக் கவனிக்க வேண்டியவனுகின்றேன். இரண்டொன்று இங்கு கூறுகின்றேன். இந்த மாணவிகள் பலவிதமான சேலேகள் அணிந்திருக்கிருர்கள். நகைகள் அணிவதற்கும் அலங்காரமான சேலேக்ள் அணிவதற்கும் வித்தியாசம் என்ன? குமரகுருபரர் செய்யுள் இதற்கும் பொருந்துவது

தானே? அவர் நகை என்று குறிப்பிட்டது வெறும் அலங்காரத்தைத்தானே? கல்வி ஒளி உள்ளவர்களுக்கு இந்த வேஷங்கள் எதற்கு? இவர்கள் அலங்காரம் செய்வதால் தங்கள் கல்விக்கு இழுக்குத்தேடியவர்கள் ஆகமாட்டார்களா? இவர்கள் அலங்காரம் ஏழைகள் மனத்தில் அழுக்காறு உண்டாக்கி அவரைத் துன்புறுத்துவது அழகாகுமா? இவ்வாறு என் மனம் எண்ணுகிறது.

இத்துடன் நிற்கவில்லை. இவர்கள் அலங்காரமான சேலைகள் அணிந்திருப்பதுபோலவே அலங்காரமான செருப்புக்களும் அணிந்திருக்கிறார்கள். சிலர் ஆங்கிலப் பெண்கள் போல் குதிக்கால் மூன்று அங்குல உயரமுள்ள ஜோடுகளையும் அணிகிறார்கள். செருப்பும் ஜோடும் அணியட்டும் அது நல்ல வழக்கமே. பாதங்கள் சுத்தமாயிருக்கும். சாலையிலுள்ள ஆபாசங்கள் சேரா. ஆனால் இந்தப் பெண்கள் பஸ்ஸில் உட்கார்ந்திருக்கும் பொழுது இவர்களுடைய சேலைகள் எல்லோரும் மிதிக்கும் பலகையில் தொங்கிப் புரள்கின்றனவே. அது சரியா? அது அசுத்தமல்லவா? அதைச் சிறிதேனும் சிந்தித்துப் பார்க்கிறார்களா? சில சமயங்களில் உட்கார இடமில்லாமல் நிற்பவர்கள் சேலைகளின் மீது மிதித்துக் கொண்டு நிற்கிறார்கள் அல்லவா? அதையேனும் எண்ணிப் பார்க்கிறார்களா? எதற்காக இப்படிக் கீழே புரள விடுகிறார்கள்? இவர்களுடைய பாதங்களை யாரும் பார்க்கக்கூடாது என்ற எண்ணமா? அந்த எண்ணத்துக்குக் காரணம் யாது? இவர்கள் பாதங்கள் அழகாக இல்லையா? சீதையின் அழகை வர்ணிக்கும்பொழுது அவளுடைய பாதங்களின் அழகையும் வர்ணிக்கவில்லையா?

சீலேகளைப்பற்றி பேசும்பொழுது இன்னுமோர் விஷ்யமும் ஞாபகத்திற்கு வருகிறது. நம்முடைய தமிழ்நாட்டுப் பெண்கள் நீண்டநாளாக அணிந்துவந்த முறை முற்றிலும் மாறிவிட்டது. அதனுல் பாதகமில்லே. பழையன கழிடலாம், புதியுன புகுதலாம். ஆனுல் பழையமுறை தவருக இருந்து புதியமுறை நல்லதாக இருந்தால்தானே? சற்று சிந்தித்துப் பார்த்தால் புதியமுறை நல்லதில்லே என்பது விளங்கும். புதியமுறையில் சீலேயைக் கொய்து கொப்பூழுக்கு நேரே திணித்து வைத்து உடுத்துகிருர்கள். அங்குதான் கர்ப்பப்பை இருக்கிறது. இவர்கள் பெருமடிப்பாகச் சுருட்டி அதன்மீது அழுத்தி உடுத்துவதால் அந்த உறுப்புக்கு தீமை உண்டாகுமல்லவா? இதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லே. சில வைத்திய நண்பர்களிடம் கூறினேன். அவர்களும் அதுசரிதான் என்று கூறுகிருர்கள். யாரோ இந்த முறையில் அணிவதுதான் அழகு என்று கூறிவிட்டார்கள் நம்முடைய பெண்கள் அதை நம்பிவிட்டார்கள். அதுசரியா, தவரு என்று யாரும் எண்ணிப்பார்க்கக்காணேம். இதையும் வாசகர்கள் சிந்திக்குமாறு வேண்டுகிறேன்.

பஸ்ஸில் உட்கார்ந்திருக்கும் பொழுது நான் பார்க்கும் விஷயம் மற்ருென்றும் உண்டு. அனேகமாக கல்லூரி மாணவிகளுடைய மேலிதழில் அழகாக மீசை அரும்பியிருப்பதாகும். பெண்களுக்கும் மீசை யிருப்பது அழகுதான் என்ருல் நான் அதை ஆட்சேபிக்க மாட்டேன். ஆண்களுக்கு இருப்பதுபோல் பெண்களுக்கும் இருக்கட்டுமே என்று சொல்லிவிடுவேன். ஆனுல் அந்தப் பெண்கள்கூட, பெண்களுக்கு மீசையா, அது கூடாது வேண்டாம் என்றே கூறுவார்கள். அப்படியானுல் மீசை அரும்புவதற்கு அவர்கள் இடம் தருவானேன்? நம்முடைய தாய்மார்க்கு அரும்

பாத மீசை இவர்கட்க்கு அரும்பக் காரணம் என்ன? பிற நாட்டுப் பெண்கள் அதிலும் முக்கியமாக வெள்ளைக் காரப் பெண்களைப் பார்த்தால் காரணம் விளங்கிவிடும். அவர்கள் முகத்தில் மஞ்சள் பூசுவதில்லை. பவுடரே பூசு கிறார்கள். அதுதான் காரணம். மஞ்சள் பூசினால் இதழில் உரோமம் உண்டாகமாட்டாது. ஆனால் நம் முடைய கல்லூரி மாணவிகள் நாகரீகம் அடைந்தவர்கள், பழைய பசலியான தங்கள் தாய்மார்போல் நம்நாட்டு மஞ்சளை உபயோகிக்கலாமா. நாகரீகம் முதிர்ந்த அயல் நாட்டுப் பவுடரையல்லவா உபயோகிக்க வேண்டும்? அப்படி அவர்கள் உபயோகிக்கும் பவுடரில் என்ன வஸ் துக்கள் சேர்ந்துள என்பதாவது அவர்களுக்குத் தெரியுமா, அதுவும் தெரியாது. அவர்களுக்கும் தெரியாது அதை உபயோகிக்குமாறு உபதேசம் செய்யும் டாக்டர்களுக்கும் தெரியாது. பவுடர் நல்லது நாகரீகமானது அதுபோதும் அவர்களுக்கு.

அது போதாது. நவநாகரிகம் மிகுந்ததாகக் கூறப்படும் அமரிக்க நாட்டில் வழங்கும் கிராம்டன் என்சைக்ளோ பீடியா என்னும் சிறந்த கலைக்களஞ்சியம் கூறுவதைக் கேளுங்கள்:

"பவுடர், கிரீம் முதலியவைகளைக்கொண்டு அழகை உண்டாக்கிவிடலாம் என்னும் மூட நம்பிக்கைக்குக் கார ணம் விளம்பரம் செய்வோருடைய சாமார்த்தியமேயாகும். முகத்திலிடும் பவுடர் எல்லாம் தானிய மாவினாலோ அல்லது கற்சட்டி மாவினாலோ செய்யப்பட்டதாகும். இப்படி உப யோகிக்கும் வஸ்துக்களில் சில விஷத்தன்மையுடையன வாகக்கூட இருக்கும். உண்மையான அழகு சுத்தத்தாலும் சுகத்தாலுமேதான் உண்டாகும்."

— ★ —

# 16. என் அதிர்ஷ்டம்

இங்கிலாந்து நாட்டில் சுமார் நானூறு ஆண்டுகட்கு முன்னர் எலிசபெத் என்னும் பெயருடைய அரசி ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். அவர் ஒருநாள் தேம்ஸ் நதியில் அலங்காரம் செய்து நின்று கொண்டிருந்த அழகான ஓடத்தில் போய் ஏற வேண்டியிருந்தது. அதற்காக அவர் தமது அரண்மனைப் பூங்கா வழியாக மந்திரிகள் பிரதானிகள் புடைசூழ நடந்து போனார். அவர் சென்ற வழியில் ஒரு இடத்தில் சிறிது சேறு காணப்பட்டது. அதில் கால் வைக்க அவர் தயங்கியபோது அவருடன் சென்று கொண்டிருந்தபிரபுக்களில்ஒருவர் ராலே என்பவர் அந்தக் கணமே தாம் அணிந்து கொண்டிருந்த வெல்வெட் அங்கியைக் கழற்றி அரசி நடந்துசெல்வதற்காகச் சேற்றின் மீது விரித்தார். அரசி மிகுந்த மகிழ்ச்சியுடன் அதன்மீது நடந்து சென்றார் என்று சொல்லுவார்கள்.

ஆனால் நான் அரசன் அல்லன். ஆயினும் எலிசபெத் அரசிக்கு வாய்த்தது எனக்கும் வாய்த்தது என்று கூறினால் வாசகர்கள் ஐயுறுவார்கள். ஆனால் உண்மையைத்தான் உரைக்கிறேன். அரசிக்கு ராலே பிரபு வெல்வெட் விரித்தார். எனக்கு இரண்டுஅழகிகள் பட்டும் சரிகையும் விரித்

தார்கள். அவ்வாறு எனக்குக் கிடைத்த பாக்கியத்தை வாசகர்கட்குக் கூறவிரும்பியே இதை எழுதுகின்றேன்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன் நான் பஸ்ஸில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அப்பொழுது வண்டியில் கூட்டம் அதிகம். அநேகர் நெருக்கமாக நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தினிடையே நானும்ஏறினேன். அப்பொழுது அங்கு வீற்றிருந்த இரண்டு யுவதிகள் "ஆகா திருகூடசுந்தரம் வருகிறுரே. அவருடைய பாத கமலங்கள் பஸ்ஸின் பலகையில் படலாமா? பட்டும் பட்டாடையும் விரிக்க வேண்டாமா" என்று எண்ணித் தங்கள் சீலேகளை நான் நின்று கொண்டிருப்பதற்காக விரித்து வைத்தார்கள். என்னே என் அதிர்ஷ்டம்! எலிசபெத் பெருமாட்டியின் அதிர்ஷ்டத்திலும் மேம்பட்டதன்ருே?

எலிசபெத் மகாராணியின் பாதம் பட்ட வெல்வெட் அங்கியை ராலேபிரபு என்ன செய்தார்? சலவை செய்தாரா அல்லது சேறு என்று எண்ணி உபயோகியாமல் எறிந்து விட்டாரா? அது ஒன்றும் நமக்குத் தெரியாது. ஆனால் இந்தப் பெண் ரத்னங்கள் திருகூடசுந்தரத்தின் பாத தூளி பெரும் பாக்கியம் பெற்றதாயினவே அந்தப் பாத தூளியை இழந்து விடலாமா என்று நினைத்து அவற்றைச் சலவை செய்ய மாட்டார்கள் என்பதும் அப்படியே மடித்துப் பெட்டியில் வைத்துக் கொள்வார்கள் என்பதும் நிச்சயம். இத்தகைய பாக்கியம் யாருக்கு வாய்க்கும்?

ஆயினும் எனக்கு ஒரு ஐயம். இவர்கள் என்பால் அன்புகொண்டு பட்டாடைகளை விரித்துப் பலகையில் பர

ளும்படி செய்திருந்தாலும் இவ்வாறு செய்வது சுகாதாரத்துக்கு முற்றிலும் முரண்பட்டதல்லவா என்பதே என் சந்தேகம்.

ஆனால் இந்த சுந்தரிகள் கல்லூரிமாணவிகள். வீட்டை விட்டு வெளியே செல்லாத பெண்களைவிட அறிவிற் சிறந்தவர்கள் என்று மதிக்கப் பெறுபவர்கள். அதனாலேயே பஸ்களில் போகிற ஆண்மக்கள் இத்தகையோரைக் கண்டு எழுந்து நின்று சேவகம் செய்கின்றனர். ஏனையோர் எத்துணை முதியோராயினும் ஏறெடுத்துக்கூடப் பார்க்காமல் இருந்து விடுகின்றனர்.

இவ்வளவு அறிவு வாய்ந்த பெண்மணிகள் சுகாதாரக் கேடானதும் சாதாரண பாமர மக்கள் செய்ய அருவருப்பதுமான இந்தச் செயலைக் களிப்புடன் செய்ய வேண்டுமானால் அதற்குத் தக்க, பொருத்தமான, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, சுகாதாரத்தினும் உயர்ந்த ஒரு காரணம் இருக்கவேண்டும். என் சிறிய மூளைக்குக் காரணம் இருக்கவேண்டும் என்பதுமட்டும் எட்டுகின்றதேயன்றி அந்தக் காரணம் யாது என்பது அணுவளவு கூட புலப்படவில்லை.

ஆயினும் நான் என் மூளையைச் சும்மா விட்டுவிடச் சம்மதிக்கவில்லை. நீ காரணத்தைக் கண்டுபிடிக்கத்தான் வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தேன். அது என்ன செய்யும்? சிறியதுதானே. ஆனாலும் அது முயன்று முயன்று இறுதியில் ஒரு காரணத்தைக் கண்டு பிடித்திருக்கிறது. அது சரியோ, தவறோ அறியேன். அதை வாசகர்கட்குச் சமர்ப்பிக்க மட்டும் செய்கின்றேன்.

அந்த யுவதிகளுக்கு தங்கள் சீலைகள் பஸ்ஸின் பலகையில் சிறிதளவே தொட்டாலும் அநாகரிகச் செயலே என்பது தெரியும். ஆனால் அவர்கள் கால்கள் உள்ள நிலைமையில் அவர்களால் வேறு என்ன செய்ய இயலும்?

கம்பர் முதலிய கவிஞர்கள் அழகான பெண்களை அநேகமாகப் பாத முதற்கொண்டே வர்ணிப்பது வழக்கம். அதனால்தான் நம் நாட்டில் அத்தகைய வர்ணனையை "பாதாதிகேச வர்ணனை" என்று கூறுவரேயன்றி கேசாதி பாத வர்ணனை என்று கூறுவதில்லை. அப்படி அழகான பெண்களின்பாதம் அவ்வாறு எடுத்தவுடனேயே சிந்திக்கும் படியான அழகு சொட்டுவதாக இருக்குமாம். அதுமட்டுமன்று. அக்காலத்தில் பெண்கள் தம்பாதங்களை மறைத்து வைப்பதில்லை என்றும் அறிகின்றோம். சூர்ப்பநகை சீதையின் பாதங்களை இராவணனிடம் வர்ணித்துக் கூறுகிறாளே, சீதையும் இக்கல்லூரி யுவதிகள் செய்வதுபோல் பாதங்களை மறைத்து வைத்திருந்தால் சூர்ப்பநகை வர்ணிக்க முடியாதல்லவா?

சூர்ப்பநகை ராவணனிடம் வந்து சீதையைப் பற்றிக் கூறுகிறாள். அவள் யார் எத்தகையவள் என்று அவன் கேட்கிறான். அதற்கு சூர்ப்பநகை

காமரை இருந்த தையலே
சேடியாம் தரமு மல்லள்
யாமுரை வழங்கும் என்பது
ஏழைமைப் பால தன்றே?

அண்ணு செந்தாமரையிலுள்ள திருமகள் கூடச் சீதைக்கு நிகராக மாட்டாள். அங்ஙனமிருக்க நான் அவளை எவ் வாறு வர்ணிக்க இயலும். ஆயினும் எனக்குத் தெரிந்த அளவு இயம்புகிறேன்.

மீஞ்சொக்கும் அளக ஓதி
 மழையெயாக்கும் வடித்த கூந்தல் ;
பஞ்சொக்கும் செய்ய
 பவளத்தின் விரல்கள், ஐய

அண்ணு அவளுடைய கூந்தல் கார்மேகம் போன்றது. அவ ளுடைய பாத விரல்கள் செம்பவளம் போன்றன—என்று கூறுகின்ருள்.

இவ்வாறு சூர்ப்பனகை சீதையின் பாதங்களை இரா வணனிடம் வர்ணித்துக்கூறுகிருளே, சீதையும் இக்கல்லூரி யுவதிகள் செய்வதுபோல் பாதங்களை மறைத்து வைத்திருந் தால் சூர்ப்பனகை வர்ணிக்க முடியாதல்லவா ?

சுக்கிரீவன் சீதா பிராட்டியைத் தேடும் பொருட்டு வானர வீரர்களை அனுப்பிய காலத்தில் இவள்தான் சீதை என்று அனுமன் அறிந்து கொள்வதற்கு அநுகூலமாக இராமன் அனுமானைத் தனியாக அழைத்துச் சீதையின் உருவத்தை வர்ணிக்கிருன்

அப்போது அவன் முதன் முதலாகச் சொல்லுவது சீதையின் பாதங்களைப் பற்றியே யாகும்.

பாற்கடல் பிறந்த செய்ய
 பவளத்தைப் பஞ்சி யூட்டி

மேற்பட மதியம் சூட்டி
விளங்குற நிரைத்த மெய்ய
கால்த்தகை விரல்கள் ஐய......

அப்பா அனுமா! சீதையினுடைய பாதங்கள் செம்பஞ்சு ஊட்டியிருக்கும். அதிலுள்ள விரல்களில் சந்திரர்கள் என்னும் நகை அணிந்திருக்கும் என்று இராமன் கூறுகிறான்.

இராமன் இவ்வாறு சீதையின் பாதங்களை வர்ணித்தாலும், சீதை தன்னுடைய பாதங்களை சீலையைக்கொண்டு மூடியிருந்தாளானால் அந்த வர்ணனை அனுமனுக்கு அணுவளவும் பயன்படாதன்றோ?

இங்ஙனம் நம் நாட்டுப் பெண்கள் தம் எழில் மிகுந்த பாதங்களை எல்லோரும் பார்க்குமாறு நடந்து கொண்டு வந்திருக்க, இக்காலத்துத் தமிழ் அரசிகள் மட்டும் இவ்வாறு நடந்து கொள்ளக் காரணம் யாது? அவர்களுடைய பாதங்கள் அழகாக இலவா? அல்லது அதில் நோயோ பழுதோ யாதேனும் ஏற்பட்டுளவா? எனக்கு ஒன்றும் விளங்குவதாயில்லை. என்னுடைய இந்த ஐயத்தைத் தீர்த்து வைக்குமாறு வாசகர்களை வேண்டுகின்றேன்.

—] ★ [—

# 17. பெண்கள் விரும்புவது எது ?

ஒரு காலத்தில் ஆங்கில நாட்டில் ஆர்தர் என்னும் பெயருடைய கீர்த்திமிகுந்த அரசர்ஆண்டுகொண்டிருந்தார். அக்காலத்தில் இப்பொழுது போல் அரசாங்க முறை நடைபெறவில்லை. நாடு முழுவதும் அரசர் ஆணை பரவி யிருக்கவில்லை. அக்கிரமங்கள் மலிந்திருந்தன. அங்கங்கே உடல் வலிமை மிகுந்த பிரபுக்கள் பலர் அக்கம் பக்கத்திலுள்ள ஏழை மக்களைக் கொள்ளையடித்தும், அவர்களுடையபெண்களைத் தூக்கிச் சென்றும் இன்னும் பல அட்டூழியங்கள் செய்தும் வந்தனர். மக்களுக்கு வீட்டில் வசிக்க அச்சம்; பாதைகளில் நடக்கப் பயம்; எப்பொழுதும் மனத்தில் திகில்.

சிஷ்ட பரிபாலனம், துஷ்ட நிக்கிரகம் அல்லவோ அரசர் கடமை? ஆனால் எந்த அரசனாலும் இந்தக் கொடுமைகளை ஒழிக்க இயலவில்லை. அப்பொழுது ஆண்டவன் அனுப்பியது போல் ஆர்தர் அரசர் வந்தார். அவர் அரியாசனத்தில் அமர்ந்ததும் இஷ்டம் போல் இன்னல் விளைத்து வந்த துஷ்டர்களை அடக்கி ஏழைகளைக் காக்க உறுதி செய்து கொண்டார். சாந்தியும் சமாதானமும் நிலவச் செய்வதே தமது முதற் கடமையாக எண்ணினர்.

ஆதலால் தமக்கு உற்ற துணையாகப் பல மெய் வீரர்களைச் சேர்த்துக் கொண்டார். அவர்களில் பிரபுக்களாய் இல்லாதவரைப் பிரபுக்களாக ஆக்கினர். அவர்கள் அனைவரும் ஏழைகளின் நலத்தை நாடுவதும், பெண்களின் கற்பைக் காப்பதுமே தங்கள் வாழ்வின் லட்சியமாக மதித்து வந்தனர். புகழே சுவர்க்க போகம்; இகழே நரக அனுபவம். என்பது அவர்கள் திடமான நம்பிக்கை இந்த உயர்ந்த லட்சியத்தைத் தேடுவதில் அவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யத் தயங்காதவர். ஆர்தர் மன்னரிடம் அளவிலா பக்தியுடையவர்.

இவர்களுடைய உதவியால், இவர்களுடைய வீர தீரச் செயலால் ஆர்தர் அரசர் நாளுக்கு நாள் அதிகமாக நாட்டில் காணப்பட்ட கொடியவர்களை அகற்றி வந்தார். மக்கள் அனைவரும், 'ஆர்தரால் ஆகாதது ஒன்றில்லை. அவர் நீதிக்கு உறைவிடம். கருணைக் கடல். நமக்கு ஒரு கண் கண்' என்று போற்றிப் புகழ்ந்து வந்தனர். அவருடைய புகழ்க் கதிர் ஆங்கில நாட்டில் மட்டுமின்றி, ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவி, அரசர்க்குரிய மெய்ப் புகழின் லட்சணம் இது என்று விளக்கி வந்தது.

அங்ஙனம் நடைபெற்ற காலத்தில், ஒரு நாள், அரச சபையில் அரசர் பெருமானும், அவருடைய பெருமாட்டியும், பிரபுக்களும், பிரபுக்கள் மனைவியாரும் ஆனந்தமாய் ஆடல் பாடல்களில் ஆழ்ந்திருந்தனர். அப்பொழுது திடீரென்று ஒரு கூக்குரல் — காதைப் பிளக்கும் அழுகைத் தொனி — கேட்டது. 'ஐயோ முறையோ ? அநீதியை ஒழிக்க அரசர் இல்லையோ ? என் கணவரை மீட்டிக்

கொடுக்க மன்னர் இல்லையோ?' என்று கதறி அழுது கொண்டு ஒரு பெண் அரசவை மண்டபத்திற்குள் நுழைந்தாள். மன்னர் விஷயத்தை விசாரித்தார்.

'நானும் என் கணவரும் ஓர் ஊருக்குப் போய்க்கொண்டிருந்தோம். வழியில் ஒரு கோட்டையிலிருந்து ஒரு முரடன் வந்து என் கணவரை இழுத்துப் போனான். நான் அழுது இரங்கினேன். ஆனால் அந்தப் பாதகன் மனம் இளகவில்லை. "ஏழைகளைக் காக்கிறாராமே ஆர்தர் இறைவர், அவரிடம் போய்ச் சொல். உன் கணவனை மீட்க முடியுமானால் மீட்கட்டும்!" என்று கூறி, என்னை வெளியே தள்ளிக் கதவைத் தாழிட்டு விட்டான். ஐயோ, எம்பெருமானே! எனக்கு அருள் செய்ய மாட்டீரா?' என்று விம்மி விம்மி அழுது கொண்டே அந்தப் பெண் கூறினாள்.

அரசர் மனத்தில் பெண்ணின் துயரம் கண்டு வருத்தமும், அக்கிரமச் செயல் கண்டு கோபமும் பொங்கி எழுந்தன. அந்தப் பெண்ணிடம், அம்மா, வருந்தாதே. இதோ நானே சென்று உன் கணவனை மீட்டு வருகிறேன். இங்கேயே என் அரசியுடன் இரு' என்று ஆறுதல் கூறி உடனே அந்த அரக்கனை அழித்துவரத் தன்னந்தனியாகக் குதிரையில் ஏறிப் புறப்பட்டு விட்டார். காடு வனாந்தரங்கள் கடந்து பெண் சொன்ன கோட்டை அருகில் வந்து சேர்ந்தார்.

அங்கு வந்ததும், 'அடே அரக்கா, யாரடா இங்கே? வெளியே வா? உன்னை விரைவில் எமனுலகம் அனுப்பட்டும், என்று இடி இடிப்பதுபோல் முழங்கினார். உண்மை

தான். எந்தப் பலசாலியும் அவருக்கு இணையாக மாட்டான் அவரை வென்றவர் இதுவரை யாருமிலர். அதனால் அவருடைய வாளும் 'ஜயசீலி' என்னும் பெயர் பெற்றிருந்தது.

அவருடைய சிங்கநாதம் முழங்கியதும் கோட்டை வாசல் திறந்தது. ஆனால், திறந்ததுதான் தாமதம். இதென்ன ஆச்சரியம்! ஜயசீலி தரையில் வீழ்ந்து விட்டது. அரசருக்கு ஓர் அடிக்கூட எடுத்து வைக்க இயலவில்லை. அசைவற்ற மரம்போல் நின்றார். கோட்டைக் குள்ளிருந்து அந்த முரடன் வந்தான். 'ஆர்தர் அரசரே! நீரா? வாரும் என்னுடன் சண்டை செய்ய விரும்புகிறீரா, நல்லது, புறப்படும். என் கோட்டைச் சிறைக்குள் உம் வீரர்களில் பலர் கிடக்கின்றனர். அவர்களுடன் சேர வாரும்!' என்று பரிகாசமாகப் பேச ஆரம்பித்தான்.

ஆர்தர் நெஞ்சில் கோபம் பொங்கி எழுந்தது. ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்? அவர் பலமெல்லாம் எவ்விதமாகவோ மாயமாக மறைந்து போய்விட்டதே. கையைக் கூடத் தூக்க முடியவில்லையே. யாதொன்றும் பேசாமல் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு வெட்கி நின்றார்.

'சரி, உம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் நீர் அரசர் ஆயிற்றே; அதனால் ஒன்று கூறுகிறேன்; கேளும். இன்னும் ஒரு வருஷ காலத்திற்குள் "பெண்கள் விரும்புவது எது?" என்னும் கேள்விக்கு விடை தெரிந்து வந்து கூறுவீராயின் இப்பொழுது உமக்கு உயிர்ப் பிச்சை தருகிறேன். என்ன சொல்கிறீர்?' என்று அந்த அரக்கன் முழங்கினான்.

அரக்கனைத் தொலைக்க இயலவில்லை. அரச நீதி செய்ய முடியவில்லை. அந்தப் பெண்ணுக்கு அளித்து வந்த வாக்கு நிறைவேற்றப் பெறவில்லை. இப்பொழுது இவனிடம் உயிரையும் தானமாகப் பெற வேண்டியிருக்கிறதே. என் செய்வார்? அவர் மனம் பட்ட பாடு ஆண்டவனே அறிவார். ஆனால் உயிர் யாருக்கும் இனியதோர் பொருளன்றோ? அதனால் அந்தத் துன்மார்க்கனுடைய நிபந்தனையை ஏற்றுக் கொண்டார். 'சரி, போய்வாரும்' என்று கூறிவிட்டு அவன் கோட்டைக்குள் போய்க் கதவை மூடினான். உடனே அரசருக்குப் பழைய பலம் எல்லாம் பறந்தோடி வந்து விட்டது. ஆனால் நிபந்தனையை நிறைவேற்றுவது எப்படி? தாம் தீர்த்த யாத்திரை செய்ய விரும்புவதாகவும், ஒரு வருஷம் கழிந்ததும் வந்து சேர்வதாகவும் வழியில் கண்ட ஒருவனிடம் கூறித் தம் ராணிக்குச் செய்தி அனுப்பிவிட்டு, அரக்கனுடைய கேள்விக்கு விடை தேட ஆரம்பித்தார். அதற்காக நாடெங்கும் அலைந்தார். வழியில் கண்ட பெண்களிடமெல்லாம் அந்தக் கேள்வியைக் கேட்டார். அவர்கள் தத்தம் மனம் போல் பதில் கூறி வந்தார்கள். ஒருவர் ஆபரணம் என்றார். 'அழகும் அறிவுமே நாங்கள் வேண்டி நிற்பது' என்றனர் சிலர். சிலபேர், 'புத்திர சம்பத்தே எங்கள் லட்சியம்' என்று கூறினர். இங்ஙனம் அவர்கள் விடைகள் பலவிதமாயிருந்தன, ஆர்தர் மன்னருக்கு உண்மையாகச் சரியான விடை. எது என்று புலனாகவில்லை.

வருஷமும் முடியப் போகின்றது நாளை ஒரு நாளே மிச்சம். அரசர் என்ன செய்வார்? இன்னும் விடை கண்டு பிடிக்கவில்லை. தம் வாக்குப்படி நாளை அரக்கனிடம்

போய்த் தம் உயிரை அவ்னிடம் ஒப்புவிக்க வேண்டியதே. ஒன்றும் தோன்ருதவராய், கவலை நிறைந்தவராய் உள்ளம் சோர்ந்தவராய், எமலோகம் செல்பவராய் அவர் தம் குதிரையில் ஏறி அரக்கன் உறைவிடம் நோக்கி மெதுவாய்ப் போய்க் கொண்டிருந்தார்.

காட்டு வழியாகப் போக நேர்ந்தது. அங்கே ஒரு பாறையின் மேல்ஒருகிழவி உட்கார்ந்திருந்தாள். தொங்கு சதை, திரைத்த உடல், கூனிய முதுகு, குழிந்த கண்கள், முதிர்ந்த முதுமை, விகார ரூபம்! அவள் சிரித்துக் கொண்டே, 'ஐயா, ஆர்தரே! பெண்கள் விரும்புவது எது என்று தெரிய வேண்டுமா ? வாரும் இங்கே சொல்லுகிறேன்!' என்று கூறிக் கூப்பிட்டாள். ஆர்தர் நிமிர்ந்து பார்த்தார். 'பெயர் சொல்லி அழைக்கிருள், நம் நோக்கத்தையும் அறிந்து விட்டாள். இவள் ஒரு மந்திரவாதியோ ?' என்று எண்ணினார். 'ஆனாலும் கேட்போம், என்ன சொல்லுகிருள் என்று பார்ப்போம்' என்று அவள் அருகில் போனர்.

"சரி, விடை கூறினல் என்ன வெகுமதி அளிப்பீர் ? உம்முடைய அரச சபையிலுள்ள அழகிய வீரர்களில் ஒருவர்க்கு என்னை மணஞ்செய்து தருவதாக வாக்களித்தால் உமக்கு விடை கற்றுக் கொடுக்கிறேன்' என்று அவள் பொக்கை வாயால் கூறினள்.

இவளையாவது, இளம் வீரருக்கு மணம் செய்து தருவதாவது! இது இயலக்கூடிய காரியமா ? ஆனல் விடை தெரியாவிடில் இன்னும் ஒரு நாளில் உயிர் இழக்க வேண்டுமே அதனல் முன் பின் யோசியாமல் ஆர்தர், 'அப்படியே செய்

வேன்; விடையைக் கூறு' என்று சொன்னார். உடனே அந்த 'மஞ்மகள்' ஆனந்த சாகரத்தில் மூழ்கியவளாய், 'இது தெரியாதா? தங்கள் இஷ்டம்போல் நடப்பதுதான் பெண்கள் விருப்பம்' என்று கூறினாள்.

ஆர்தர் மன்னர் அரக்கன் கோட்டைக்குப் போனார். அரக்கன் வெளியே வந்தான். என்ன, விடை தெரியுமா: அல்லது சிறை வேண்டுமா? என்று புளனமாகக் கேட்டான். உடனே அரசர் கிழவி கூறித்தந்த விடையைக் கூறினார். இதைக் கேட்டதும் அவன் ஏதோ மந்திரவாதி கூறிக் கொடுத்திருக்கிறான் என்று அலறிக் கொண்டே கோட்டைக்குள் போய்விட்டான்.

ஆர்தர் தமது அரண்மனைக்குத் திருப்பி வந்ததும், அரசியும் பிறரும் அளவிலாத ஆனந்தம் அடைந்தனர். விருந்துகளும், களியாட்டங்களும், விநோதங்களும் நடைபெற்றன. 'ஆர்தர் வந்துவிட்டார்! ஆர்தர் வந்துவிட்டார்!' என்ற செய்தி நாடெங்கும் பரவி மக்களுக்கு மகிழ்ச்சியும் தைரியமும் அளித்தது.

ஆனால் ஆர்தர் மனத்தில் மட்டும் சந்தோஷம் அறவளவும் இல்லை. தம் ஆருயிர் காத்துத்தந்த அந்தக் கிழவிக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமே! ஆனால் அது எப்படிச் சாத்தியமாகும்? எந்த வீரன் அவளைத் தன் காதலியாக ஏற்றுக்கொள்வான்? என்ன செய்வது என்று விளங்கவில்லை. எப்பொழுதும் இதுவே அவருக்குக் கவலை.

ஒரு நாள் ஏகாந்தமாய் இருந்த சமயத்தில் அவருடைய தங்கை குமாரர் ஸர் கவைன் என்னும் வீர சிகாமணி

வந்து, அரசரிடம் மெதுவாகவும் வெகு விநயமாகவும், 'அரசர் பெருமானுக்கு ஏற்பட்டுள்ள கவலை யாதோ? அதை நீக்குவதில் அடியேன் உயிரையும் பொருட்படுத்த மாட்டேன்' என்று அடி பணிந்து கேட்டார். இம் மொழிகளை அலட்சியம் செய்ய அரசர் விரும்பவில்லை. நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் சொன்னார். அந்த அருவருக்கத் தகுந்த கிழவியை எந்தவீரன் மணக்கச் சம்மதிப்பான்? என்று சோர்ந்து கூறினார். ஆனால் உடனே ஸர் கவைன், 'இதோ நான்,' என்று சொன்னார்.

அரசர் மறுநாள் வேட்டைக்குச் செல்வதாகக் கூறித் தம் வீரர்களுடன் காட்டுக்குப் புறப்பட்டார். முன்னணியில் சென்ற வீரர் காட்டில் நுழைந்ததும் அந்தக் கிழவியைக் கண்டனர். அவளைப்பரிகாசம் செய்துகொண்டிருந்தனர். அவளும் அழ ஆரம்பித்துவிட்டாள். இதற்குள் அரசர் அங்கு வந்தார். 'ஏளனம் செய்யாதீர்கள்! இவளை உங்களில் ஒருவருக்கு மணம் செய்து தர எனக்கு ஆசை. யார் இவளை மணப்பவர்?' என்று கேட்டார். எல்லோரும் முகத்தைச் சுளித்துக்கொண்டு வேறு பக்கம் திரும்பவே, ஸர் கவைன் மட்டும் முன்வந்து, 'நான் மணந்துகொள்கிறேன்' என்று கூறி அவளைத் தம் குதிரையில் ஏற்றிக் கொண்டார்.

மறுநாள் விவாக மகோத்ஸவம் வெகு கோலாகலமாக நடந்தது. ஆர்தரே மணமகன் தோழன். அரசியே அந்த மணமகளின் தோழி. இரவு வெகு சிறப்பான ஆடம்பர விருந்து. அது முடிந்ததும் மணமகன் தனது அறைக்குச் சென்றார். நண்பர்கள் ஸர் கவைனைக் கேலி செய்தார்கள். ஆனால் அவர் அதை எள்ளளவும் பொருட்படுத்தவில்லை.

'அரசர் உறுதிமொழியைக் காத்து அளித்துவிட்டோம். அதுபோதும்' என்று எண்ணினர்.

சிறிது நேரம் சென்றதும், அவர் தம் மனைவியைப் பார்க்க அவள் அறைக்கு வந்தார். ஆனால் இது என்ன விந்தை? ஆம், விந்தையிலும் விந்தை! கிழவியைக் காணேர். அதோ நிற்பது அரம்பை போன்ற அழகிய கன்னிகையல்லவா? வாசற்படியிலேயே பிரமித்து நின்று விட்டார். இதைக் கண்டதும் அந்தச் சுந்தரி, 'உங்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனல் விஷயம் இது, நான் ஒரு மந்திரவாதியின் சாபத்தினலே கிழவியானேன், தாங்கள் தைரியமாய் என்னை மணக்க முன்வந்தது அந்தச் சாபத்தில் பாதியை வென்றுவிட்டது. இனிப் பாதி நேரம் குமரியாகவும் பாதி நேரம் கிழவியாகவும் இருக்க இயலும். குமரியாக இருப்பது இரவிலா பகலிலா? எது தங்கள் விருப்பம்?' என்று கேட்டாள்.

இது கடினமான கேள்வியல்லவா? யோசித்து யோசித்துப் பார்த்தார் கவைன். ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை. கடைசியாக அவர், 'என்னைவிட நீயே அறிவு மிகுந்தவள், உன் இஷ்டம்போல் செய்' என்று கூறினர். உடனே அப்பெண்ணரசி, 'சாபம் முற்றிலும் தொலைந்துவிட்டது. இனி எப்பொழுதும் இப்படியே இருப்பேன்' என்றாள். அவருக்கு உண்டான ஆனந்தத்திற்கு எல்லையிருக்குமோ? பெண்கள் விரும்புவது எது? அதையே அந்த மங்கை அடைந்துவிட்டாள் அல்லவா?

—[ ★ ]—

# 18. சிறியது எது?

நாம் உலகத்தில் சில பொருள்களைச் சிறியன என்றும் சில பொருள்களைப்பெரியன என்றும் கூறுகின்றோம். அத்துடன் சில பொருள்களைச் சிறியன என்று எண்ணி அலட்சியம் செய்யவும் செய்கின்றோம். ஆனால் அப்படிச் செய்யலாமா? அலட்சியம் செய்யக்கூடிய அளவு சிறியதாக உள்ளது ஏதேனும் உண்டா?

விஞ்ஞான சாஸ்திரங்களுக்கெல்லாம் அஸ்திவாரமாக இருப்பது கணிதம். அதில், ஒன்றுதான் சகல எண்களிலும் சிறியதாகும். அதைவிடச் சிறியது கிடையாது. அது கூட இல்லாத ஒரு எண் உண்டு. அதைப் பூஜ்யம் என்று கூறுவோம். ஆனால் அந்த ஒன்றும் பூஜ்யமும் தாம் நிற்கும் இடத்தைப் பொறுத்துச் சிறியதாகவும் ஆகிவிடுகின்றன, பெரியதாகவும் ஆகிவிடுகின்றன. ஒன்று என்பது ஒன்று தான். ஆனால் அதை அடுத்து ஒரு பூஜ்யத்தைச் சேர்த்து விட்டால் உடனே அந்த ஒன்றுடன் ஒன்பது சேர்ந்து பத்து ஆகிவிடுகிறது. அதை அடுத்து மற்றொரு பூஜ்யத்தைச் சேர்த்தால் உடனே ஒரு ஒன்பதன்று, பத்து ஒன்பது வந்து சேர்ந்து கொள்கின்றன. நூறாகப் பெருகிவிடுகிறது.

எண்களைவிட்டுப் பொருள்களைக் கவனித்தால் அண்டம் தான் பெரியது. அணுவைத்தான் சிறியது என்று கூறுவார்.

ஆனால் அவ்வளவு பெரிய அண்டத்தையும் அணுவைக் கொண்டு அழித்துவிடலாம். அவ்வளவு ஆற்றல் உடையது அணு என்பதை 1945-ம் ஆண்டு கண்கூடாக ஜப்பான் தேசத்தில் கண்டோம்.

ஆனால் அணுவை நாம் கண்ணால் பார்த்ததில்லை. சாதாரண மக்களுக்கு அதைக்கொண்டு எதுவும் செய்யத் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்த பெரிய பொருள்களில் ஒன்று நம்முடைய திருவிழாக்களில் ஊர்வலம் வரும் தேராகும். அந்தத் தேரின் அச்சாணியைப் பார்த்தால் அது ஒரு முழநீளமுள்ள சிறு கம்பிதான். ஆனால் அந்த அச்சாணி இல்லையானால் தேரின் கதி என்ன ? அது ஓடுமா ? சாய்ந்து தான் போகும்.

அச்சாணிகூட ஒரு பெரிய பொருள்தான். சாதாரண மாக நாம் அற்பம் என்பதைக் குறிக்க உபயோகிக்கும் தூசி எவ்வளவு சிறியது ? அது நம்முடைய கண்ணில் விழுந்துவிட்டால் நம்மை அது என்ன பாடுபடுத்திவிடு கிறது?

இவை எல்லாம் உயிரில்லாத வஸ்துக்கள். உயிருள்ள வைகளில் தரையில் சஞ்சரிக்கும் யானையும் தண்ணீரில் வசிக்கும் திமிங்கிலமுமே பெரியன. யானை மரங்களை முறித்துச் சாய்த்து விடும் ஆற்றல் உடையது. திமிங்கிலம் கப்பலை அடித்துத் தாழ்த்திவிடக்கூடிய பலம்பொருந்தியது. ஆனால் ஜீவராசிகளில் மிகச் சிறியவை கிருமிகள் என்று

சொல்லப்படுபவைகளே. அவைகளைக் கண்ணால் பார்க்க முடியாது. அவைகளை வரிசையாக அணி வகுத்து நிறுத்தி ஞல் ஒரு இஞ்சு தூரத்துக்குள் 25 ஆயிரம் கிருமிகளை நிறுத்த முடியும். அவ்வளவு சிறியவை! ஆனால் அவற்றில் ஒன்று போதும், யானையையோ சிங்கத்தையோ கொன்றுவிட.

ஸ்தூலமான பொருள்களை விட்டு சூக்ஷ்மமான சக்தி களைப் பார்த்தால் அவற்றின் அற்புதம் அதி ஆச்சரிய மாகத் தோன்றுகிறது. நெருப்புப் பொறி மிகச் சிறியது தான். ஆயினும் அதுவே பெரிய நகரங்களைக்கூட அழித்து விடக்கூடிய பலம் பொருந்தியதாக இருப்பதை எல்லோரும் அறிவோம்.

இடி முழங்குகிறது; மின்னல் பளிச்சென்று வீசுகி றது. அடுத்த நிமிஷம் பார்த்தால் அரண்மனை போன்ற பெரிய கட்டடங்கள்கூட இடிந்து தகர்ந்து கிடக்கின்றன.

நாம் பேசுகிறோம்; பிரசங்கம் புரிகிறோம். ஆயினும் பல சமயங்களில் ஒரே ஒரு மொழியே எத்தனையோ உபன்யா சங்களுக்குச் சமமாக வேலை செய்து விடுகிறது. நம்முடைய சுயராஜ்ய மாளிகையை நிர்மாணித்தது "வந்தே மாதரம்" என்னும் மொழிதானே? அதன் சிகரமாக நின்று ஆங்கில ஆட்சியை அடியோடு அகற்றியது "ஜே ஹிந்த்" என்னும் சிறு சொற்றொடரே அல்லவா?

பேசக்கூட வேண்டாம். கையைக் காட்டினால்போதும். சகல உபதேசங்களும் அடங்கிவிடும் என்று நமது இந்து மத நூல்கள் தக்ஷிணாமூர்த்தியைக் காட்டுவதையும் நாம் அறிவோம்.

அவ்வளவு தூரம் போகவேண்டாம், நாம் மனவேதனையுடன் இருக்கும்பொழுது நம் வீட்டுச் சிறு குழந்தை சிரித்துக்கொண்டு வருகிறது. அதைக் கண்டதும் அந்த முல்லைச் சிரிப்பிலேயே மயங்கி விடுகின்றோம். மனோ வேதனையெல்லாம் மாயமாக மறைந்து போகிறது.

ஆகவே, உலகில் எதை நாம் அற்பம் என்று எண்ணி அலட்சியம் செய்வது ? ரோமாபுரியில் முன்னாளில் கீர்த்தி பெற்ற சிற்பி ஒருவர் இருந்தார். அவர் ஒரு அழகான சிலை செய்து முடித்தார். அதை நகரிலுள்ள பல பெரிய சிற்பப் புலவர்கள் வந்து பார்த்து அச்சிலைபோல் யாரும் அவ்வளவு அழகாய்ச் செய்ய முடியாது என்று கூறிப் புகழ்ந்து விட்டுப் போனார்கள்.

மறு நாள் காலையில் மேற்படி சிற்பியின் நண்பர் ஒருவர் அவர் வீட்டுக்கு வந்தார். வேலைக்காரன் தன்னுடைய எஜமானர் சிலை செய்யும் அறையில் இருப்பதாகச் சொன்னான். அந்த நண்பருக்கு ஆச்சரியம் பிறந்தது. "என்ன, சிலை செய்து முடித்தாய்விட்டது. அதில் செய்யவேண்டிய வேலை யாதுமில்லையே. அங்ஙனமிருக்க சிற்பி அதிகாலையில் சிற்றுளியுடன் சிலையறையிலிருக்கக் காரணம் யாது? ஒரு வேளை புதிதாக வேறோர் சிலை வகுக்கப் புறப்பட்டு விட்டாரோ" என்று எண்ணிக்கொண்டு சிலையறைக்குச் சென்றார்.

ஆனால் என்ன ஆச்சரியம் ! சிற்பி வேறு சிலை எதுவும் செய்யவில்லை. நேற்றுச் செய்து முடித்த சிலையிலேயே ஏதோ சிறிது செதுக்கிக்கொண்டிருந்தார். உடனே நண்பர் அவரிடம் போய் "இன்னும் யாது செய்கிறீர் ? சிலைதான்

முற்றுப் பெற்றுவிட்டதே? பூரணமாய் முடிந்த பின் புதிதாய்ச் செய்யவேண்டியது யாது?" என்று வியந்து வினவினார்.

அதற்கு அந்தச் சிற்பி 'அப்படியில்லை. சிலையில் ஒரு இடத்தில் சிறிது செதுக்க வேண்டியிருக்கிறது. செதுக்கினால்தான் நல்லது என்று செதுக்கிக் கொண்டிருக்கிறேன்' என்று மறுமொழி தந்து தாம் செய்யும் வேலையின் தன்மையை விளக்கவும் செய்தார்.

ஆனால் அவர் செய்யும் வேலை மிக அற்பமானது. அது செய்து தீரவேண்டுமென்பதில்லை. அந்தச் சிறு வேலை செய்யாததால் அழகு கொஞ்சமும் குன்றிவிடாது. அச்சிறு வேலையினால் அது பூரணமடையும் என்பதுமில்லை என்று நண்பர் நினைத்தார். நினைத்ததைச் சிற்பியிடம் கூறவும் செய்தார்.

அப்பொழுது சிற்பி கூறிய பதில் மொழிகள் பொன் போல் போற்றத் தக்கன. அவ்விதமே மேனாட்டுப் பேரறிஞர்கள் அனைவரும் போற்றி வருகின்றனர். போற்றி வருவதோடு அம் மணிமொழிகளின்படியே நடந்தும் வருகின்றனர்.

"சிறியதென்று ஒன்றும் இல்லை; சிறியவைகளின் தொகுதியே பூரணம்" என்பனவே அச்சிற்பி கூறிய மொழிகள். இம் மணிமொழிகளை நாமும் மறவாமல் நடத்தல் மிக மிக அவசியம் அல்லவா?

—] ★ [—

# 19. வெற்றி யாருக்கு?

ஒவ்வொரு தினமும் உலகத்தில் பல மாறுதல்கள் காணப்படுகின்றன. ஒரு தேசமும் இன்று இருப்பது போல் நாளை இருப்பதில்லை. நாமும் நேற்று இருந்தது போல் இன்று இருக்கக் காணோம். நாளுக்கு நாள் விசேஷ வேறுபாடுகள் தோன்றுமானால், பல வருஷங்களை - நூற்றாண்டுகளை - இடையிட்டுப் பார்ப்போமானால், வித்தியாசம் அபரிமிதமாகும். மனிதனுடைய அறிவு அடிஅடியாய்நகர்ந்து போவதில்லை. வாயு வேகமாகக் கூடச் செல்வதில்லை. வாயுவுங்கூட ஓர் இடத்தினின்று மற்றோர் இடத்தை அடைய நேரமாகிவிடும். மனோவேகத்துடனேயே மக்கள் அறிவு வளர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அது நிற்பதுமில்லை, சோர்வதுமில்லை. அதனாலேயே இமைத்து மூடு முன் மாறுதல்களும் ஏற்படுகின்றன.

தற்காலத்தில் நாகரிக உலகத்தின் சிகரமாக விளங்குவது ஆங்கில நாடு என்று எல்லோரும் கூறுவர். பௌதிகம் ரஸாயனம் போன்ற விஞ்ஞான சாஸ்திரங்கள் ஒவ்வொரு நாளும் நவ நவமாய்க் கண்டு பிடித்து வரும் உண்மைகளும் அவற்றின் பலனாய் அமைந்து வரும் அநுபவங்களும் அநேகம். தந்திக் கம்பி மூலம் பேசினோம்; இப்பொழுது கம்பியில்லாமலே பேசுகிறோம், நாளைக் காணவுந்

செய்வோம். இன்று ஆகாயத்தில் விமானத்திலே பிரயாணம் செய்கிறோம். நாளை அதுவும் இல்லாமல், வேறு உதவியால், நினைத்தமாத்திரத்தில் எண்ணிய இடம் எய்துவோம். இவ்வாறு சகல நாகரிக வசதிகளும் ஒன்று பலவாய் உற்பத்தியாகின்றன. இங்கிலாந்து தேசத்தில் இப்பொழுது இவ்வசதிகள் எல்லாம் நிறைந்திருக்கின்றன.

ஆனால், இருநூறு வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து இப்பொழுது நமது தரித்திர நாடு உள்ளதைவிட மிகக் கேவலமான நிலையிலேயே இருந்தது. அப்பொழுது அங்கே வண்டியெல்லாம் 'கோச்' என்ற சாதாரணக் குதிரை வண்டியே. கல் போட்டுத் தார் பூசிய ரஸ்தாவை ஜனங்கள் கனவிலும் அறியார். மண்ணைப் பரப்பிய சாலைகளே மலிந்திருந்தன. மழைகாலத்தில் அவை பயன்படா. சேற்றில் இறங்கியே செல்ல வேண்டும். சில சமயங்களில் பாதையின் நடுவில் ஜலம் தேங்கிவிடும். அப்பொழுது ஜனங்கள் தெருக்களின் ஓரமாக அதிகச் சேறும் நீரும் இல்லாத பாகங்களிலேயே ஒதுங்கிப் போவர். அவ்விதம் தெரு ஓரமாகப் போகும் பொழுது எதிரே வயோதிகர், பாலர், பெண்கள் ஆகியோர் வரக்கண்டால், அவர்கட்கு அந்த நல்ல பாதையை விட்டு விட்டு ஆடவர் தாங்கள் சேற்றில் இறங்கி நடப்பர். மழைக் காலத்தில் நடப்பதற்கு ஏற்ற வழிகள் வீட்டுச் சுவர்ப் பக்கமாக இருந்தமையால், பிறர்க்காக நல்ல பாகத்தை விட்டு விலகி நடப்பதை ஆங்கிலத்தில் பிறர்க்குச் 'சுவர்தருதல்' என்று கூறுவது மரபு.

இப்பழக்கம் நிலைபெற்றிருந்த அந்தப் பழைய காலத்தில் அங்கே செஸ்டர்பீல்டு என்னும் திருநாமத்தை

யுடைய ஒரு பிரபு இருந்தார். ஆங்கில நூற் கல்வி அற்பமாக அடைந்தவரும் அவர் பெயரை அறிவர். அக்காலத்தில் பிரபுக்கள் வெறும் செல்வர் மாத்திரம் அல்லர், சிற்றரசர் போலவே செல்வத்தில் திளைத்தும், செல்வாக்கில் மிகுந்தும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மிகப் பழமையான கீர்த்தி பெற்ற பெரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களில் சிலர் பேரறிஞர்களாகவும், சிலர் மதி மந்திரிகளாகவும், சிலர் அசகாய சூரர்களாகவும் விளங்கிவந்தனர். அத்தகைய அறிஞர் கோஷ்டியில் சேர்ந்த பிரபுக்களில் ஒருவர் செஸ்டர்பீல்டு.

செஸ்டர்பீல்டு எழுதியுள்ள நூல்களில் இதுகாறும் இறந்து படாமல் இங்கிலாந்தில் எல்லோருடைய இல்லங்களிலும் இருந்து இதோபதேசம் செய்துகொண்டிருப்பது 'செஸ்டர்பீல்டு மகனுக்கு வரைந்த கடிதங்கள்' என்னும் பெயருடையதாகும். இக்கடிதங்கள் எவரும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய தெளிவான நடையில் எழுதப் பெற்றன. இவற்றில் விவரிக்கப்படும் விஷயங்கள் பல. படிப்போருக்கு இவை அறிவைப் பெருக்கும், உற்சாகம் ஊட்டும்; நம்பிக்கை நல்கும்.

கார் காலத்தில் ஒரு நாள் ஆசிரியர் செஸ்டர்பீல்டு சேறு நிறைந்த ஒரு தெருவின் ஓரமாகப் போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது எதிரில் வேறொருவர் அதே ஓரமாகவே நடந்து வந்து கொண்டிருந்தார். அவர் இளைஞர், வெகு முறுக்கான தோற்றமுடையவர். பிரபுவின் சமீபம் வந்ததும் அவர் விலகவில்லை. 'ஓய், எனக்குச் சுவர் கொடுப்பது வழக்கமில்லை' என்று கோபமாகக் கூறி இரைந்தார்.

அப்பொழுது செஸ்டர்பீல்டு, 'ஆனால், அது எனக்கு வழக்கம்' என்று கூறி உடனே விலகிக்கொண்டார்.

# 20. ஆண் அழகா? பெண் அழகா?

இந்தக் கேள்வியைப் பல நண்பர்களிடம் கேட்டேன். யாரிடத்தில் கேட்டாலும் அவர்கள் சிரிக்கின்றார்கள். அதன் பொருள் யாது? இதுகூடத் தெரியாதவர்கள் உலகில் உண்டோ? 'யானை பார்க்க வெள்ளெழுத்தா?' என்பதே யாகும்.

ஆகவே, ஆண்களிடம் கேட்டால் அவர்கள், இதிலென்ன சந்தேகம். பெண்கள்தான் அழகு. இதை எல்லோரும் அறிவார்களே, என்று கூறுகிறார்கள்.

பெண்களிடம் கேட்டால் அவர்களும், நாங்கள்தான் அழகு. இன்னும் உங்களுக்கு இது தெரியவில்லையா, என்று கேட்கிறார்கள்.

ஆகவே, ஆண்கள் பெண்கள் எல்லோரும் ஏக மாகப் பெண்ணையே அழகு என்று கூறுகிறார்கள். ஆயினும், அவர்கள் கூறுவது சரிதானா?

இந்தச் சந்தேகத்தை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று யோசித்தேன். அழகு விஷயங்களில் அதிகமாக ஈடுபடுகிறவர்களிடத்தில் கேட்டால்தான்

தெரியும் என்று முடிவு செய்தேன். அழகில் ஈடுபடுகிறவர்கள் கவிஞர்கள்தாம் என்பதில் சந்தேகமில்லை அதனால் அவர்களிடமே கேட்கலானேன்.

முதலில் திருவள்ளுவரிடம் கேட்டேன். தலைவன் தலைவியைப் பார்க்கிறான். தலைவி தலைவனைப் பார்க்கிறாள். இருவருடைய கண்களும் நோக்கு ஒக்கின்றன. வதுவை செய்து கொள்கின்றனர். அதனால் கவிஞர் ஆணும் அழகு பெண்ணும் அழகு என்று கூறுவதாகத் தோன்றும்.

ஆனால் காதலன் பெண்ணின் அழகை

"முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு."

என்று பலபட வர்ணிக்கின்றானே தவிர, காதலி ஆணின் அழகை வர்ணிக்கக் காணோம். ஆதலால் தலைவன் தலைவியின் அழகில் ஈடுபட்டுக் காதல் செய்ய ஆரம்பிக்கின்றான் என்பதில் சந்தேகமில்லை. அப்படியானால் பெண் எதற்காகக் காதலிக்கின்றாள்? காதலனுடைய அழகைக் கண்டா? அதைப்பற்றி யாதொன்றும் வள்ளுவர் கூறவில்லை. அப்படிக் கூறாததால் அவளுடைய காதலுக்கு அவனுடைய அழகு காரணமன்று; வேறு ஏதோதான் காரணம் என்று எண்ணவேண்டியதாக இருக்கின்றது. சாதாரணமாக, 'ஆண்கள் அழகை விரும்புவார்கள், பெண்கள் வீரத்தை விரும்புவார்கள்' என்று கூறுவார்கள். அதுதான் காரணமோ திருக்குறளில் காணப்படும் இந்த வித்தியாசத்திற்கு?

அடுத்ததாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பரிடம் கேட்டேன். அவர் ராமனை "அந்தமில் அழகன்" என்றும் சீதையை

"வரம்பில் பேரழகினள்" என்றும் கூறுகின்றார். அத்துடன்,

"நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம்வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கு மன்னதே,"

என்று கூறவும் செய்கிறார். அதனால் அவர் ஆண் பெண் இருவரும் சரிசமமான அழகுடையவர்கள் என்று எண்ணுவதாகவே தோன்றும்.

ஆனால் அவர் ராமனைத்தான் பாதாதிகேச பரியந்தம் உறுப்பு உறுப்பாக வர்ணிக்கிறார். அப்படி வர்ணித்ததோடு நிற்காமல் அந்த வர்ணனை அடங்கிய பாகத்தை வேறு பெயரிட்டழைக்காமல் "சுந்தர காண்டம்" என்று அழைக்கவும் செய்கிறார். இதை நோக்கும்போது கம்பர் சீதையை விட ராமனையே அதிக அழகுடையவனாகக் கருதுகின்றார் என்று தோன்றும்.

ஆனால் உண்மை அதுவாகக்காணோம். ராமனைப்போல் சீதையை விரிவாக வர்ணிக்காதபோதிலும் அவளையே அதிகமான அழகுடையவள் என்று கூறுவதாகவே தோன்றுகிறது.

வர்ணிக்கக் கூடிய அழகாயிருந்தால்தானே வர்ணிப்பார்

"ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து
அவயமமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லால்
மதனற்கும் எழுத ஒண்ணா"

அழகுடையவளை எப்படி வர்ணிக்க முடியும்? அதனால் "அழகு இவளைத் தவம் செய்து பெற்றதுகாண்" என்று ஒரேமொழியில் கூறி நம்முடைய கற்பனைக்கு விட்டு விடுகிறார்.

அது மட்டுமா? சீதையைக் காண்பதற்கு ஆண்களுக்குத் தான் ஆயிரம் கண்கள் வேண்டும் என்பதில்லை. பெண்களுக்குங்கூட வேண்டியதே என்று சூர்ப்பனகை கூறுகின்ருள்:—

"பண்புற நெடிது நோக்கிப்
படைக்குநர் சிறுமையல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை
யில்லையாம் என்று நின்ருள்
கண்பற பொருளிற் செல்லாக்
கருத்தெனில் அஃதே. கண்ட
பெண்பிறந் தேனுக் கென்ருல் என்படும்
பிறருக் கென்ருல்."

ஆகவே, கம்பரும் பெண்ணையே அழகு என்று கூறுவதாகத் தெரிகிறது.

இவர்கள் இருவரும் பழம் புலவர்கள். இக்காலத்து நவீன கவிஞரைக் கேட்போம் என்று எண்ணினேன். பாரதியாரைக் கேட்டேன். அவரும் பாஞ்சாலியின் அழகை வர்ணிக்கிருரே தவிர, பாண்டவரின் அழகை வர்ணிக்கக் காணும். அதுபோலவே கண்ணனுகிய காதலன் அழகை வர்ணியாமல் கண்ணனுகிய காதலியின் அழகைத்தான் வர்ணிக்கிருர். இறுதியில்,

"மலரினில் நீலவானில்
மாதரார் முகத்தி லெல்லாம்
இலகிய அழகை ஈசன்
இயற்றினன்."

என்று முடிவு கட்டுகின்றார். ஆகவே அழகில் ஈடுபடும் கவிஞர்கள் பெண்ணையே அழகு என்று ஏகமனதாகக் கூறுகிறார்கள்.

ஆனால் எனக்குச் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. ஆண் பெண்ணைப் பார்க்கும்பொழுதும், பெண் ஆணைப் பார்க்கும்பொழுதும் உணர்ச்சி உண்டாகின்றது. உணர்ச்சி வயப்பட்டால் உண்மையைக் காண முடியாது.

அனுமன் தான் ராமனை வர்ணிக்கின்றான். ஆயினும் அவனும்பக்தி என்னும் உணர்ச்சி ததும்பி நிற்பவனாகவே காணப்படுகின்றான். அதனால் உணர்ச்சியை விட்டுவிட்டுக் காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்ந்தாலே உண்மை விளங்கும்.

நாம் இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கிறோம். அப்பொழுது அவற்றின் அழகில்மட்டும் ஈடுபட்டிருக்கிறோமே யன்றி நமக்குஅப்பொழுது வேறு எவ்விதமான உணர்ச்சியும் கிடையாது. அப்பொழுது எது அழகாயிருக்குமோ அதைத்தான் அழகானதுஎன்று கூறுவோம். பிற உணர்ச்சிகள் ஏற்பட்டால்தான் நம்முடைய அழகுணர்ச்சி மழுங்கிப் போகும். அப்பொழுது அழகில்லாததையும் அழகானதாகச் சொல்ல ஆரம்பித்து விடுவோம்.

கோழிகளைப் பாருங்கள். அவற்றில் சேவல் அழகா? பெட்டைக் கோழி அழகா? முட்டை விற்பனையில் ஆசையிருந்தால்தான் பெட்டைக்கோழியை விரும்புவோமேயன்றி அழகை மட்டும்அநுபவிக்க விரும்பினால், சேவலைத்தான் பார்ப்போம்; அதைத்தான் அழகு என்று கூறுவோம்.

சிறுகுழந்தைகளுக்குக் கோழிகளைப் பார்க்கும்பொழுது அழகுணர்ச்சியைத்தவிர வேறுஉணர்ச்சி கிடையாது. இன்னும் அவர்களுக்கு முட்டையைப்பற்றிய ஆசை உண்டாகவில்லை. அதனால் குழந்தைகளிடம் எது அழகு, சேவலா? பெட்டைக்-கோழியா? என்று கேட்டால் "அப்பா சேவல்தான் அழகு, அதன் கொண்டையைப் பார், எவ்வளவு அழகாயிருக்கிறது" என்று கூறும்.

அப்படியே சகல ஜீவராசிகளையும் ஆராய்ந்தால் ஆண்தான் அழகாக இருக்கக் காண்போம். சாதாரணமாக நம்முடைய வீடுகளில் சற்றும் பயமின்றி வந்து கூடுகள் கட்டுகின்றனவே சிட்டுக்குருவிகள். அவற்றுள் எது அழகு...... ஆணா, பெண்ணா? பெண் ஒரே தவிட்டுநிறம். பெண்குருவியைச் சிறிய பெட்டைக் கோழி என்றும் பெட்டைக் கோழியைப் பெரிய குருவி என்றும் கூறிவிடலாம். இப்படி அழகற்ற தன்மையில் இரண்டும் சமானமாக இருப்பதைக் காணலாம். ஆனால் ஆண் குருவியோ நிறத்திலும் வேறு. கழுத்தில்காணப்படும் வெண்மை கருமையிலும்வேறு. ஆண் குருவியைத்தான் அழகு என்று எல்லோரும் கூறுகிறார்கள்.

மயில் பார்த்திருக்கிறோம். அதில் எது அழகு? அரை நிமிஷம் கூடக் காத்திருக்க வேண்டாம். உடனே பதில் வந்து விடும் ஆண் தான் என்று. அதில் சந்தேகமே கிடையாது. ஆண்தான் அழகு. பெண் அழகேயில்லை என்று கூடக் கூறி விடலாம். இரண்டிற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள தூரமுண்டு.

பட்சிகள் வேண்டாம். மிருகங்களைப் பார்த்தாலும் ஆண்தான் அழகு என்ற உண்மை விளங்கும். நம்மோடு

தினந்தோறும் பழகும் மாட்டைப் பார்ப்போம். காளை தான் அழகு. வண்டியிலும் ஏரிலும் பூட்டும் காளைகளைக் கூற வில்லை. கோயிற் காளைகள் தான் உண்மையான காளைகள். அவைகளைப் பார்த்தால்போதும், என் கூற்றின் உண்மை விளங்கும்.

காட்டிலிருந்து கொண்டுவந்துள்ள யானையைப் பார்த் தாலும் சிம்மத்தைப் பார்த்தாலும் ஆண் அழகு என்பதே உறுதியாகும். மானில் எது அழகு? கலைமான்தான். அத னல் தானே அதன் கொம்பை நாம் நம்முடைய வீட்டில் அணி பொருளாக உபயோகித்து வருகின்றோம்.

ஆகவே இயற்கையானது, ஆண் அழகா பெண் அழகா என்னும் கேள்விக்குக் கவிஞர்களைப் போலவும் மற்றவர் களைப் போலவும் விடை யிறுக்காமல் வேறு விதமாகவே இருக்கின்றது. அப்படி மற்ற ஜீவ சிருஷ்டிகளில் ஆணே அழகாயிருந்தால் மக்களிடையே மட்டும் பெண் அழகா யிருக்க வேண்டிய காரணம் என்ன?

இந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்வதற்கு ஏற்ற வர்கள் மக்கள் அல்லர். பிற ஜீவ சிருஷ்டிகளே, நாம் அவற்றைப் பார்த்து அழகுணர்ச்சியின் காரணமாக அவற் றுள் ஆண்தான் அழகு என்று கூறுகின்றோம். அதேபோல் அவைகளிடம் மக்களைப்பற்றிக் கேட்டால் அவைகளும் ஆணே அழகு என்று கூறுமேயன்றிப் பெண்ணைஅழகு என்று கூறு. ஆண் மகன்தான் மீசை தாடி முதலியவற் ரேடு கம்பீரமாகத் தோன்றுகிறன். அதனலேயே அவ னைக் "காளை" என்றும் "சிம்மம்" என்றும் கூறுகிறர்கள்.

சீதைதேவியும் இராமபிரானேடு காட்டிலிருந்தபோது

"போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்."

ஆதலால் எந்த ஜீவராசியிடம் கேட்டாலும் மக்களில் ஆணைத்தான் அழகு என்று கூறும்.

அப்படியானால் நாம் மட்டும் பெண்ணை அழகென்று கூறுவானேன்? மற்ற ஜீவராசிகளுக்குள்ள அறிவு நமக்குக் கிடையாதோ? அதுவன்று விஷயம். சேவலிடம் ஆண் மகன் அழகா, பெண் மகள் அழகா என்று கேட்டால் ஆண்மகனையே அழகு என்று கூறும். அதேபோல் சகல ஜீவராசிகளும் ஆணையே அழகாக மதிக்கும். ஆயினும் அதே சேவலிடம் கோழிகளில் எது அழகு என்று கேட்டால் பெட்டைக் கோழிதான், அதில் என்ன சந்தேகம், அதன் நிறத்தைப்பார், இந்தப் பழுப்பு நிறத்துக்கு இணை வேறுண்டோ, அதன் நடையைப்பார். அன்னத்தின் நடையை மெச்சுகிறீர்களே, அன்னமும் எங்கள் ஜாதி தானே, அதுவும் இவளிடம் தானே நடக்கக் கற்றுக் கொண்டது, அதன் மூக்கைப்பார்.

"மூக்கொக்கும் பொன்னென்றாலும்
வாக்கொக்கும் பொருள் ஒவ்வாவால்
வழுத்தலாம் உவமை உண்டோ?"

என்று தன் காதலியின் அழகை வர்ணிக்க ஆரம்பித்து விடும். அழகுத் தெய்வத்தின் வடிவமும் பெட்டைக்கோழி தான் என்று கூடச் சாதிக்கும்.

அப்படியே தான் சகல ஜீவராசிகளும் தத்தம் இனத்தில் பெண்ணையும் மற்ற இனங்களில் ஆணையும் அழகாகக்

கூறும். அதே மாதிரிதான் நம்மிலும்ஆண்கள் பெண்களையே அழகாகக் கூறுகின்றோம்.

இப்படித் தம் இனத்தில் பெண்ணையும் பிற இனத்தில் ஆணையும் அழகாகக் கூறுவதன் காரணம் யாது? காதல் உணர்ச்சி பெண்ணை அழகாகக் கருதுகின்றது. இதுதான் உண்மையான விஷயம்.

அப்படியானால் பெண்களும் பெண்களையே அழகாகக் கூறுவானேன்? அதற்குக் காரணம் ஆண்கள் அவ்விதமான எண்ணத்தை ஆயிரக் கணக்கான வருஷங்களாகக் கூறிக் கூறி அவர்களிடம் உறையும்படி செய்துவிட்டதுதான். சுத்தமான அறிவுடன் ஆராய்ந்தால் ஆணும் சரி, பெண்ணும் சரி, ஆணைத்தான் அழகாக எண்ணுவார்கள்.

மக்களில் ஆணும் பெண்ணும் பெண்ணையே அழகுடையவளாகக் கூறிய போதிலும் தினசரி வாழ்க்கையில் நாம் நம்மையறியாமலே ஆணைத்தான் அழகாகக் கருதி நடந்து வருகின்றோம். ஆணுக்கு அழகு செய்கின்றோமா. பெண்ணுக்கு அழகு செய்கின்றோமா ?

ஆண் அழகு நிறைந்திருப்பதால் ஆணை விடப் பெண்ணையே அழகாக ஆடை ஆபரணங்களைக் கொண்டு அலங்காரம் செய்கிறார்கள்.

ஆணுக்கு அலங்காரம் செய்ய வேண்டியதில்லை. யாரே அழகுக்கழகு செய்வார். இயற்கை தந்த அழகுச் சின்னங்களை யெல்லாம் நாம் நீக்கி விட்ட இந்தக் காலத்திலும் கூட ஆண்கள் அலங்காரம் செய்யாவிட்டாலும் அழகாகவே தோன்றுகிறார்கள்.

அதனால் தான் கவிஞர்கள் எல்லோரும் "பெண்" என்று குறிப்பிடும் பொழுதெல்லாம் பெண் என்று கூறாமல் நேரிழை—ஏந்திழை—அணியிழை—பூமாண் குழலாள்—மருவொன்று கூந்தலாள்—மாம்பழக் கணி—என்றே கூறுகிறார்கள். ஆனால் ஆணையோ வீரன் என்றோ அறிஞன் என்றோதான் கூறுகிறார்கள்.

கணவனும் மனைவியும் ஒன்றாகச் சேர்ந்து வெளியே போகும்போது பாருங்கள். கணவன் தலையை வாரிவிட்டிருக்கிறான், வெள்ளை வேஷ்டி வெள்ளைச் சட்டை, முடிந்தது அவனுடைய அலங்காரம். ஆனால் அவனுடைய மனைவிக்கு எத்தனை அலங்காரங்கள். ஆடையில் எத்தனை நிறங்கள். அணியில் எத்தனை விதங்கள். சந்திரன் போன்ற முகமாச்சே, கன்னத்தில் பௌடர் பூசுவதும் நெற்றியில் பொட்டு இடுவதும் உதட்டில் சாயம் தீட்டுவதும் எதற்கு ? உறுப்பு உறுப்பாக நகைகளைத் தொங்க விடுவானேன் ? இப்படிக் கணவன் அலங்காரம் செய்யாமல் மனைவிமட்டும் அலங்காரம் செய்வதன் ரகசியம் யாது ? ஆணுக்கு இயற்கை அழகிருப்பதும் பெண்ணுக்கு அது இல்லாததும் தான். இதனால்தான் வேதநாயகம் பிள்ளை

"இடையில் மயக்குவது சாலியன் சேலை
இருகாதில் சொலிப்பது தட்டான் கைவேலை
கடையிலே விற்பது கொண்டைப் பூமாலை
கன்னிக்குச் சொந்தமெல்லாம் வெறுந் தோலே"

என்று பாடியிருக்கிறார்.

இந்த மாதிரி இயற்கை பெண்ணைவிட ஆணையே அழகாகச் சிருஷ்டித்திருப்பதற்குக் காரணம் யாது ? இயற்

கைக்குப் பெண்ணிடம் வெறுப்போ அன்புக் குறைவோ கிடையாது. அதற்குப் பதிலாக அவளிடம்தான் அதிகமான அன்பு. அவளைக் கொண்டுதான் உலகத்தை அழியாமல் நடத்த வேண்டியிருக்கிறது. அதனால் பெண் சாதாரணமான பிள்ளையைப் பெற்றுவிடக் கூடாது. சிறந்த அழகும் ஆற்றலும் உள்ள குழந்தைகளையே பெற வேண்டும். அதனால் பெண்ணானவள் பல ஆண்களைப் பார்த்து அவர்களுள் தன்னுடைய கணவனைக இருந்து தலை சிறந்த குழந்தையைப் பெறக்கூடிய பேரழகனையே தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகவே பழைய காலத்தில் சுயம்வரம் என்பது ஏற்பட்டதாகும். இந்த மாதிரியான சுயம்வரம் இப்பொழுது பட்சிகளிடமும் மிருகங்களிடமும் நடப்பதைக் காணலாம்.

ஆகவே உண்மையில் ஆண்தான் அழகு.

—★—

# பொ. திருகூடசுந்தரம்

எழுதிய நூல்கள்

## காந்தி நிலைய வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை | | 3 | 4 |
| 2. குழந்தை எப்படிப் பிறக்கிறது? | | 1 | 12 |
| 3. கேள்வியும் பதிலும் | | 3 | 0 |
| 4. அப்பாவும் மகனும் | | 3 | 0 |
| 5. ஜவஹர் கதை | | 1 | 0 |
| 6. மந்தரை சூழ்ச்சி | | 0 | 4 |
| 7. சைவ உணவு எது ? | | 0 | 8 |
| 8. விஞ்ஞானப் பெரியார்கள் | | 3 | 8 |
| 9. ஆங்கிலக் கவிதை மகன்லர் | | 1 | 12 |
| 10. இதய உணர்ச்சி | | 1 | 0 |
| 11. விஞ்ஞானம் எதற்கு ? | | 1 | 12 |
| 12. அறிவுக் கனிகள் | | 3 | 0 |
| 13. அமுத மொழிகள் | | 3 | 0 |
| 14. பாஞ்சாலி சபதம் | | 1 | 12 |
| 15. தந்தையும் மகளும் | | 3 | 0 |
| 16. அண்ணனும் தங்கையும் | | 3 | 0 |
| 17. தாசியின் காதல் | | 2 | 4 |
| 18. கொக்கோக விளக்கம் | சாதா | 5 | 0 |
| | பரிசு | 6 | 0 |

பிற நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 19. போரும் காதலும் | 10 | 0 |
| 20. சத்யாக்கிரகம் | 1 | 12 |
| 21. பொழுது புலர்ந்தது | 4 | 0 |

